# சி.வை. தாமோதரம் பிள்ளை

பதிப்பாசிரியர்

பேரா முனைவர் கரு.அழ. குணசேகரன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# சி.வை. தாமோதரம்பிள்ளை

பதிப்பாசிரியர்

பேரா. முனைவர் கரு.அழ. குணசேகரன்


உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

இரண்டாவது முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப்
பயிலக வளாகம், தரமணி, சென்னை - 600 113

திங்கள் (தொடர்) ஆய்வுக் கருத்தரங்கம்
தமிழறிஞர் வரிசை 2; எண் 2 கருத்தரங்க நாள் : 30-09-2004

# BIBLIOGRAPHICAL DATA



| | | |
|---|---|---|
| Title of the Book | : | Ci.Vai. Tāmōtarampiḷḷai |
| Editor | : | Dr. K.A. Gunasekaran<br>Director<br>International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus<br>Chennai - 600 113. |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus<br>Chennai - 600 113. Ph: 22542992 |
| Publication No. | : | 606 |
| Language | : | Tamil |
| Edition | : | First Edition |
| Year of Publication | : | 2008 |
| Paper Used | : | 18.6 Kg. TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type Used | : | 10 points |
| No. of Pages | : | viii + 136 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 40/- (Rupees Forty only) |
| Printing | : | United Bind Graphics<br>101-D, Royapettah High Road, Ch - 4 |
| Subject | : | Biographical Sketches & Critical Studies on Dhamodharam Pillai |



கட்டுரையாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பன்று

பேரா. முனைவர் கரு.அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

# அணிந்துரை

தமிழில் முதன் முதலில் ஒலிப்புகள் தோன்றினவா? அல்லது வரைவுக் குறியீடுகள் தோன்றினவா?

இவ்வாறு ஆராய்ந்து பார்க்கும் ஆய்வு அதிகம் தோன்றவில்லை. ஒலிப்பும் வரைவும் இணையாகவே தோற்றம் பெற்றிருக்கலாம்.

ஒலிப்பு மொழி முதலில் தோன்றியிருந்தால் தமிழ்ப் படைப்புகள் வாய்மொழியாகவே பலகாலம் இருந்திருக்க வேண்டும்.

வரைவு மொழி முதலில் தோன்றியிருந்தால் தமிழ்ப் படைப்புகள் எழுதப்பட்டு வழக்கில் இருந்து வந்திருக்க வேண்டும்.

இன்றைய நிலையிலும் எழுத்து மொழியும் பேச்சு மொழியும் வேறுபட்டிருப்பது காணக்கிடக்கின்றது.

தமிழ்ப் படைப்புகள் ஏடுகளில் எழுதப்பெற்று நீண்ட காலம் பாதுகாக்கப் பெற்றிருக்க வேண்டும்.

ஒலிப்பு மொழியில் இருப்பனவற்றை நீண்ட காலம் பாதுகாக்க வியலாது என்பதால் தமிழர் எழுத்து மொழியில் தம் மொழிப் படைப்புகளைப் பாதுகாத்திருக்கலாம்.

பாதுகாத்தல் என்பது காலந்தோறும் அவற்றைப் பதிப்பித்தலுமாம்.

பழையன கழிதலும், புதியன புகுதலும் தமிழ் ஏடுகளுக்கும் பொருந்தும்.

அவ்வாறான பழைய, புதிய ஏடுகளைக் கண்டறிந்து அச்சு ஊடகங்களில் அச்சடித்துப் பல தமிழறிஞர்கள் வெளியிட்டனர்.

அவர்களுள் பதிப்புலக முன்னோடியாக விளங்கியவர் சி.வை. தாமோதரம் பிள்ளை ஆவார்.

அலுவலகப் பணியுடனே தமிழ்ப்பதிப்புப் பணியையும் செய்தவர்களுள் இவரும் குறிப்பிடத்தக்கவர்.

இத்தகைய பதிப்பு முன்னோடியின் வாழ்வையும் அவர் தம் பணிகளையும் பல்வேறு தலைப்புகளில் பல கட்டுரைகளில் இந்நூல் ஆராய்ந்துள்ளது.

தமிழர்களின் அளப்பரிய தமிழ்ப் பணிகளைப் பாராட்டும் விதமாகத் திங்கள் தோறும் தொடர் கருத்தரங்குகளை இந்நிறுவனம் ஏற்படுத்தியது.

இது தமிழறிஞர் வரிசைக் கருத்தரங்கம் என அழைக்கப்பெற்றது. முதல் சுற்றுத் தமிழறிஞர் வரிசைக் கருத்தரங்கம் 16 தமிழறிஞர்களோடு நிறைவு பெற்றது.

இதைத் தொடர்ந்து இரண்டாம் சுற்றுத் தமிழறிஞர் வரிசைக் கருத்தரங்கம் இந்நிறுவனத்தில் ஏற்படுத்தப்பெற்றது. இதில் 16 தமிழறிஞர்கள் அடையாளம் காணப்பெற்றனர்.

இத்தமிழறிஞர்களின் தமிழ்ப் பங்களிப்புகளை வரும், வளரும் தலைமுறையினர்க்கு அளிக்கும் கடமையாக இத்தமிழறிஞர்கள் ஆராயப்பெற்றனர்.

பதிப்பு முன்னோடியான சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களின் பன்முகப் பங்களிப்புகளை எட்டுப்பேர் தனித்தனிக் கட்டுரைகளில் வெளிப்படுத்தியுள்ளனர். இவர்கள் பங்கேற்ற கருத்தரங்கம் இந்நிறுவனத்தில் 30.09.2004 பிற்பகலில் நடந்தது. இக்கட்டுரையாளர்களுக்கு என் பாராட்டுகள்.

> அறிஞர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் தாய்மொழியாம் தமிழுக்கு அருந்தொண்டு ஆற்றியுள்ளனர். 'பழந்தமிழ் இலக்கியங்களை ஓலைச்சுவடிகளிலிருந்து நூல் வடிவம் ஆக்கியவர்' என்ற அளவில் அனைவரின் உதடுகளும் ஒலிக்கக் கூடிய வார்த்தைகள் 'தமிழ்த் தாத்தா' என்று போற்றப் படும் டாக்டர் உ.வே.சா. அவர்களே. ஆனால் அவருக்கும் முன்பாகவே ஓலைச்சுவடிகளிலிருந்து பண்டை இலக்கிய, இலக்கணங்களைக் கண்டெடுத்து, சரிபார்த்து, திருத்தம் செய்து, பதிப்பித்த பெருமை 'பதிப்புத் துறையின் முன்னோடி' என்று புகழ்ந்துரைக்கப்படும் 'இராவ்பகதூர் சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களையே' குறிக்கும்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையையும் காட்டிவரும் **நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர்** அவர்களுக்கு என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

தமிழரின் முன்னேற்றத்திற்கும் தமிழரின் உயர்வுக்கும் பாடுபட்டு வரும் **தமிழக நிதியமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்** அவர்களுக்கும் என் நன்றி.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் **தமிழ் வளர்ச்சி, அறநிலையம், செய்தி மற்றும் விளம்பரத் துறை அரசுச் செயலாளர் திரு க. முத்துச்சாமி இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

இத்தமிழறிஞர் வரிசைக் கருத்தரங்கத்தை இந்நிறுவனத்தில் நடத்திய மேனாள் இயக்குநர் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்களும், கருத்தரங்கக் கட்டுரைகளை நூலாக்கம் செய்ய ஏற்பாடுகளைச் செய்த மேனாள் இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு) முனைவர் ம. இராசேந்திரன் அவர்களும், கருத்தரங்கப் பொறுப்பாளர் திரு. த. பூமிநாகநாதனும் பாராட்டுக்குரியவர்கள்.

கருத்தரங்க ஏற்பாடுகளைச் செய்த நிறுவனப் பணியாளர்களும், கட்டுரைகளைப் பதிப்பித்து மெய்ப்பும் திருத்திய முனைவர் ஆ. தசரதனும், கணியச்சிட்ட திரு. ஸ். கோபிநாத்தும் அழகுற அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தாரும் பாராட்டுக்குரியவர்கள்.

**இயக்குநர்**

# கட்டுரையாளர்கள்

1. முனைவர் பே. ஞானசேகரன், இணைப்பேராசிரியர், இராமசாமி தமிழ்க் கல்லூரி, காரைக்குடி - 630 003.

2. முனைவர் வேல். கார்த்திகேயன், தமிழ் விரைவுரையாளர், சிந்திக் கல்லூரி, சென்னை - 600 007.

3. சோ.பெ. ஜெயந்திகலா, முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

4. அண. செல்வகணபதி, தமிழ் விரிவுரையாளர், முத்தாயம்மாள் கலை & அறிவியல் கல்லூரி, இராசிபுரம்.

5. ச.வே. சுப்பிரமணியன், தமிழூர் அடைக்கலப்பட்டணம் அஞ்சல், நெல்லை மாவட்டம்.

6. நா. ரேணுகா, முனைவர் பட்ட ஆய்வாளர், அண்ணா பொதுவாழ்வியல் மையம், சென்னைப் பல்கலைக்கழகம்.

7. ம. இளையராஜா, விரிவுரையாளர் - தமிழ்த்துறை, அ.வ.அ. தன்னாட்சிக் கல்லூரி, மன்னன் பந்தல், மயிலாடுதுறை.

8. முனைவர் தி. மகாலட்சுமி, ஆராய்ச்சி உதவியாளர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். தரமணி, சென்னை - 600 113.

# பொருளடக்கம்


1. வாழ்வும் பணியும் 1
   - *முனைவர் பே. ஞானசேகரன்*
2. வாழ்க்கை வரலாறும் தமிழ்ப் பணியும் 16
   - *முனைவர் வேல். கார்த்திகேயன்*
3. தமிழ் வளர்த்த தாமோதரனார் 31
   - *சோ.பெ. ஜெயந்தி கலா*
4. கல்விப் பணியும் தமிழ்ப் பணியும் 46
   - *அண. செல்வகணபதி*
5. தொல்காப்பியப் பதிப்புகள் 54
   - *ச.வே. சுப்பிரமணியன்*
6. பதிப்பு முன்னுரைகள் 81
   - *நா. ரேணுகா*
7. தமிழ்ப் பதிப்புலகின் முன்னோடி 95
   - *ம. இளையராஜா*
8. கலித்தொகைப் பதிப்பு 103
   - *முனைவர் தி. மகாலட்சுமி*

# வாழ்வும் பணியும்

அறிஞர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் தாய்மொழியாம் தமிழுக்கு அருந்தொண்டு ஆற்றியுள்ளனர். ‘பழந்தமிழ் இலக்கியங்களை ஓலைச்சுவடிகளிலிருந்து நூல் வடிவம் ஆக்கியவர்’ என்ற அளவில் அனைவரின் உதடுகளும் ஒலிக்கக் கூடிய வார்த்தைகள் ‘தமிழ்த் தாத்தா’ என்று போற்றப் படும் டாக்டர் உ.வே.சா. அவர்களே. ஆனால் அவருக்கும் முன்பாகவே ஓலைச்சுவடிகளிலிருந்து பண்டை இலக்கிய, இலக்கணங்களைக் கண்டெடுத்து, சரிபார்த்து, திருத்தம் செய்து, பதிப்பித்த பெருமை ‘பதிப்புத் துறையின் முன்னோடி’ என்று புகழ்ந்துரைக்கப்படும் ‘இராவ்பகதூர் சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களையே’ குறிக்கும். அத்தகைய பெருமகனாரின் வாழ்வும் பணியும் குறித்து இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

### பிறப்பும் படிப்பும்

இலங்கையில் உள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிறுபிட்டி என்னும் ஊரில் 12-9-1832இல் வைரவநாதபிள்ளை - பெருந்தேவி அம்மாள் ஆகிய இருவருக்கும் தாமோதரம்பிள்ளை மகனாகப் பிறந்தார். இளவயதில் வட்டுக்கோட்டையில் உள்ள பள்ளியில் தொடக்கக் கல்வியைக் கற்றார். பன்னிரண்டு வயது வரை தமிழின் சில இலக்கிய, இலக்கண நூல்களைத் தனது தந்தையாரிடமே தாமோதரம்பிள்ளை பயின்றார்.

பின்னர் உயர்ந்த இலக்கிய, இலக்கண நூல்களை எல்லாம் சுன்னாகம் முத்துக்குமாரக் கவிராயரிடம் ஐயந்திரிபறக் கற்றார். ஆறுமுக நாவலருடன் ஏற்பட்ட தொடர்பாலும் தாமோதரம் பிள்ளையின் தமிழறிவு மிகச் சிறந்து விளங்கியது. ‘அமெரிக்க மிசன்’ பள்ளிக்கூடத்தில் சேர்ந்து ஆங்கிலக் கல்வியும் படித்தார். பிறகு புகழ்பெற்ற யாழ்ப்பாணத்தில் உள்ள ‘செமினரி’ என வழங்கப்பட்ட சாத்திரக் கலாசாலையில் கணிதம், அறிவியல் ஆகிய பிற பாடங்களையும் ஆர்வமாய்க் கற்றார்.

தாமோதரம்பிள்ளை 1857ஆம் ஆண்டு சென்னைக்கு வந்தார். இந்தியாவின் இன்றியமையா மூன்று பல்கலைக் கழகங்களில் ஒன்றாக விளங்கும் சென்னைப் பல்கலைக்கழகம் அப்போது தான் தொடங்கப்பெற்றது. அதில் முதன்முதலாகத் தொடங்கப்பெற்ற பி.ஏ., பட்டப்படிப்பில் சேர்ந்து, சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதல் மூத்த பட்டதாரிகள் மூவரில் தானும் ஒருவராக வெற்றி பெற்றார். மாநிலத்தின் முதல் மாணவராகச் சிறந்தார். பின்னர் 1871ஆம் ஆண்டில் வழக்கறிஞருக்குரிய பி.எல். பட்டமும் பெற்றார்.

### பார்த்த பணிகள்

உலக வாழ்வில் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் தனக்குப் பிடித்த ஏதாவதொரு தொழிலைச் செய்து அதன் மூலம் வாழ்க்கையை நடத்துவதை அனைவரின் வாழ்க்கையிலும் காணலாம். பாரதியார் கூட 'நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற் குழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல்' என அவர் மேற்கொண்ட தொழில்களைக் குறிப்பிடுவார்.

சி.வை. தாமோதரம்பிள்ளை ஒரு பல்கலை வித்தகர். அவர் பல்வேறு பணிகளையும் எடுத்துக் கொண்டு, அவைகளில் தன் முத்திரை பதியும்படித் திறம்படச் செய்துள்ளார். 69 ஆண்டுகள் வரை இம்மண்ணுலகில் வாழ்ந்த அவர் 11 வகையான பணிகளை மிகச் சிறப்பாக ஆற்றியுள்ளார். அவர் பார்த்த அப்பணிகள் வருமாறு:

1. கோப்பாய் ஆசிரியர் கல்லூரியில் (சக்தி வித்தியாசாலை) ஆசிரியப் பணி - 1853.
2. கள்ளிக்கோட்டை அரசினர் கல்லூரித் தலைமை ஆசிரியர் பணி - 1857.
3. இதழாசிரியர் பணி.
4. ஆங்கிலேயர் பலருக்குத் தமிழ் கற்றுக்கொடுக்கும் பணி.
5. சென்னை அரசினர் மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியர் பணி.
6. குடந்தையில் வழக்கறிஞர் பணி - 1871.
7. புதுக்கோட்டை நீதிமன்ற நீதிபதிப் பணி - 1884.
8. புதுக்கோட்டை சமத்தானத்தின் திவான் பணி.
9. நூல் படைப்புப் பணி.
10. நூல் பதிப்புப் பணி.
11. சென்னை அரசியல் வரவு - செலவுக் கணக்கு நிலையத் தலைவர் பணி.

இங்ஙனம் அவர் மேற்கொண்ட பதினொரு பணிகளிலும் அவருக்கு அளவு கடந்த ஆர்வமும், உயிர்த்தொண்டாகவும், சொந்தப் பணியாகவும் இருந்தது நூல் பதிப்பிக்கும் பணிதான்.

**பதிப்பிக்கும் பணியிலே உள்ள பல்வேறு இன்னல்கள்**

இன்று நாம் எளிதாகப் பழந்தமிழ் இலக்கிய, இலக்கண நூல்களைப் படிப்பதற்குப் பெரிதும் துணைபுரிந்தவர்கள் அக்காலத்தில் பல்வேறு இன்னல்களுக்கும், இடர்ப்பாடுகளுக்கும் இடையே அரிதின் முயன்று, கடுமையாக உழைத்து, ஓலைச் சுவடிகளிலிருந்தவற்றை நூல்வடிவில் பதிப்பித்தவர்கள் தாம். அவர்தம் ஆர்வமும், முயற்சியும், உழைப்பும் இல்லாமல் போயிருந்தால் தமிழில் பல நூல்கள் கிடைக்காது போயிருக்கும்.

பண்டைய ஓலைச்சுவடியிலிருந்து இன்றைய நூலாக ஆக்கும் வரையில் உள்ள பல்வேறு இடர்ப்பாடுகளை,

> *"ஓலைகள் கெட்டுச் சிதைந்த நிலையில், பிரித்த வுடன் பொலபொல என்று உதிர்ந்து கொட்டும். கட்டை அவிழ்க்கும் போது கட்டு கயிறோடு பிய்த்துக் கொண்டு வரும் நூல் ஏடுகள் பல. ஏட்டைப் புரட்டினால் நுனிகள் ஒடிந்து கீழே உதிரும். ஒட்டிக் கொண்டுள்ள இரண்டு ஏடுகளைப் பிரிக்க முயன்றால் இரண்டும் கிழிந்து போகும். இத்தனை அவதிகளையும் பட்டு, நூலை முறைப்படுத்திப் பார்க்கும் போது பக்க எண்கள் இல்லாமையால், ஏடு முன்னும் பின்னுமாக இருக்கும். ஒரு பக்கத்தில் அல்லது ஓலையின் கடைசி எழுத்தை வைத்துக் கொண்டு அடுத்த ஓலையின் முதல் எழுத்தையும் வைத்துக் கொண்டு இதற்கடுத்தது இதுதானா என்று ஆராய்ந்து உறுதிகொண்டு இணைக்க வேண்டும். சிலமுறை தவறான இணைப்பை ஏற்படுத்தி விட்டால் அவற்றை மறுபடியும் ஆரம்பம் முதல் ஆய்ந்து வரிசைப்படுத்தும்படி ஆகிவிடும்"*

என்று முக்தா சீனிவாசனும் (பதிப்புத் துறை மூதறிஞர் தாமோதரம் பிள்ளை, இணையற்ற சாதனையாளர்கள், மூன்றாம் பாகம், ப. 164).

> *"ஏதேனும் ஒரு பழந்தமிழ் நூலை முறையே ஏடுகளில் ஆய்ந்து பார்த்தோர்க்கே இப்பணியின்*

> கடுமை புலனாகும். ஒன்றோடொன்று ஒவ்வாப் பல ஏடுகள் இருத்தல் கூடும். இடங்கள் முன்பின் பிறழ்ந்து வருதல் கூடும். சில ஏடுகள் தலையும் கடையுமின்றிக் குறையுடைப் பிரதிகளாய்க் கிட்டுதல் கூடும். சில ஏடுகளின் பகுதிகளை ஒன்று சேர்த்து வாசிக்குங்கால், பொருள் இயையாது வருதல் கூடுமாதலின் ஏட்டை எறிந்துவிட்டுச் செல்லலாமா? என நினைக்கும் அளவிற்கு வெறுப்புத் தோன்றுதல் கூடும். ஏடுகளைத் தேடிச் சேர்ப்பதுதானும் அருமுயற்சி. ஏட்டை வைத்திருப்போர் பிரதி கொள்ளுதற்குத்தானும் கொடுத்து வாங்கக் கூசுவர். பல ஊர்கள் சென்று அரிதில் தேடி ஏடுகளைத் திரட்டி வந்தபின், ஒப்பு நோக்கி, வரிசைப்படுத்தித் தக்க பாடத்தைத் தேர்ந்து ஒரு பழைய நூலை வெளியிடுவது என்பது எளிதான செயலன்று"

என்று டாக்டர் அ. சிதம்பரநாதனும் (பதிப்பாசிரியர் தாமோதரம், தமிழோசை, ப. 126) கூறும் கூற்றுக்கள் நூல் பதிப்புத்துறையில் அமைந்த எண்ணற்ற இடர்ப்பாடுகளை எடுத்துக் காட்டுகின்றன.

தாமோதரம்பிள்ளை அவர்கள் இத்துறையில் ஏற்பட்ட சோதனைகளை, வேதனைகளை எல்லாம் சாதனைகளாக மாற்றிக் காட்டினார். இன்னல்களை எல்லாம் இன்முகத்தோடு எதிர் கொண்டு கன்னல்களாக ஆக்கினார். பதிப்புத் துறையில் தான் 'ஒரு முன்னோடி' என்பதை மெய்ப்பித்துக் காட்டினார்.

### நூல்பதிப்புப்பணி

தாமோதரம்பிள்ளை நூல் பதிப்பிக்கும் பணிக்கு வந்ததற்குப் பொருள் ஈட்டும் முயற்சியோ, புலமை காட்டும் உயர்ச்சியோ காரணங்களாக இல்லை. தாய் மொழியாம் தமிழின் மீது கொண்ட தணியாக் காதல் என்ற ஒரே காரணம்தான். ஓலைச் சுவடிகளிலுள்ள எழுத்துக்களின் நிலைமை, ஓலைச்சுவடிகள் இருந்த அமைப்பு ஆகியவற்றைக் கண்டு கண்ணீர் சொரிந்தார்; மனம் வாடினார். அன்னைத் தமிழுக்கு நேர்ந்த அலங்கோல நிலைமை கண்டு, அங்கமெல்லாம் நொந்தார். இத்தகைய அவலநிலையை மாற்றி, தமிழன்னை எழிற்கோலம் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தினாலேயே நூல் பதிப்புப் பணிக்கு வந்தார். இதனை,

> "யான் வித்தியா அகங்காரத்தினாலாவது, திரவிய ஈட்டத்தினாலாவது இதில் ஏற்பட்டவனல்லன் என்பதை வற்புறுத்துகின்றேன்"

என்றும்,

> "ஏடு எடுக்கும் போது ஓரம் சொரிகிறது; கட்டு அவிழ்க்கும் போது இதழ் முறிகிறது. ஒன்றைப் புரட்டும் போது துண்டு துண்டாய்ப் பறக்கிறது. இனி எழுத்துக்களோ என்றால் வாலுந் தலையு மின்றி நாலாபுறமும் பாணக் கலப்பை மறுத்து மறுத்து உழுது கிடக்கின்றது. பழைய சுவடிகள் யாவும் அழிந்து போகின்றன. எத்தனையோ அரிய நூல்கள் காலப்போக்கில் அழிகின்றன. சீமான்களே! இவ்வாறு இறந்தொழியும் நூல் களில் உங்களுக்குச் சற்றாவது கிருபை பிறக்க வில்லையா? ஆச்சரியம்! ஆச்சரியம்!! அயலான் அழியக் காண்கினும் மனம் தளம்புகின்றதே! தமிழ் மாது நும் தாயல்லவா? இவள் அழிய நமக்கென்? என்று வாளாவிருக்கின்றீர்களே! தேசாபிமானம், மதாபிமானம், பாஷாபிமானம் என்று இவை இல்லாதவர் பெருமையும் பெருமையா? இதனைத் தயை கூர்ந்து சிந்திப்பீர் களாகுக"!

என்றும் கலித்தொகையின் பதிப்புரையில் அவரே எழுதிய எழுத்துக்கள் தெளிவாக விளக்கிக் காட்டுகின்றன. தான் மட்டும் ஈடுபடுவதை விட, தமிழர் பலரும் இப்பணியில் ஈடுபட வேண்டும் என்பது சி.வை. தாமோதரம்பிள்ளையின் பெருவிருப்பம் ஆகும்.

உயிர்களிடத்தில் இரக்கமே உருவாக வாழ்ந்த அருட் பிரகாச வள்ளலார் எப்படி 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினாரோ' அதே போன்று செல்லரித்த, சின்னாபின்னப்பட்ட ஓலைச் சுவடிகளைக் கண்டபோதெல்லாம் பிள்ளையும் பெரு மயக்குற்றார்.

மனிதநேயம் உள்ள எந்த மனிதனும் தன் கண் எதிரே அயலான் ஒருவன் அழிவதைப் பார்க்கப் பொறுக்க மாட்டான். அப்படி இருக்கும்பொழுது, நமது அருமைத் தாய்க்கு இந்நிலை ஏற்படலாமா? என எண்ணி எண்ணி ஏங்குகின்றார். பிள்ளை அவர்கள் தாயின் வாட்டத்தைப் போக்குவது அவள் பெற்றெடுத்த பிள்ளைகளின் கடமையல்லவா? என எண்ணுகிறார். தாய் வாடி இருக்கும்பொழுது அதைப் பார்த்திருப்பவனைச் சேய் எனலாமா? என வினவுகிறார். அத்தாயின் அவல நிலையை அகற்றவே, தான் தனி மகனாக, தலைமகனாக இப்பதிப்புத் துறைக்கு வந்ததாக அவர் கூறுவதை நாம் காணமுடிகிறது.

தாமோதரனார்க்கு அக்கால ஓலைச்சுவடிகள் உயிரற்ற வெறும் அஃறிணைப் பொருள்களாகத் தோற்றமளிக்கவில்லை. உயிருள்ள உயர்திணைப் பொருளாக, அருமைத் தாயாகத் தெரிவதால்தான், அவர் மேற்சுட்டியவாறு உள்ளம் பதைக்கிறார். ஓலைச்சுவடிகளை நூலாக்கும் பணியில் ஈடுபட்ட போது தாமோதரம்பிள்ளை சந்தித்த இன்னல்களையும், இடும்பை களையும் அவர் எழுதியுள்ள முன்னுரைகளின் வாயிலாக அறிந்து கொள்ளமுடிகிறது. அப்பொழுது தான் எவ்வளவு அரிய, பெரிய முயற்சியின் வாயிலாக ஒவ்வொரு நூலும் நமக்குக் கிடைத்துள்ளது என்பது தெரியவரும். அவர் ஓரிடத்தில்,

> "சொத்தைச் சேர்த்து விடலாம்; எழுத்தைச் சேர்ப்பது எளிதல்ல. மண்ணை அளந்து வரப்புகள் வகுத்து விடலாம். பொன்னைப் போன்ற எழுத்துகளுக்கு அணைகட்டிப் பார்ப்பது முடியாத காரியம். கடுமையான உழைப்பு மட்டும் போதாது. ஆண்டவன் அருளும் இருந்தால்தான் அடுத்த ஓலை முன் ஓலைக்கு உண்மையாகவே அடுத்த ஓலையாக இருக்கும். இடம்பெயர்ந்து இருந்தால் இலக்கியம் உயிர் புரண்டு நிற்கும்"

என்பார். இதிலிருந்து சொத்தையோ, மண்ணையோ வாங்கு வதைக் காட்டிலும், ஓலைச்சுவடிகளிலிருந்து எழுத்துக்களைச் சேர்த்து நூலாக உருவாக்கம் செய்வது எவ்வளவு அரும்பணி என்பதும், கடுமையான மனித உழைப்புடன், அருமையான தெய்வத்திருவருளும் இருந்தால்தான் - இணைந்தால் தான் அப்பணி எளிதில் முடிவடையும் எனத் தாமோதரம்பிள்ளை எண்ணிய எண்ணமும் தெரியவருகின்றது.

யாழ்ப்பாணத்தில் பிறந்து தமிழ்நாட்டிற்கு வந்து, தன்னந் தனியாகத் தமிழ்ப் புதையலைத் தேடித் திரிந்து தமிழ் மக்களுக்குத் தரும் அரிய, பெரிய முயற்சியில் ஈடுபட்டவர் தாமோதரம் பிள்ளை. இந்த முயற்சியில் அவர் அடைந்த இன்னல்கள் ஏராளம். அதைக் கீழ்க்காணும் நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். அவை பின்வருமாறு:

1. ஏட்டுப் பிரதிகள் யாவும் பரம்பரைப் பண்டிதர்கள் ஒரு சிலரிடமே இருந்தன. அவர்களுக்கும் அதைக் கொடுத்து உதவும் மனப்பான்மை இல்லை.
2. அக்காலத்தில் ஏட்டுப் பிரதிகளைப் படித்துப் பிழையின்றி எழுதித்தரும் திறமையுள்ளவர்கள் கிடைப்பதே அரிது.

இதனால் தாமோதரம்பிள்ளையே ஏடுகளைப் படித்துப் பார்த்து, நகல் எடுத்து, பொருள் ஆராய வேண்டிய நிலை ஏற்பட்டது.

3. நூல்களைப் பதிப்பித்தற்கு உண்டாகும் செலவு - பெரும் பாலும் தனது கைப்பணம் கொண்டே பதிப்பித்து வெளியிடும் நிலை - அப்படிச் செலவு செய்து வெளி யிட்டாலும் ஆர்வமுடன் வாங்குவோருமில்லை. வாங்கு வோர், பலர் இல்லாததால் ஒருமுறை இவர் மூவாயிரத்து ஐந்நூறு ரூபாய் நட்டப்பட்டதுண்டு. அந்நிலையில் தான் சென்னை, பூ. அரங்கநாத முதலியார், புதுக்கோட்டை அ. சேசைய சாத்திரியார், கொழும்பு அத்வக்காத் பொ. இராமநாத முதலியார், திருவாவடுதுறைச் சுப்பிரமணிய தேசிகர் ஆகியோர் இவருக்குப் பொருள் உதவி புரிந்தனர்.

4. எப்படியோ பல இன்னல்களைக் கடந்து நூல்களை வெளியிட்டாலும் அதைத் தூற்றுபவர்களே அதிகம் இருந்தனர். நூல் பதிப்பிக்கும் துறையில் முதலில் ஈடுபடுபவர் யாராக இருந்தாலும், அதில் அவர் தவறு செய்வது இயல்பு. அதைப் பெரியதாக யாரும் எடுத்துக் கொள்ளக்கூடாது என்ற எண்ணம் தாமோதரம் பிள்ளைக்கு இருந்ததை,

> என்னைக் கடந்து சிற்சில வழுக்கள் இலைமறை
> காய்போல் அங்கும் இங்கும் கிடப்பின் அதை
> யிட்டு என்மேல் குற்றம் ஏற்றல் மறைமுகத்தால்
> தர்மமாகாது போவதின் நில்லாது நேர்முகத்தால்
> பெரிய அநியாயம் என்றறிக

என்று அவரே எழுதியுள்ளதின் வாயிலாக எளிதில் உணர்ந்து கொள்ள முடிகிறது.

'பாம்பின் கால் பாம்பறியும்' என்பதற்கிணங்க இத்துறையில் அவர்பட்ட இன்னல்களை எல்லாம், அத்துறையில் வல்லவராகிய டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்கள் நன்கு உணர்ந்து இருந்தார். நூல் பதிப்பிக்கும் பணியில் தனக்கு ஏற்பட்ட ஐயங்களைப் போக்கிக் கொள்ளத் தாமோதரம்பிள்ளை, ஐயரின் துணையையும் நாடினார். இதைப் பிள்ளை அவர்களே "எனக்கு ஸ்ரீமத் சாமிநாதஐயரும், அவருக்கு நானுமே சாட்சி" என்று குறிப்பிட்டுக் காட்டுகின்றார். இதிலிருந்து ஒரு துறையில் உள்ளவர்களுக்கே அத்துறையின் ஏற்ற, இறக்கங்கள், வன்மை, மென்மைகள், மற்றவர்களைக் காட்டிலும் எளிதில் புரியும் என்பதை அறியமுடிகிறது.

நூல்பதிப்பிக்கும் பணியில் எவ்வளவோ இடையூறுகள், இன்னல்களைச் சந்தித்தாலும் அனைத்தையும் துச்சமாக மதித்து, மறைந்து போகக்கிடந்த தமிழ்ச் செல்வங்களை மக்களுக்கு வெளிக்கொணர்ந்து காட்ட வேண்டும்; அன்னைத் தமிழ்மொழி அழிந்து போகக்கூடாது என்ற இரண்டு எண்ணங்களே தாமோதரம் பிள்ளைக்கு இத்துறையில் ஈடுபடும் ஆர்வத்தை ஏற்படுத்தியன எனலாம்.

### பதிப்பித்த நூல்கள்

சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களால் மொத்தம் பத்து நூல்கள் பதிப்பிக்கப் பெற்றன. அவற்றுள் இலக்கிய நூல்கள் 4; இலக்கண நூல்கள் 6; அவரால் பதிப்பிக்கப் பெற்ற நூல்களின் பெயர்களும், பதிப்பிக்கப் பெற்ற ஆண்டுகளும் பின்வருமாறு:

### அ. இலக்கிய நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | நீதி நெறி விளக்கம் | 1853 |
| 2. | திருத்தணிகைப் புராணம் | 1883 |
| 3. | கலித்தொகை | 1887 |
| 4. | சூளாமணி | 1891 |

### ஆ. இலக்கண நூல்கள்

1. தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - சேனாவரையர் உரை, 1868.
2. வீரசோழியம், 1881.
3. இறையனார் அகப்பொருள், 1883.
4. தொல்காப்பியம் - பொருளதிகாரம் - நச்சினார்க்கினியர் உரை, 1885.
5. இலக்கண விளக்கம், 1889.
6. தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - நச்சினார்க்கினியர் உரை, 1892.

மேற்சுட்டிய பத்து நூல்களும், பதிப்பிக்கப் பெற்ற ஆண்டுகளும் அனைத்து ஆய்வாளர்களாலும், நூல்களாலும் ஒருங்கே ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையில், சூளாமணியின் பதிப்பு ஆண்டை மட்டும் கலைக்களஞ்சியம் 1889 என்று குறிப்பிடுகிறது.

## இலக்கிய நூல்கள்

### நீதிநெறி விளக்கம்

தமிழ் இலக்கியங்களின் பெயர்களையே மக்கள் சரியாகத் தெரிந்து கொள்ளாத காலத்தில் கி.பி. 1853ஆம் ஆண்டில்

தாமோதரம்பிள்ளை நீதிநெறி விளக்கம் என்னும் நூலை முதன்முதலாகப் பதிப்பித்து வெளியிட்டார். இத்தருணத்தில் அவர் கோப்பாய் சக்தி வித்தியாசாலையில் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். இந்நூலைப் பதிப்பித்து வெளியிட்ட காரணத்தால் 'தமிழ்ப் பதிப்புத்துறை முன்னோடி' என்னும் பெருமை பெற்றார். இந்நூல் வெளிவந்த பொழுது அவருக்கு வயது இருபதே ஆகி இருந்தது. இதனை வெளியிட்டுத் தமிழ் அறிஞர்களின் கவனத்தை ஈர்த்தார்.

**திருத்தணிகைப் புராணம்**

நீதிநெறி விளக்கத்தைப் பதிப்பித்து வெளியிட்டதற்குப் பின்னர், தாமோதரம்பிள்ளை இரு இலக்கண நூல்களைப் பதிப்பித்தார். அதன் பிறகு திருத்தணிகைப் புராணத்தை, கி.பி. 1883இல் வெளியிட்டார். இதே காலத்தில் இறையனார் அகப் பொருள் என்ற இலக்கண நூலையும் பதிப்பித்தார்.

**கலித்தொகை**

கி.பி. 1887ஆம் ஆண்டில் கலித்தொகை பதிப்பிக்கப் பெற்றது. இந்நூலின் பதிப்புரையில்தான் தாமோதரம்பிள்ளை "தான் நூல் பதிப்பிக்க வந்ததன் நோக்கத்தையும், ஏட்டுச் சுவடிகள் இருந்த அவல நிலையையும் குறிப்பிட்டு, தமிழ்த் தாயின் அலங்கோல நிலையை மாற்றி எழிற்காட்சியாக ஆக்குங்கள்" என்று தமிழ் மக்களுக்கு அவர் விடுத்த வேண்டுகோளும் இடம் பெற்றுள்ளதைக் காணமுடிகின்றது.

கலித்தொகையில் குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை ஆகிய நான்கு பகுதிகள் கிடைத்தனவாயினும், நெய்தல்பகுதி மட்டும் தாமோதரம்பிள்ளைக்கு முதலில் கிடைக்கவில்லை. அதனால் மிக வருத்தமடைந்த அவர், மூன்று திசைகளுக்குத் தக்க ஆட்களை அனுப்பித் தேடி வைத்தார். வடதிசைக்குத் தானே சென்று முடிவில் புதுச்சேரிக்கு அடுத்த நெல்லித் தோப்பிலே ஒருவரிட மிருந்து பெற்றுக் கலித்தொகை நூலைப் பதிப்பித்தார்.

அங்ஙனம் பதிப்பிக்கும் பொழுது, நூலை ஏட்டுப் பிரதிகளின் போக்கிலே விடாமல், அறிவின் துணைக்கொண்டு வரிசைப்படுத்தியும், கோவைப்படுத்தியும் வெளியிட்டார். கலித்தொகைப் பாடல்களின் கொளுச்சொல் ஏட்டில் முன்பாகக் காணப்பட்டதை அவ்வப்பாட்டின் பின்னதாகப் பதிப்பித்தார். ஏட்டிலே பாடல் முழுவதும் ஒருங்கே தொடர்ந்து வராமல், ஏதேனும் ஒரு முடிவு வரையில் எடுத்துக்கொண்ட பாட்டும்,

உரையுமாக விட்டுவிட்டு வந்ததை மாற்றிப் பாட்டு முடிவதையும் எடுத்தவுடன் ஒரே முறையில் படிக்கும் அளவில் பதிப்பித்தார். ஏட்டின் விசேடவுரைகள் சில பாட்டினுக்கு முன்னும், சிலவற்றின் பின்னுமாக முறையற்றுக் கிடந்தவற்றை மாற்றி ஒருவரிசைப் படுத்திய பின்னரே பதிப்பித்தார். மாணாக்கர் படிக்கும் பொருட்டு 'அல்குல்' என்ற சொல்லை அறவே நீக்கி விட்டு, உரிய இடத்தில் வேறு சொல்லைப் பெய்து பதிப்பித்தார். இவ்வாறு மாற்றியது குற்றமெனின், உலகம் மன்னிக்க வேண்டும் என வேண்டிக் கொண்டார்.

### சூளாமணி

இந்நூலின் மூலம் 1891இல் பதிப்பிக்கப்பட்டது எனவும் 1899இல் பதிப்பிக்கப்பட்டது எனவும் இரு கருத்துகள் நிலவுகின்றன.

### இலக்கண நூல்கள்

தமிழில் முழுமையாகக் கிடைத்த, முதல் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தைத் தான் பதிப்பித்தற்குரிய காரணத்தைத் தாமோதரம்பிள்ளையே தெளிவாக,

> தமிழ்நாடு அனைத்திலுமுள்ள தொல்காப்பியப் பிரதிகள் மிகச் சிலவே, அவை யாவும் நான் தேடிக் கண்டவரை ஈனஸ்திதி அடைந்திருப்பதால், இன்னும் சில வருடங்களுக்குள் அழிந்து விடுமென அஞ்சியே, உலோகோபகாரமாக அச்சிடலானேன்

என்று தனது தொல்காப்பியச் சொல்லதிகாரச் சேனாவரையர் உரைப் பதிப்பின் முன்னுரையில் குறிப்பிட்டிருக்கிறார். இதிலிருந்து பிள்ளை அவர்களின் தாய்மொழிப் பற்றும், தமிழ் இனப்பற்றும் மிகத் தெளிவாகத் தெரிகின்றன. அழிந்து போக இருந்த இலக்கண நூலை அழியாமல் காக்க வேண்டும் என அவர் துடித்த துடிப்பும் புரிகின்றது.

### தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - சேனாவரையர் உரை

தொல்காப்பியச் சொல்லதிகாரச் சேனாவரையர் உரையைத் தாமோதரம்பிள்ளை தனது முப்பத்தாறாம் வயதில், கி.பி. 1868ஆம் ஆண்டு பதிப்பித்து வெளியிட்டார்.

### வீரசோழியம்

பௌத்த மதத்தைச் சார்ந்த புத்தமித்திரர் என்பவரால் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற தமிழின்

ஐந்திலக்கணத்தையும் சுருக்கமாக உணர்த்தும் முறையில் எழுதப் பட்ட வீரசோழியம் என்ற இலக்கண நூலைத் தாமோதரம் பிள்ளை அவர்கள் கி.பி. 1881ஆம் ஆண்டில் பதிப்பித்து வெளி யிட்டார்.

இந்நூலின் பதிப்பு முன்னுரையில் தமிழ்மொழியின் சிறப்பையும், தனித் தன்மையையும், தலைமைத் தன்மையையும் மிக உயர்வாக,

> தமிழ் தனிமொழி என்பதும், தமிழ் என்பது
> திராவிடம் என்பதன் மரூஉ அன்றென்பதும்,
> அஃது இந்தியாவில் எம்மொழிக்கும் பிந்தியது
> அன்றென்பதும், தமிழ் எவ்வாற்றானும் வட
> மொழியின் வழிவந்த மொழியாகாது

என்றும் பிள்ளை அவர்கள் குறிப்பிட்டுக் காட்டுகின்றார்.

### இறையனார் அகப்பொருள்

அகப்பொருள் பற்றிப் பேசும் இறையனார் அகப் பொருளுக்கு, கி.பி.9ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நக்கீரர் உரை இயற்றினார். இந்நூலைத் தாமோதரம்பிள்ளை அவர்கள் கி.பி. 1883ஆம் ஆண்டில் பதிப்பித்து வெளியிட்டார்.

### தொல்காப்பியம்–பொருளதிகாரம்–நச்சினார்க்கினியர் உரை

தமிழ் மொழியில் மட்டுமே காணப்படும் பொருள் இலக்கணம் பற்றிய கருத்துக்களைக் கொண்ட தொல்காப்பியப் பொருளதிகாரத்து நச்சினார்க்கினியர் உரையைத் தாமோதரம் பிள்ளை அவர்கள் கி.பி 1885ஆம் ஆண்டில் பதிப்பித்தார்.

### இலக்கண விளக்கம்

'இலக்கண விளக்கம்' என்ற இலக்கண நூலைப் பிள்ளை அவர்கள் கி.பி. 1889ஆம் ஆண்டில் பதிப்பித்து வெளியிட்டார்.

### தொல்காப்பியம்–எழுத்ததிகாரம்–நச்சினார்க்கினியர் உரை

தொல்காப்பிய எழுத்ததிகாரத்து நச்சினார்க்கினியர் உரையே தாமோதரம்பிள்ளை அவர்கள் இறுதியாகப் பதிப்பித்து வெளியிட்டது ஆகும். இந்நூலை அவர் கி.பி. 1892ஆம் ஆண்டில் வெளியிட்டார்.

இலக்கண நூல்களில் தொல்காப்பியச் சொல்லதிகாரச் சேனாவரையர் உரையை முதலிலும் (1868) பொருளதிகார நச்சினார்க்கினியர் உரையை இடையிலும் (1885), எழுத்ததிகாரத்து

நச்சினார்க்கினியர் உரையை இறுதியிலும் (1892) தாமோதரம் பிள்ளை அவர்கள் வெளியிட்டார். இவ்வாறு பதிப்பித்தற்குச் சிறப்பான காரணம் எதுவும் கூறப்படவில்லை. ஒருவேளை ஓலைச்சுவடிகள் அவ்வரிசையில் கிட்டியிருக்கலாம்.

## பதிப்புரைகளின் சிறப்பு

பழந்தமிழ் இலக்கிய, இலக்கணங்களைப் பிள்ளை அவர்கள் மாறி மாறிப் பதிப்பித்துள்ளார். அனைத்து நூல்களின் பதிப்புரைகளிலும் அமைந்துள்ள இவருடைய முன்னுரைகள் மிகச் சிறப்பு வாய்ந்தவையாக உள்ளன.

இவருடைய பதிப்புரைகளிலும், முன்னுரைகளிலும் இவரின் சிறந்த ஆராய்ச்சித் திறனையும், நுட்பத்தையும், உவமை முதலிய அணிகள், நகைச்சுவையும் இனிமையும் நிறைந்த உரை நடைத் திறனையும் ஒருங்கே காணலாம். மொத்தத்தில் படிப்பவர்க்கு ஒப்பற்ற ஒரு நல்விருந்தாக இவர் பதிப்புரை அமையும் என்பதில் ஐயமில்லை! அதனால் தான் இவரது அரும் பெரும் பதிப்புப் பணியைப் பார்த்து குமாரசாமிப் புலவர் என்பார்,

> **ஏட்டி லிருந்த அருந்தமிழ் நூல்களனைப் பலவும்**
> **தீட்டி வழுக்களைந் தச்சினி லாக்குப செந்தமிழ்சேர்**
> **நாட்டி லளித்துயர் தாமோ தரேந்திரன் நண்ணுபுகழ்**
> **பாட்டி லடங்கும் தகைத்தோ புலவர் பாடுதற்கே**

என்று புகழ்ந்து பாடியுள்ளார்.

## படைப்புப் பணி

நூல் பதிப்புத் துறையில் மட்டுமின்றி, நூல் படைப்புத் துறையிலும் தாமோதரம்பிள்ளை அவர்கள் மிகச் சிறந்து விளங்கினார். அவரால் எழுதி வெளியிடப் பெற்றவையாகக் கீழ்க்கண்ட நூல்கள் காணப்படுகின்றன:

1. கட்டளைக் கலித்துறை
2. சைவ மகத்துவம்
3. சூளாமணி வசனம்
4. நட்சத்திர மாலை
5. ஆதியாகம கீர்த்தனம்
6. 'காந்த மலர்' அல்லது 'கற்பின் மாட்சி' (நாவல்)

மேற்சுட்டிய நூல்கள் அனைத்தும் அவருடைய படைப்பாற்றல் திறனைப் பறைசாற்றுவதாய் உள்ளன. இவற்றுள் முன்னவை நான்கும் உரைநடை நூல்கள்.

தாமோதரம் பிள்ளை பாக்கள் புனைவதிலும் வல்லவர். தம் காலப் பெரியோர்களைப் பல பாடல்களால் பாராட்டி மகிழ்ந்துள்ளார்.

தாம் பதிப்பித்த நூல்களில் தம் தமிழாசிரியர் வணக்க மாகவும் பாடல்கள் எழுதியுள்ளார்.

இவர் செய்யுளில் அமைந்த செறிவையும், பொருட் சிறப்பையும் கண்ட மாயூரம் வேதநாயகம்பிள்ளை,

**நீடிய சீர்பெறு தாமோதர மன்ன! நீள்புவியில்**
**வாடிய சூழ்கள் மறைமுகங்கண்டென மாண்புறநீ**
**பாடிய செய்யுளைப் பார்த்தின்ப வாரிபடிந்தனன் யான்**
**கோடிப் புலவர்கள் கூடினும் நின்புகழ் கூறலரிதே**

என்ற பாடலை எழுதித் தாமோதரம்பிள்ளைகு உடன் அனுப்பி வைத்தார். இந்நிகழ்ச்சி பிள்ளை அவர்களின் பாவியற்றும் படைப்பாற்றலுக்குக் கிட்டிய பரிசன்றோ!

### பத்திரிக்கைப் பணி

'உதயதாரகை', 'தினவர்த்தமானி' ஆகிய இரு இதழ்களின் ஆசிரியராகவும் சி.வை. தாமோதரம்பிள்ளை இருந்திருக்கின்றார். இவற்றுள் 'உதய தாரகை' என்ற இதழ் 1841ஆம் ஆண்டு முதல் மாதம் இரு முறை, முதலாம், மூன்றாம் வியாழக்கிழமைகளில் இலங்கையிலிருந்து வெளிவந்தது.

'தினவர்த்தமானி' 1855ஆம் ஆண்டு முதல் சென்னையி லிருந்து வெளிவந்தது. முதலில் வார இதழாக இருந்து பின்னர் நாளிதழாக வெளிவந்துள்ளது. இதன் ஆசிரியராகத் தாமோதரம் பிள்ளை இருந்திருக்கின்றார் என்பதை, "சென்னைத் தமிழ்த் தினசரிகளை எடுத்துக் கொண்டால் இராவ்பகதூர், சி.வை. தாமோதரம் பிள்ளை பி.ஏ., பி.எல், அவர்களை ஆசிரியராய்க் கொண்ட 'தினவர்த்தமானி' என்பதே முதல் தினசரி என்று எண்ணுகிறேன்" என 1935ஆம் ஆண்டில் விளாங்குறிச்சி திரு. நா. மருதாசலம்', 'இந்தியப் பத்திரிகைத் தொழிலியல்" என்ற தமிழ் நூலில் எழுதியிருப்பதிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. இதனால் இதழியல் துறையிலும் தாமோதரம்பிள்ளை சிறந்து விளங்கினார் என்பது புலனாகிறது.

### அருந்தமிழ்ப் பற்று

இளம் வயதிலேயே அன்னைத் தமிழ்மொழி மீது அளவிலாப் பற்றுக் கொண்டவர் சி.வை. தாமோதரம்பிள்ளை.

'தமிழே தெய்வம், தமிழ்ப் பணியே தவம்' என்று வாழ்ந்தவர் அவர். தமிழ்மொழியைப் புறக்கணிப்போரைக் கண்டிக்கும் இயல்பினர். கல்லூரிப் படிப்பில் தமிழைப் பாடமாக எடுத்துப் பயில்வோருக்கு, அக்காலத்தில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் தேர்வு நடத்தி, வெற்றி பெற்றோர்கட்குப் பரிசு வழங்கும் பழக்கத்தை மேற்கொண்டிருந்தனர். அப்படி வெற்றி பெற்ற மாணாக்கர்களை இவரும் வரவழைத்துக் கட்டுரை எழுதச் செய்தும், பாவியற்றக் கூறியும், நேரில் பேசியும் அவர்தம் திறமை அறிந்து பரிசும் வாழ்த்தும் அளிப்பார். அம்முறையில் இவரிடம் பரிசு பெற்றவர்களில் தமிழறிஞர் பரிதிமாற் கலைஞரும் ஒருவர். அவர் இவரைப் பற்றிக் கூறுகையில்,

> "தாமோதரம்பிள்ளை சால்பெடுத்துச் சாற்ற எவர்
> தாமோதா முடையார்"

எனப் பாராட்டி மகிழ்ந்துள்ளார். அப்பொழுது ஏற்பட்ட இருவர் நட்பும் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து வந்தது. தமிழ் மொழியின் மீது கொண்ட பற்றே அவரைப் பழந்தமிழ் நூல்களைப் பதிப்பிக்கத் தூண்டியது எனலாம்.

## நட்பு

ஒரே துறையில் இருப்பவர்களிடம் இக்காலத்தில் காணப்படும் போட்டியும், பொறாமையும் தாமோதரம்பிள்ளை அவர்கள் காலத்தில் இல்லை. மாறாக ஒருவருக்கொருவர் உதவிக்கொள்ளும் மனநிலையே இருந்தது. பதிப்புத்துறையில் ஈடுபட்ட போது ஆறுமுகநாவலர், டாக்டர் உவே. சாமிநாதையர் ஆகிய இருவரிடமும் தாமோதரம்பிள்ளை மிக நெருக்க மாகத் தொடர்பு கொண்டிருந்தார். தனக்கு ஏற்பட்ட ஐயங்களை உ.வே.சா.விடம் கேட்டுத் தெளிவுபெற்றார். தொல்காப்பிய இலக்கண நூலைப் பதிப்பிக்க முற்பட்ட போது ஆறுமுக நாவலர் அவர்களின் அறிவுரைகளைக் கேட்டு அதன்படியே நடந்து வந்தார். பதிப்பிக்கும் துறையில் ஆறுமுக நாவலரைத் தாமோதர னார் தன் குருவாகவே போற்றி வந்தார். பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்ததால் இவருக்கு ஏற்பட்ட பண நட்டத்தை அரங்கநாத முதலியார் உள்ளிட்ட நண்பர்களே தீர்த்து வைத்தனர்.

## பெற்ற பட்டங்கள்

அற்றைக் காலத்தில் அரசின் உயர் பரிசாக மதிக்கப்பெற்ற 'இராவ் பகதூர்' என்ற பட்டத்தை, கி.பி. 1895ஆம்ஆண்டில் அரசு இவருக்கு அளித்து இவரைப் பெருமைப்படுத்தியது. தமிழறிஞர்

உலகம் இவரின் சிறந்த தமிழ்த் தொண்டினைப் பாராட்டி, 'செந்தமிழ்ச் செம்மல்' என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது.

இதுகாறும் கண்ட செய்திகளால், இலங்கையில் பிறந்து, தனிமனிதராகத் தமிழகம் வந்து, தனது கடுமையான உழைப்பாலும் விடாமுயற்சியாலும், தமிழ் மீது கொண்ட தன்னிகரில்லாப் பற்றினாலும் பழந்தமிழ் இலக்கிய இலக்கணங் களைப் பனை ஓலைகளிலிருந்து பலரும் பார்க்கும் நூல் வடிவில் பதிப்பித்து வெளியிட்ட மாமேதை தாமோதரம்பிள்ளை அவர்கள், தான் பார்த்த பல்வேறு பணிகளுக்கு இடையேயும் பத்து நூல்களைப் பதிப்பித்து இருக்கிறார் என்றால், ஒருவேளை முழுநேரப் பணியாகவே பிள்ளை அவர்கள் இதைப் பார்த்திருப்பார் என்றால், மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய 'மறைந்து போன தமிழ் நூல்கள்' என்ற நூலில் காணப்படும் மறைந்துபோன தமிழ் நூல்கள் பட்டியலிருந்து பல மறைந்தே போயிருக்கும். அந்த அளவுக்குப் பிள்ளை அவர்கள் இதில் அக்கறை கொண்டிருந்தார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கால் பகுதிக்குப் பின்னர்த் தமிழ் வானிலே தோன்றிய அந்தப் பதிப்புச் சுடர் இருபதாம் நூற்றாண்டு தொடங்கிய முதல் நாளிலேயே (1-1-1901) அணைந்தது.

> இன்று அவர் இயற்றிய நூல்கள் மறக்கப்பட்ட போதிலும், பனை ஓலையில் இருந்த பழைய தமிழ் ஏடுகள் சிலவற்றைப் பெருமுயற்சியுடன் படித்து முதல் முதலாக அச்சிட்டு வெளியிட்ட அவருடைய அரிய தொண்டு மறக்கப்பட வில்லை.

என்ற டாக்டர் மு. வரதராசனாரின், தாமோதரம்பிள்ளை பற்றிய மதிப்பீடு முற்றிலும் உண்மையே!

◆

# வாழ்க்கை வரலாறும் தமிழ்ப் பணியும்

தமிழகத்தில் செந்தமிழ் வளர்த்த அறிஞர்களைப் போலவே ஈழநாட்டிலும் தமிழ்ப் பணியும் தமிழ்த் தொண்டும் புரிந்துள்ளவர்களுள் யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுக நாவலர், சி.வை. தாமோதரம்பிள்ளை, கனகசபைப் பிள்ளை ஆகியோர் குறிப்பிடத்தகுந்தவர் ஆவர். ஆறுமுகநாவலர் சமுதாய மக்களின் நிலை கருதிச் **சமயப்பணி**யினைத் தொடர்ந்தார். கனகசபைப் பிள்ளையோ **தமிழ்த் தாய்க்குத்** தொண்டாற்ற வேண்டும் என்று விரும்பி ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன் தமிழர் என்ற **வரலாற்று நூலை** எழுதினார். சி.வை தாமோதரம்பிள்ளை அவர்கள் பழந்தமிழ்ச் செல்வம் பாழ்போகும் நிலையை நோக்கி, **தொல்காப்பியம்** முதலான நூல்களைப் **பதிப்பிக்கும் பணியில்** ஈடுபட்டார். மேற்காணும் மூவரில் **தமிழ்ப் பதிப்புத் துறையின் முன்னோடி** என்று பாராட்டப் பெறுபவர் சி.வை. தாமோதரம் பிள்ளை. இவரைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகளும், அவர் செய்த தமிழ்ப் பணிகளைப் பற்றிய செய்திக் குறிப்புகளும் ஈண்டுத் தருவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கம்.

**இளமைப் பருவம்**

சி.வை.தா. அவர்கள் பணியாற்றிய துறை வேறு; தொண்டாற்றிய துறை வேறு. பழந்தமிழ் இலக்கண இலக்கியங் களையும், காப்பியங்களையும் திருத்தமுறப் பதிப்பித்துத் தமிழிலக்கிய வானில் தனிமுத்திரையினைப் பதித்த இவரே குடும்பத்தில் மூத்தபிள்ளை. இவருக்குத் தம்பியர் அறுவர். சி.வை.தா. அவர்கள் தம் குடும்பத்தின் வழியினரைச் சிறப்பித்துப் பாடல் ஒன்றும் பாடியுள்ளார்.

"மாப்பாணர் மகன் வேலாயுதன்; அவர் மகன் அம்பலவாணன்; அவர் மகன் மூத்த தம்பி; அவர் மகன் குருநாதன்; அவர் மகன் வைரவநாதன்; அவர் மகன் தாமோதரன்;

அவர் மகன் அமிர்தலிங்கன்; அவர் மகன் தியாகராசன்; பேரன் தியாகராசன் பிறந்த பூரிப்பில் தாமோதரம்பிள்ளை பாடிய பாடல் பின்வருமாறு:

**சிற்றூர்ப் பகீரதி கோத்திரனான் வேளாண்**
**திகழ்மரபோன் மாப்பாண முதலி மேனாள்**
**பெற்றனன் வேலாயுதனை அவன்தன் மைந்தன்**
**பேர்மலி அம்பலவாணன், மூத்த தம்பி**
**உற்றான் அன்னோற்கவன்சேய் குருநா தேந்தல்**
**உதவு வயிரவநாதா சிரியன் தந்த**
**சொற்றார் தாமோதரனுக்குக் கமிர்தலிங்கன்**
**சுதன் தியாக ராசனவன் தோன்றல் மாதோ**

**கல்வி**

சி.வை.தா. ஆசிரியராகப் பணியாற்றிய வைரவநாதரிடமே தொடக்கக் கல்வியைக் கற்றார். பழங்காலத்தில் அறநூல்கள், நிகண்டுகள் முதலானவற்றைப் படித்த பின்னரே தமிழ் நூல்களைப் படிப்பது மரபு. அம்முறையில் பயின்ற பின்னர், சுன்னாகம் என்னும் ஊரிலுள்ள முத்துக்குமாரக் கவிராயரிடம் இலக்கிய இலக்கணங்களை இனிது பயின்றார். பிறகு ஆங்கிலமுங் கற்க, தெல்லியம்பதி அமெரிக்க மிசன் கலாசாலையிலும், அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாண வட்டுக் கோட்டை பல்கலைக் கல்லூரி யிலும் (Jaffna Seminary) பயின்று கணிதம், தத்துவம், வானவியல் முதலாயவற்றிலும் தேர்ந்தார். யாழ்ப்பாணப் பல்கலைக் கல்லூரியில் 1844ஆம் ஆண்டு முதல் 1852ஆம் ஆண்டு வரை பயின்று தம் இருபதாம் வயதில் சிறந்த கல்வித் தேர்ச்சி பெற்றார். கல்வி பயிலுங் காலத்திலேயே இவர்தம் தமிழாசிரியர் **நெவின்சு** என்பவரால் **பண்டிதர்** என்றழைக்கப்பட்டார்.

அவர்தம் வாழ்நாள் முழுதும் தமிழ் இலக்கிய இலக்கணங் களையும் ஆய்ந்து பதிப்பிப்பதையே நோக்கமாகக் கொண்டு வாழ்ந்துள்ளார் என்பதனை அவரது பதிப்புரையும் பதிப்பு நூல்களும் வெளிப்படுத்துவதனை உணர்ந்து அறியலாம்.

**மத மாற்றம்**

சி.வை.தா. மேலைநாட்டுக் கல்வி கற்க விரும்பினார். அவர் காலத்தில் கிறித்தவர்களுக்கே மேல்நாட்டு ஆங்கிலக் கல்வி கற்கும், கற்பிக்கும் நிலை இருந்து வந்தது. அதனால் தாமும் கிறித்தவராக மதம் மாறி, மேலைக் கல்வியைக் கற்றார். பிறகு ஆறுமுக

நாவலரின் தொடர்பு ஏற்பட்டவுடன் கிறித்தவ சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கே மாறி, இறுதிவரை நின்றொழுகினார். மேலைக் கல்வி கற்கும்போது சி.வை.தா. தம் பெயரை சி.எல்.டபிள்யூ. கிங்ஸ்பெரி (C.L.W. Kingsbury) என்று மாற்றிக்கொண்டதால் யாழ்ப்பாணம் பகுதியில் சிறப்பதற்குக் காரணம் என்று கூடச் சொல்லலாம்.

கிறித்தவ சமயத்திலிருந்து, சைவராக மாறித் தமிழ்ப் பணியாற்றும்போது மறவாமல் தம் பதிப்பு நூலின் நீதிநெறி விளக்கத்தின் இறுதியில் **சீர்பூத்த விவிலிய நற்சுருதி வாழி** என்று பாராட்டியுள்ளார். சைவராக மாறிய பின்பு, தம் மகன் கிறித்தவ சமயத்தை நாடி விட்டாரே என்று ஒதுக்கிய நிலையும் அவரது வாழ்க்கை வரலாற்றின் மூலம் அறிந்து கொள்ளலாம். பிறகு வீரசோழியம் என்னும் நூலைப் பதிப்பித்ததால், வீரசோழியப் பதிப்புரைக்காரர் என்றும் **அழைத்துள்ளனர்.**

**தாம் கொண்டிருந்த சைவ சமயக் கருத்துக்களை, 1867ஆம் ஆண்டு** எழுதி வெளியிட்ட 'சைவ மகத்துவம்' என்னும் நூல்வழி அறியலாம். அந்நூலின்கண் 'விவிலிய விரோதம்' என்னும் பகுதியும் குறிப்பிடத்தக்கது.

### தொழில்

1852ஆம் ஆண்டு தம் இருபதாம் வயதில் கல்வியை ஓரளவு முடித்தவுடன் யாழ்ப்பாணம் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் ஆசிரியராகும் வாய்ப்பினைப் பெற்றார். பிறகு, இவர்தம் புலமையையும், திறமையையும் கேள்விப்பட்ட பெர்சிவல் பாதிரியார் தாம் நடத்திவந்த **'தினவர்த்தமானி'** எனும் வியாழன் தோறும் வரும் வார இதழுக்குத் **துணையாசிரியராக** இருக்குமாறு விரும்பி வேண்டிட, உடன்பட்டார். பின் அவ்விதழின் ஆசிரியராகவே பணியாற்றினார். தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வல்ல இவர் பேராசிரியர் பர்னல், சர் வால்டர் எலியட், லூசிங்கடன் முதலாய ஆங்கிலப் பெருமக்களுக்குத் தமிழ் கற்பித்தார். இச்செய்தி, அரசுக்குத் தெரிந்திட, சென்னை - மாநிலக் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணியுயர்வு கொடுத்துச் சிறப்பித்தது என்றால் அவரது தகுதியே இதற்குச் சான்றாக அமைகிறது எனலாம்.

அவரின் சீரிய தமிழ்ப்பணியைப் பாராட்டி, கள்ளிக் கோட்டை அரசினர் கல்லூரித் தமிழாசிரியராகப் பணியாற்றும்

வாய்ப்பு கிட்டியது. அதனைத் தொடர்ந்து சென்னை அரசாங்க வரவு செலவுக் கணக்குத் துறையில் அலுவலராகும் பணி கிட்டியது. ஒருமுறை அலுவலகத் தலைவர் விரைந்து முடிக்க வேண்டிய 10 நாள் வேலையை, இவரிடம் ஒப்படைக்க ஏழு நாட்களில் சிறப்பாக முடித்துத் தந்தார் எனில் இவரது செயல் திறன் இனிது விளங்கும்.

1882ஆம் ஆண்டு தம் ஐம்பதாம் அகவையில் அரசு அலுவலிலிருந்து ஓய்வு பெற்று உதவித்தொகை பெற்று வந்தார். அவ்ஓய்வுத் தொகை முழுதும் தமிழ்ப் பணிக்கே செலவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஓய்வு பெறுமுன் 1881ஆம் ஆண்டிலேயே **வீரசோழியம்** பதிப்பித்தார். ஓய்வு பெற்ற மறு ஆண்டிலே **திருத்தணிகைப் புராணம், இறையனார் அகப்பொருள்** என்னும் நூல்களை அச்சிட்டு வெளியிட்டார். சென்னையைவிடத் தென்னிலப் பகுதிகளே ஏடுகளைத் தேடுவதற்கும், தொகுப்பதற்கும் சிறந்த இடம் எனத் தேர்ந்து தம் இருப்பிடத்தைக் குடந்தைக்கு மாற்றிக் கொண்டார். சில காலம் சட்டக்கல்வி பயின்றதால், வழக்கறிஞர் தொழிலையும் செய்தார். இத்தொழில் வருவாய் முழுவதும் தமிழ்நூற் பதிப்புக்கே செலவிட்டார்.

### வகித்த பதவிகள்

1887இல் புதுக்கோட்டை அரசின் அமைச்சராக விளங்கிய சேசையர், இவர் மீது அன்பு கொண்டு புதுக்கோட்டை முறை மன்ற நடுவர்களில் ஒருவராக நியமித்து மகிழ்ந்தார். இப்பொறுப்பினை நான்காண்டுகள் செவ்வனே (1887 - 1890) ஏற்று முடித்தார். மேலும் சென்னைப் பல்கலைக்கழகப் பாடத்திட்டக் குழுவின் உறுப்பினராகவும், தேர்வுத் திட்டம் வகுக்கும் குழுவிற்குத் தலைவராகவும் விளங்கினார்.

### இல்லறம்

இளம் வயதிலேயே தம் தந்தையை இழந்தவர் சி.வை.தா. தம் தம்பியர் அறுவரையும் போற்றி வளர்க்கும் பொறுப்பு இவருக்குக் கடமையாயிற்று. இல்லறமே நல்லறம் எனத் தெளிந்து தெல்லியம்பதி காலிங்கராயர் வழிவந்த வள்ளியம்மையை மணம் புரிந்து கொண்டார். இரண்டு பிள்ளைகளை ஈன்றபின் நோய் வாய்ப்பட்டு வள்ளியம்மையார் இறந்துபட்டார். பிறகு வள்ளியம்மையாருடன் பிறந்த நாகமுத்தம்மாளை 1860ஆம்

ஆண்டு சி.வை.தா. மணந்தார். இவர்களுக்கு ஆறு பிள்ளைகள் பிறந்தனர். குடும்பக் கடமைகளைச் சரிவரச் செய்து இல்லறச் செம்மலாக விளங்கியவர் சி.வை.தா. எனில் மிகையாகாது.

சி.வை.தா. அவர்கள் வாழ்ந்த சூழலே மிகப் பெரும் தமிழ்ச் சூழலாக விளங்கியமை அவருடன் பழகிய நட்புடையோர்கள், புலவர்கள், புரவலர்கள், கொடையாளர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் அனைவரையும் தம் பதிப்புரையில் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளதன்மூலம் அறிந்துணரலாம்.

இவர் ஆற்றிய தமிழ்த் தொண்டினைப் பாராட்டி, 1895ஆம் ஆண்டு அரசே இவருக்கு இராவ் பகதூர் என்னும் மதிப்புறு விருதினை வழங்கிச் சிறப்பித்தது. மைசூர் அரசு, இவரை அழைத்துப் பாராட்டி, எழுத்துப் பரிசுகள் பல வழங்கியது. மேலும் ஆங்கிலப் பெருமக்கள், செல்வர்கள், திருமடத் தலைவர்கள் ஆகியோர் அனைவரும் தாமோதரம்பிள்ளையின் சிறப்பினைப் பாராட்டினர்.

சி.வை.தா. அவர்களின் வாழ்வு, தமிழ் வாழ்வாகவே மலர்ந்து மணம் பரப்புவதனை அறிந்து நாமும் நம்மால் இயன்ற தமிழ்ப் பணிகளைச் செய்திட வழிகாட்டியாகத் திகழ்கின்றார் எனில் உள்ளங்கை நெல்லிக்கனியாம்.

சி.வை.தா. அவர்கள் அழியும் நிலயில் இருந்த பண்டைத் தமிழிலக்கிய, இலக்கண நூல்களை (சுவடிகளை) எல்லாம் அச்சில் ஏற்றியும், அரிய பதிப்புரையும் எழுதிப் பதிப்பித்த பெருமைக் குரியவர். தம் வாழ்நாள் முழுவதும் தாம் ஆற்றிய பல்வேறு பணிகளுக்கிடையே தமிழ்ப் பணியைத் தவறாமல் ஆற்றி வந்தார் என்பதற்கு அவர் பதிப்பித்த பதினொரு நூல்களே சான்றாக அமைகின்றன.

### அச்சேறாத நூல்

1897இல் அகநானூறு - மணிமிடைப் பவளம் வரை பரிசோதித்துக் கையெழுத்துப் படியை ஆயத்தம் செய்தார். மிகவும் உடல்நலம் பாதிக்கப்பட்ட காரணத்தால் இந்நூல் முற்றுப் பெறவில்லை. ஆதலால், அதனைப் பதிப்பிக்கவில்லை என்றே குறிப்பிடுகின்றார்.

### 1. நீதிநெறி விளக்கம் – முதல் பதிப்பு

இலங்கை கோப்பாய்ப் பள்ளியில் சி.வை.தா. அவர்கள் ஆசிரியராகப் பணியாற்றிய போது குமரகுருபரர் இயற்றிய

நீதிநெறி விளக்கம் என்னும் நூலைப் படித்து, தாமே எழுதிய எளிய உரையுடன் 1854ஆம் ஆண்டு மாணிப்பாய் அமெரிக்கன் மிசன் அச்சுக் கூடத்தில் அச்சடித்துப் பதிப்பித்தார்.

இப்பதிப்பு நூல் வட்டக் கோட்டை முத்துக் குமாரர் புதல்வர் சிதம்பரம் பிள்ளை, குமாரசுவாமி முதலியார் புதல்வர் கதிரைவேற்பிள்ளை ஆகியோரால் பார்வையிடப்பட்டது என்பது மட்டும் அறிய முடிகிறது. மேலும் நீதிநெறி விளக்க நூலின் இறுதியில்

*சீர்பூத்த விவிலிய நற்சுருதி வாழி*
*திருச்சபை கணிதம் வாழி*
*நார்பூத்த திரவிய மிஷின் வாழி!*

எனும் பாடல் இடம்பெறுகின்றது. இச்செய்தியின் வாயிலாக, தாம் படித்த நூலையும், இடத்தையும், மறவாமல் போற்றியுள்ளார் தாமோதரனார் என்பது அறியமுடிகிறது.

**2. தொல்காப்பியம் – சொல்லதிகாரப் பதிப்பு**

சி.வை.தா. அவர்கள் பதிப்பித்த இரண்டாவது தமிழ் நூல் தொல்காப்பியம் - சொல்லதிகாரம் ஆகும். தொல்காப்பியச் சொல்லதிகாரத்தை, வடநூற்கடலை நிலைகண்டுணர்ந்த சேனா வரையர் உரையோடு முதன்முதலில் பதிப்பித்தவர் இவரே ஆவார். இந்நூலை நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்களைக் கொண்டு, பல பிரதி ரூபங்களைக் கொண்டு, பரிசோதிக்கச் செய்தபின் பதிப்பித்தார்.

இந்நூல் 1868ஆம் ஆண்டு (விபவ ஆண்டு புரட்டாசித் திங்கள்) சென்னைப் பட்டணம் ஊ. புஷ்பரதச் செட்டியாரது கலாரத்நாகர அச்சுக்கூடத்திலே பதிப்பிக்கப்பட்டது. மேலும் இந்நூலின்கண் பதிப்புரை முன்னுரை ஆகியன எதுவுமில்லை.

1. ச.வே. சுப்பிரமணியன் அவர்கள், "பெரும்பான்மையும் முதற் பதிப்புகள் நூற்பா அமைப்பில்லாமல் உரைநடை போன்ற நூற்பாவும், உரையும் காணப்பெறும். ஆனால் சி.வை.தா. அவர்களின் தொல்காப்பியச் சொல்லதிகாரப் பதிப்பு நூலில், நூற்பா பெரிய எழுத்திலும், உரை சற்றுச் சிறிய எழுத்திலும் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் பார்த்தவுடன் நூற்பா

எது? உரை எது? எனக் கண்டறிய ஏதுவாகிறது" என்று கூறுவார்.

2. நூற்பா, சந்திப் பிரிப்பின்றி அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் சீருக்குச் சீர் இடைவெளியிடப்பட்டுள்ளது.பதவுரை முன்னும் தெளிவுரை பின்னும் பத்தி பிரித்து அமைக்கப் பட்டுள்ளன.

3. நூற்பாத் தொடக்கத்தில் அதிகாரத் தொடர் எண்ணும், உரை முடிவில் இயலின் வரிசை எண்ணும் இடப்பட்டுள்ளன. அடிக்குறிப்புகள் சில இடங்களில் தரப்பெற்றுள்ளன. இவற்றுள் சிவஞான முனிவர் உரை, நன்னூல் விருத்தியுரை, நச்சினார்க்கினியருரை ஆகியவற்றின் கருத்துக்கள், பகுதிகள் ஒப்புமைக்காக எடுத்துக்காட்டப்பெற்றுள்ளன.

4. நூலில் இறுதியில் நூற்பா முதற்குறிப்பகராதியும், இயலடைவும் அமைந்துள்ளன. பொருளடக்கம், அக்கால வழக்கப்படி ஆசிப் பத்திரம் என்றே பதிப்பிக்கப்பட்டுள்ளது.

5. இப்பதிப்பில் இடையியல் இடைச்சொல்லியல் எனவும், உரியியல், உரிச்சொல்லியல் எனவும் பதிக்கப்பெற்றுள்ளமை குறிக்கத்தக்கதாகும்.

6. இந்நூலின்கண் உள்ள எண்கள் தமிழிலேயே தரப் பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

7. 1886ஆம் ஆண்டு இந்நூல், மறுபதிப்பாக (இரண்டாம் பதிப்பு) வெளிவந்துள்ளது.

8. நூலின் முகப்புப் பக்கத்தில் பிள்ளையார் சுழியும், கணபதி துணை என்ற வாசகமும் தொடக்கத்தில் தரப்பெற்றுள்ளன. மேலும் நீதிநெறி விளக்குப் பதிப்பில் கிறித்தவப் பெயர் இருந்தது. இப்பதிப்பில் சைவக் காவலராகிய ஆறுமுக நாவலரின் தாக்கத்தினால் (நட்பினால்) சைவராக மாறிய சி.வை.தா.வின் உள்ளார்ந்த வெளிப்பாடாக இதனைக் கொள்ளலாம்.

### 3. வீரசோழியப் பதிப்பு (பெருந்தேவனார் உரை)

1879ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் பதினாறாம் நாள் ஆறுமுக நாவலர் மறைந்தபொழுது, துயருற்று 5 இரங்கற்பாக்கள் பாடினார். மேலும் உள்ள பழந்தமிழ் நூல்களைப் பாதுகாத்து,

தம்மால் இயன்ற மட்டும் பதிப்பித்து வெளியிட வேண்டுமென்ற நோக்கத்தினைக் கைக்கொண்டார். பிறகு 1881ஆம் ஆண்டு (விசு ஆண்டு சித்திரைத் திங்கள்) பொன் பற்றிக் காவலர் புத்தமித்ரனார் இயற்றிய வீரசோழியத்தைப் பெருந்தேவனார் உரையொடு பதிப்பித்தார். இந்நூலினை வெளியிடத் திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்துப் பெரிய சற்குருநாத சுவாமிகள் கொடுத்தருள, யாழ்ப்பாணம் தி. குமாரசாமி செட்டியாரால், தஞ்சாவூர் சதாவதானம் சுப்பிரமணிய ஐயரது, சென்னை வித்தியாவர்த்தினி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

இந்நூல் இருமுறை பதிப்பாக, வெளிவந்தது எனக் கா.ர. கோவிந்தராஜ முதலியார் அவர்கள் கூறுவார் (சென்னை பவானந்தர் கழகம், வீரசோழியப் பதிப்பு, 1942, ப. 6-7).

வீரசோழிய நூலை அச்சிடுவிக்கும் காரணத்தை, சி.வை.தா. அவர்களே தமது வீரசோழியப் பதிப்புரையில் குறிப்பிடுவதனைக் காணலாம்.

> "நல்ல வித்வான்களுள்ளும் அநேகர் தாம் வீரசோழியம் என்னும் பெயரைக் கேட்டதன்றி, நூலைப் பார்த்தறியேம் எனப் பலபல சமயங்களில் நமக்கு நேரே சொல்லினர். ஆதலால் இதனை இப்போது அச்சிடுவித்த நோக்கம் என்று உணர்க"

என்று 30 பக்க பதிப்புரையில் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கூறிய செய்தியின் வாயிலாக, சி.வை.தா. மறையும் தறுவாயிலிருந்த தமிழ் நூல்களிடத்திலிருந்த அக்கறையினை நன்கு தெரிந்துணரலாம்.

அதனைத் தொடர்ந்து அதிகார அகராதி, பொருளடக்கம், செய்யுளகராதி (பாட்டும் பக்கம்), பக்க எண்கள் தமிழில் இருத்தல், வீரசோழியப் பதிப்பின் சிறப்புகளைப் பாராட்டி எழுவர் எழுதிய சிறப்புக் கவிகள் ஆகியனவும் காணப் பெறுகின்றன. நூலின் இறுதியில் அந்தச் சிறப்பு என்னும் தலைப்பில் ஒரு செய்யுளும், தொடர்ந்து அக்கால ஓலைச் சுவடிகளில் ஏடு எழுதுவோரால், தங்குற்றங்களைப் பொறுத் தருளுமாறு எழுதப்படும் செய்யுளும் இருப்பது குறிக்கத்தக்கது.

### 4. தணிகைப் புராணப் பதிப்பு

சி.வை.தா. பதிப்பித்த நான்காவது நூல், திருத்தணிகைத் தலச்சிறப்பைக் கூறும் புராண நூலாகும். 1881இல் வீரசோழியத்

தைப் பதிப்பித்து அறிஞர் பலரின் பாராட்டுக்களைப் பெற்ற, சி.வை.தா. அவர்கள் அடுத்த ஆண்டே 1882ல் தம் அலுவலிலிருந்து ஓய்வு பெற்றார். அலுவல் பணியில் ஓய்வு கிடைத்ததே என்று மகிழ்ந்து, தமிழ்ப் பணியில் தீவிரமாக ஈடுபட்டார். வீரசோழியத்தைப் பதிப்பிக்குங் காலத்துக் கச்சியப்பமுனிவர் இயற்றிய தணிகைப் புராணப் பிரதிகள் கிடைத்தன. அதனைப் பலமுறை சோதித்து 1883ஆம் ஆண்டு சுபானு வருடம் சித்திரை மாதம் தணிகைப் புராணம் மூலம் மட்டும் பதிப்புரை இன்றிப் பதிப்பித்தார். இந்நூலின் முதற் பக்கமே பதிப்புரை போன்று எங்கு யாரால் எந்த ஆண்டு பதிப்பிக்கப்பட்டது என்பன போன்ற விவரங்களுடன் அமைந்துள்ளது.

ஸ்ரீ கைலாச பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்துக் கச்சியப்ப முனிவர் அருளிச் செய்த தணிகைப்புராணம், திருவாவடு துறை ஆதீனம் சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் அனுமதியோடு, யாழ்ப்பாணம் தி. குமாரசாமிச் செட்டியாரால் பதிப்பிக்கப் பட்டது என்றும் சென்னைப் பட்டணம் ஸ்காட்டிஷ் அச்சகத்தில் அச்சிடப்பட்டது என்றும் நூலின் முகப்புப் பக்க வாயிலாக அறியலாம். இந்நூலின் விலை ரூபாய் மூன்று என்பதனைச் சொல்-சொல்-பதிப்பில் வந்த விளம்பரத்தால் அறியலாம்.

### 5. இறையனார் அகப்பொருள்

சி.வை.தா. அவர்கள் பதிப்பித்த ஐந்தாவது நூல் இறையனார் அகப்பொருள் உரையாகும். இந்நூல் தணிகைப் புராணத்தைப் பதிப்பித்த 1883ஆம் ஆண்டிலேயே (ஒரே ஆண்டில்) மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் கண்டருளிய உரையுடன், சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் பல பிரதிகளை ஒப்பு நோக்கிப் பரிசோதித்து, யாழ்ப்பாணம் தி. குமாரசாமிச் செட்டியாரால் பதிப்பிக்கப்பட்டது. சென்னைப்பட்டணம் சுபானு வருடம் சித்திரை மாதம் என்பதே, சி.வை.தா. அவர்கள் பதிப்பித்த நூலின் முகப்புப் பக்கத்தில் அச்சிடப்பெற்றது. ஸ்காட்டிஷ் அச்சகத்தில் அச்சிடப்பெற்ற இந்நூலின் விலை அந்நாளில் ரூ. 1.50 என்று சி.வை.தா. பதிப்பிலுள்ள விளம்பரத்தின் வழி அறியலாம்.

நீதிநெறி விளக்கம், தொல்-சொல்-சேனாவரையர் பதிப்பு, தணிகைப் புராணம் ஆகிய நூல்களைப் பதிப்பித்தாற் போலவே பதிப்புரை இன்றியே பதிப்பித்துள்ளார். இருப்பினும் இந்நூலில் பதிப்புரைக்குப் பதில் "நன்றி கூறல்" உள்ளது.

இந்நூலிலும் பதிப்புரை, முன்னுரை ஆகியன எதுவுமில்லை. முதற்பக்கமே பதிப்பு விவரங்களை அறிவிக்கும் வகையில் அமைந்துள்ளது. அடுத்த பக்கத்தில் இறைவணக்கம் போன்றதொரு செய்யுள் உள்ளது. இதனைத் தொடர்ந்து அடுத்த மூன்று பக்கங்களில் திரிசிரபுரம் சி. தியாகராசச் செட்டியாரால் செய்யப்பட்ட சிறப்புப் பாயிரம் (20 பக்கங்கள்) அமைந்துள்ளது. அதனைத் தொடர்ந்து 'பிழை திருத்தம்' (பக்கம்-வரி-பிழை-திருத்தம்) என்ற வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

பிழை திருத்தம் முடிந்தவுடன் இறையனார் அகப்பொருள் 60 நூற்பாக்களும் 180 பக்கங்களில் மிக நேர்த்தியான உரையொடு பதிப்பிக்கப் பெற்றுள்ளன. நூற்பாக்கள் தனிவகை எழுத்திலும் (சற்றுப் பெரியது) உரை (சற்றுச் சிறிய வகை எழுத்திலும்) பத்திப் பிரிப்புகளுடன் அச்சிடப்பெற்றுள்ளன. நூலின்கண் நூற்பா எது? உரை எது? உதாரணச் செய்யுள் எது? மேற்கோள் எது? எனத் தனித்தனியே விளக்கிடுமளவுக்கு இடைவெளியிட்டும், தள்ளியும் வெளியிடப்பட்டிருப்பது சிறப்பாகும். இதுவும் ஒரு பதிப்பு வளர்ச்சியே ஆகும்.

### 6. தொல்காப்பியம் – பொருளதிகாரம்

இறையனார் அகப்பொருள் பதிப்பித்த காரணத்தால் தொல்காப்பியப் பொருளதிகாரத்தைப் பதிப்பிக்கும் ஆர்வம் ஏற்பட்டது. 1868ஆம் ஆண்டு தொல்காப்பியம் - சொல்லதிகாரத்தைச் சேனாவரையர் உரையொடு பதிப்பித்தவர் ஆதலின் சி.வை.தா. தொல்காப்பியத்தின் அருமை பெருமைகளை நன்கு உணர்ந்திருந்தார். இதற்காகவே சென்னையிலிருந்து திருக்குடந்தை நகருக்கு 1885ஆம் ஆண்டு சென்று, தமிழ் நூல்களைச் சேகரித்தும், பரிசோதித்தும் வந்தார் சி.வை.தா. அப்போது தொல்காப்பியப் பொருளதிகாரத்தைப் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் உரையோடும், பலதேசச் சுவடிகளையும் பரிசோதித்து, சென்னை ஸ்காட்டிஷ் அச்சகத்தில் பார்த்திப ஆண்டு (1885) ஆவணி மாதத்தில் பதிப்பித்தார். இதன் விலை ரூ. 6.50 என்பது சி.வை.தா. அவர்களின் விளம்பரத்தின் வழி அறிய முடிகிறது.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தைப் பதிப்பிக்கும் நோக்கத்தைத் தமது பதிப்புரையின்கண் அறிவித்துள்ளார் பின்வருமாறு:

> தமிழ் நாடனைத்திலும் உள்ள தொல்காப்பியப் பொருளதிகாரப் பிரதிகள் இப்போது இருபது இருபத்தைந்திற்கு மேற்படா. அவையும் மிக்க ஈனஸ்திதி அடைந்திருப்பதால் இன்னும் சில வருஷத்துள் இறந்துவிடுமென்று அஞ்சியே அதனை (தொல்-பொருள் அதிகாரம்) உலோ கோபகாரமாக அச்சிடலானேன்

தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்கு 12 பக்க பதிப்புரையோடு பதிப்பித்துத் தம் கவலையெல்லாம் மறந்தார் என்பார் டி.ஏ. இராசரத்தினம்பிள்ளை அவர்கள். தமது பதிப்புரையில்,

> தொல்காப்பியக் கல்வி அருகிப் பிற்கால இலக்கணப் பயிற்சி மிகுந்தமை, தொல்காப்பியம் கற்க விரும்புவார்க்கும் அது கிட்டாமை, தொல்காப்பியரைப் பற்றிய பழ மரபுக்கதை, காலம், வரலாறு, தொல்காப்பிய உரைகள், தாம் பதிப்பிக்கக் கொண்ட முயற்சி, அதில் ஏற்பட்ட துன்பங்கள் ஆகியன பற்றி விரிவாக எழுதி யுள்ளார்.

மேற்கூறியவற்றால் **சி.வை.தா. பதிப்புரைகள் எழுதுவதில் முன்னோடி என்பதும், தொல்காப்பியப் பதிப்பு முன்னோடி** என்பதும் தெளிவாகும்.

### 7. கலித்தொகைப் பதிப்பு

1887ஆம் ஆண்டு சர்வஜித்து வருடம் ஆடிமாதம் சென்னை ஸ்காட்டிஷ் அச்சகத்தில் **நல்லந்துவனார் கலித்தொகையினை** மதுரை பாரத்துவாசி நச்சினார்க்கினியர் உரையோடும், யாழ்ப்பாணம் சி.வை. தாமோதரம்பிள்ளையவர்களால் பலதேசச் சுவடிகளையெல்லாம் பரிசோதித்து, ஸ்ரீதொண்டமான் புதுக்கோட்டை மகராசாவின் மந்திரியும், பிரதிகாவலருமாகிய கௌவர அ. சேஷைய சாஸ்திரிகள், சி.எஸ்.ஐ. காருண்யோப கார திரவியத்தைக் கொண்டு பதிப்பிக்கப்பட்டது என்று நூலின் முகப்புப் பக்கம் தெரிவிக்கின்றது. நூலின் விலை ரூ. 3.50 ஆகும்.

இந்நூலுக்கு **34 பக்க அளவில் நீண்ட பதிப்புரை** ஒன்றினை எழுதியுள்ளார். பதிப்பின் முதற்பக்கத்தில் பதிப்பு விவரம் சில தரப்பட்டுள்ளன. இரண்டாம் பக்கத்தில்

**உரையாசிரியர் சிறப்பு** எனும் தலைப்பில் ஒரு செய்யுளும் காணப்படுகின்றது.

கலித்தொகைப் பதிப்புரையில் ஏறக்குறைய மூன்று பக்கங்களில் நச்சினார்க்கினியரைப் பற்றி விரிவாக ஆய்ந்துள்ளார். **பரிமேலழகருடனும் சிவஞான முனிவருடனும் ஒப்பிட்டும்** எழுதியுள்ளார்.

மூன்று, நான்கு ஆகிய பக்கங்களில் சிறப்புப் பாயிரமும் அதனைத் தொடர்ந்து பதிப்புரையும், முதற்குறிப்பகராதியும், பிழைதிருத்தமும் (நான்கு பக்கங்களில்) பதிப்பித்து அவற்றின் பின்னரே கலித்தொகையைப் பதிப்பித்துள்ளார். முதற்குறிப் பகராதி மூன்று பக்கங்களில் அமைந்துள்ளது. அது பாடல் முதற் குறிப்பு, என்ன கலி, எந்தச் செய்யுள், எந்தப் பக்கம் ஆகிய விவரங் களைக் கொண்டு விளங்குகிறது.

| **முதற்குறிப்பு** | **கலி** | **செய்யுள்** | **பக்கம்** |
|---|---|---|---|
| அகலாங்கணிரு | நெய்தல் | 26 | 450 |

1887ஆம் ஆண்டு மலர்ந்த கலித்தொகைப் பதிப்பு ஆய்வுப் பதிப்பின் (Critical Edition) தொடக்கம் எனலாம். யாழ்ப்பாணத்துத் தமிழறிஞர் சி.வை. தாமோதரம்பிள்ளையே பதிப்புப் பணியின் முன்னோடி என்பதற்கு மேலே கூறியவையே சான்றெனத் திகழ் கின்றன.

### 8. இலக்கண விளக்கப் பதிப்பு

1889ஆம் ஆண்டு (விரோதி ஆண்டு - ஐப்பசி மாதம்) 20 பக்கப் பதிப்புரையுடன் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். இந்நூலை இன்றைக்கு 2000 வருஷத்திற்கு முன்னால் திருவாரூரி லுள்ள அபிஷேகத்தார் மரபில் வந்த **வைத்தியநாத நாவலர்** அருளிச் செய்தார். 941 நூற்பாக்களால் இயன்ற இந்நூலை 851 பக்கங்களில் இருமுறை பதிப்பித்துள்ளார். பேரிலக்கணமாகிய தொல்காப்பியத்தை எளிய நடையில் இனிமையுறக் கற்கவும், சாதாரணமானவர்களும் புரிந்து கொள்ளும்படியாகவும் **இலக்கண விளக்கம்** எழுதப்பட்டுள்ளது என்று தமது பதிப்புரையில் கூறியுள்ளார். பொருளதிகாரத்திலேயே அணியியலும், செய்யுளியலாகிய யாப்பிலக்கணமும் அமைவ துடன் பாட்டியலும் அமைந்து இந்நூல் அறுவகை இலக்கண

முடையதாகவே விளங்குகிறது. நூற்பா முதலிலும், விளக்கவுரை, பதவுரை, சிறப்பு விளக்கம் முதலாயின அமையப்பெற்றுள்ளன. பக்க எண்கள், நூற்பா எண்கள், இயலெண்கள் ஆகிய அனைத்தும் தமிழெண்களாகவே அமைந்துள்ளன.

### 9. சூளாமணிப் பதிப்பு

ஐந்து சிறு காப்பியங்களுள் சிறந்ததாகக் கருதப்படுவது சூளாமணியாகும். இந்நூலை, யாப்பருங்கலக் காரிகைக்குரிய உரைக்கு மேற்கோளாக எடுத்துக் கூறப்படும் அரிய நூல் என்று கலித்தொகையின் பதிப்புரையில் சி.வை.தா. அவர்களே குறிப்பிட்டுள்ளார்கள். தோலாமொழித்தேவர் இயற்றிய சூளா மணியை, பல பிரதிகளைக் கொண்டு பரிசோதித்து, இரங்கூனிலிருக்கும் சில தமிழ் பிரபுக்களது காருண்ய திரவியோப கார சகாயத்தினால், சென்னப் பட்டணம் வித்தியாநுபாலன யந்திர சாலையில் பதிப்பிக்கப்பட்டது என்பார் சி.வை.தா. விரோதி வருடம் கார்த்திகை மாதம் 1889 (இதன் விலை ரூபாய் 1.50).

- முகப்புப் பக்கம் சில பதிப்பு விவரங்களைக் கொண்டு விளங்குகிறது.
- அடுத்து 17 பக்க அளவிலான பதிப்புரை ஒன்றும், அதனைத் தொடர்ந்து, புதுத்திருத்த உதாரணம் ஒன்றனைச் சுருக்கம், செய்யுள், பாடம், திருத்தம் என்பவற்றுடன் பதிப்பித் துள்ளார். இது சி.வை.தா. அவர்கள் பின்பற்றிய பதிப்பின் சிறப்பம்சமாகும். மேலும் இந்நிலை மூலபாட முயற்சியை விளக்கும் வகையில் அமைந்துள்ளது எனலாம்.
- நான்கு பக்க அளவில் சூளாமணி சிறப்புப் பெயரகராதி ஒன்றும் பதிப்பிக்கப்பெற்றுள்ளது.
- 19 பக்கச் செய்யுளகராதியும், பக்கம், வரி, பிழை, திருத்தம் ஆகியனவற்றுடன் கூடிய பிழை திருத்தப்பகுதியும் காணப் பெறுகின்றன.

இந்நூலை அச்சிடப் பெரும் தூண்டுகோலாய் அமைந்தவர் திரு. சுப்பிரமணிய தேசிக மூர்த்திகளே.

### 10. தொல்காப்பியம் – எழுத்ததிகாரப் பதிப்பு

இது சி.வை.தா. அவர்கள் பதிப்பித்த பத்தாவது நூலாகும். இந்நூல் 1848ஆம் ஆண்டு மழவை மகாலிங்க ஐயர் தொல்காப்பிய

எழுத்ததிகாரத்தை நச்சினார்க்கினியர் உரையுடன் பதிப்பித் திருந்தும், அப்பதிப்பு சி.வை.தா. காலத்தில் அருகிவிட்ட காரணத் தால் தான் பதிப்பிக்கப்பட்டது. நான்கு பக்க அளவிலான சிறிய பதிப்புரையுடனும், விளம்பரத்துடனும், 1891-ஆம் ஆண்டு (கர ஆண்டு -வைகாசித் திங்கள்) சிறப்புப் பாயிரத்தையும் சேர்த்து 298 பக்கங்களில் பதிப்பித்தார்.

நூலின் இறுதியில் இயல்வெண்பா, சூத்திர எண்ணிக்கை வெண்பா ஆகியனவும் சூத்திர அகராதியும் இடம்பெற்றுள்ளன. தொடர்ந்து நூலின்கண் அடிக்குறிப்புகளும் காணப் பெறு கின்றன.

### 11. தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - நச்சினார்க்கினியர் உரையுடன்

தொல்காப்பியம் சொல்லதிகாரம் - நச்சினார்க்கினியர் உரையைப் பதிப்பித்து வெளியிட்ட நூல் வரிசை பதினொன்றாம். இந்நூலைப் பதிப்பித்ததால், தொல்காப்பியம் முழுமைக்கும் நச்சினார்க்கினியர் உரையை முழுமையும் வெளியிட்ட பெருமை சி.வை.தா. அவர்களையே சாரும். 1892ஆம் ஆண்டு (நந்தன ஆண்டு, புரட்டாசித் திங்கள்) சென்னை விக்டோரியா ஜூபிலி யந்திர சாலையில் சி.வை.தா. அவர்கள் பரிசோதிக்க, தி. குமார சாமிச் செட்டியாரின் பொருளுதவியால் பதிப்பிக்கப்பட்டன என்று கூறுதலே பொருத்தம். இந்நூலில் பதிப்புரை இல்லை. நன்றிக் கூற்றும் விளம்பரமும் உண்டு. 300 பக்கங்களைக் கொண்ட நூல். நூலிறுதியில் நூற்பா எண்ணிக்கை வெண்பாவும், சூத்திர அகராதியும் உள்ளன.

### தொகுப்புரை

- சி.வை.தா. தம் காலத்து நூல்களில் தேவை இவை, என்றும், அருகியவை இவை என்றும் உணர்ந்து பதிப்புப் பணியினைத் தொடர்ந்தது அவரது வரலாற்றுணர்வையும் கால நிர்ணய அறிவையும் பாராட்டி இன்புறத்தக்கது எனலாம்.

- நூலுக்கு உரை எழுதிய உரையாசிரியரின் பெருமையை விரிவாக எழுதியிருப்பது போற்றத்தக்கது.

- ஏடுகளைப் பதிப்பிக்கப் பொருள் வேண்டலும், அதற்கு உதவியவர்களையும், மறவாமல் போற்றுவதும் அவர்களுக்கு நன்றி கூறலும் சிறந்த பகுதியாம்.

❄ பதிப்புரைகள் அவரது தனித்திறனையும், தமிழறிவு புலமையும் வெளிக்காட்டுவனவாக அமைந்துள்ளன.

❄ சி.வை.தா. நூல்களைப் பதிப்பிக்கும் போது ஏற்பட்ட இடர்ப்பாடுகள், சிரமங்கள் முதலான செய்திகள் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது.

❄ சி.வை.தா. அவர்கள் தமிழுக்காற்றிய தொண்டுகள் அளவற்றன. இருப்பினும் அவரைத் தமிழுலகம் **பதிப்புத் துறையின் முன்னோடி** என்று கூறல் சாலப்பொருந்தும்.

இவ்வாய்வுக் கட்டுரை எழுதத் துணைநின்ற நூல்களும், ஆசிரியர்களும் நன்றிக்குரியவர்கள். அவர்களுள் குறிப்பிடத் தகுந்தவர்கள் : ப. தாமரைக் கண்ணன் எழுதிய ஈழத் தமிழறிஞர் தாமோதரம்பிள்ளை எனும் நூல்; எஸ். வையாபுரிப்பிள்ளை எழுதிய சி.வை. தாமோதரம்பிள்ளை எனும் நூல்; ச.வே. சுப்பிரமணியன் எழுதிய சி.வை. தாமோதரம்பிள்ளை எனும் நூல்.

◆

# தமிழ் வளர்த்த தாமோதரனார்

**கல்வி**

தொடக்கக் கல்வியும் வளர்கல்வியும் தந்தையாரிடமே கற்றார் தாமோதரனார். அறநூல்கள், சொற்பொருள் கூறும் நிகண்டு நூல்கள் ஆகியவற்றைக் கற்றபின்னர், மேனிலை நூல்கள் கற்க விரும்பினார் தாமோதரனார். சிறுபிட்டிக்கு அருகிலமைந்த சுன்னாகம் (சுன்னை) முத்துக்குமாரக் கவிராயரை அணுகி அடுத்து இலக்கிய இலக்கணப் புலமைபெற்றார். முத்துக்குமாரர் கொடை மாண்பே தாமோதரர் தண்டமிழ்த் தொண்டின் வித்தும் விளைவுமாய் அமைந்தது எனலாம். வீரசோழியம், கலித்தொகை, இலக்கண விளக்கம், சூளாமணி, தொல்காப்பியம் ஆகிய பதிப்புகளில் தம் தமிழாசிரிய வணக்கம் தெரிவித்துள்ளார் தாமோதரர்.

**மேற்கல்வி**

தமிழ்க் கல்வி கற்றுச் சிறந்த பின்னே தாமோதரர்க்கு ஆங்கிலம் கற்கவேண்டும் என்ற விருப்பம் உண்டாயிற்று. அதனால் தெல்லியம்பதி அமெரிக்க மிசன் கலாசாலை வட்டுக் கோட்டைக் கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கல்லூரி ஆகியவற்றில் பயின்றார். அக்கல்லூரியில் 1844இல் சேர்ந்து 1952ஆம் ஆண்டு வரை எட்டாண்டுகள் பயின்றார். சிறந்த தேர்ச்சி பெற்றார். பயிலும் காலத்திலேயே 'தமிழ்ப் புலவர்' என்னும் பட்டத்தைத் தம் ஆசிரியர்கள் பாராட்டுமுகத்தான்தர, ஆங்கிலத்திலும் பிற துறைகளிலும் சிறந்து விளங்கினார். கோப்பாய் ஆசிரியப் பயிற்சிப் பள்ளியில் ஆசிரியப் பணியை உடனே பெற்றார். அப்பொழுது தாமோதரர் அகவை இருபதே.

**ஆசிரியர்**

ஆசிரியப் பயிற்சிப் பள்ளியில் பணி செய்து கொண்டிருக் கும் போதில் அவரைப் பற்றிச் சிறப்பாகப் பலராலும்

கேள்விப்பட்ட திருத்தந்தை பெர்சிவல் (Rev. P. Percival) விரும்பி அழைத்தவாறு, இந்திய நாட்டுக்கு வந்து "தினவர்த்தமானி" என்னும் இதழாசிரியப் பொறுப்பு ஏற்றார்.

### தினவர்த்தமானி

பெர்சிவலார் கிறித்தவத் திருமறையை ஆறுமுக நாவலரைக் கொண்டு மொழியாக்கத் திருத்தம் செய்து வெளியிட்டவர். தினவர்த்தமானி எனப்படும் கிழமை (வார) இதழின் ஆசிரியராக இருந்தவர். இவ்விதழ் வியாழக்கிழமை தோறும் வெளிவந்தது. நாட்டில் உள்ள செய்திகள், இலக்கியம், அறிவியல் ஆகியவை அதில் இடம்பெற்றன. இவர் அவ்விதழில் இருந்து ஓய்வு பெறும் போது அவ்விடத்திற்கே நம் தாமோதரரை அமர்த்தினார். தாமோதரனார் எழுத்துத்திறம், பலவகைகளில் ஊற்றம் பெறுவதற்கு ஊற்றுக் கண்ணாக இருந்தது இவ்விதழ்ப் பணியாகும்.

### இதழாசிரியர்

இதழாசிரியராகத் தாமோதரர் இருந்து கொண்டே கற்பிக்கும் ஆசிரியராகவும் விளங்கினார். தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிப்புலமை வாய்ந்திருந்த தாமோதரர் ஆங்கிலப் பெருமக்கள் சிலர்க்குத் தமிழ் கற்பித்தார். அவ்வாறு இவரிடம் பயின்றோருள் பேராசிரியர் பர்னல், சர் வால்டர் எலியட், லூசிங்டன் என்பவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

### பேராசிரியர்

ஆங்கிலப் பெருமக்களுக்குத் தமிழ் கற்பித்துச் சிறந்தசெய்தி அரசுக்கு எட்டியது. எட்டவே சென்னை, மாநிலக் கல்லூரித் தமிழாசிரியராகத் தாமோதரரை அமர்த்த அரசு விரும்பியது. அவ்வாறே அமர்த்தமும் பெற்றார். அக்கல்லூரிப் பணியில் இருக்கும்போது சென்னைப் பல்கலைக்கழகம் உருவாயிற்று. அதனால் அப்பல்கலைக்கழகத் தேர்வு எழுத விரும்பினார் தாமோதரனார். அதனால் 1857இல் பல்கலைக்கழகம் முதன் முதலாக நடாத்திய நுழைவுத் தேர்விலும் அதன் பின் அடுத்தே நடந்த இளங்கலை (பி.ஏ.) தேர்விலும் சிறந்த வெற்றி பெற்றார். அவ்வெற்றி கள்ளிக்கோட்டை அரசுக் கல்லூரித் துணையாசிரிய ராய் அமரும் உயர்வைத் தாமோதரர்க்குத் தந்தது. அக்கல்லூரிப் பணியில் தாமோதரர் காட்டிய திறமை சென்னை அரசு வரவு செலவுக் கணக்குத்துறை அலுவலராகும் வாய்ப்பை வழங்கிற்று.

**மணவாழ்வு**

கல்வியாலும் பதவிகளாலும் சிறப்புற்று வந்த தாமோதரர் 'அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை', 'அறத்தான் வருவதே இன்பம்' என்பவற்றை உணர்ந்து யாழ்ப்பாணம் தெல்லியம்பதி காலிங்கராயர் வழிவந்த வள்ளியம்மையை மணம் புரிந்தார். இருமகவுக்குத் தாயாகிய வள்ளியம்மை இயற்கை எய்தவே அவர் உடன் பிறந்தாராகிய முத்தம்மாள் என்பாரை மணந்தார். அவர் வழியாக மக்கள் அறுவர் பிறந்தனர். மனைவியர் இருவர் வழியும் மக்கள் எண்மர் பிறந்தனர். எனினும், அவருள் நெடுவாழ்வு கொண்டவர் ஒருவரே ஆவர். அவர் சி.தா. அழகு சுந்தரம் என்பார். ஏனையர் எழுவரும் பிள்ளைப் பருவம், காளைப் பருவம், திருமணம் முடித்த சில்லாண்டுகள் என்னும் நிலையில் முப்பது அகவைக்குள்ளாகவே முடிவு கண்டவர்கள் ஆயினர். இரண்டாம் மனைவியரை இழக்கும் நிலையும் உண்டாயிற்று. இவை தாமோதரர் உள்ளத்தை அசைத்தன; உருக்குலைத்தன. எனினும் அவர் தம் ஊற்றம் "ஆற்றுவார் மேற்றே" பொறை என்று கொண்டு தாங்கியது.

**குடும்பச் சுமை**

தாமோதரர் தம் தந்தையாரை இளம் பருவத்திலேயே இழந்தவர். குடும்பத்தில் தலைமகனாராகத் தோன்றியவர். அதனால் கறையானால் அரிக்கப்பட்ட அடிமரம் வீழ்ந்துவிட்ட போதில் அதன் விழுதால் தாங்கப்படும் ஆலமரம்போலத் தாமோதரம்பிள்ளை தம் பெரிய குடும்பப் பொறையைத் தாங்கும் கடப்பாட்டில் தலைப்பட்டு நிற்கும் கட்டாயத்திற்கு ஆட்பட்டு அதனைச் செம்மையாகச் செய்து முடித்தவரும் ஆவர். அப்பயிற்சியும் உள்ள உறுதியுமே தம் தனிக்குடும்ப இழப்புகளையும், பொறுப்புகளையும் தாங்கும் உறுதியைத் திடமாகத் தந்தன என்க.

தாமோதரனார் குடும்பத்துக்குத் தலைமகனாப் பிறந்து தந்தை யெனக் குடிதாங்கிய தகவினை

> தந்தையெமை இளவயதில் தணந்திடநீ அன்றுமுதல்
> தந்தையாகி
> வந்தபல இடரகற்றி வாழ்வெமக் கீண்டளித்துவந்து
> வந்தாய் உன்றன்

சிந்தைமிக நொந்திடயாம் செய்தபிழை பலவெனினும்
சிந்தியாது
முந்தையினும் அருள்காந்த முன்னவனே இனிஎன்னுன்
முகம் காண்போமே

என இவர் இயற்கை எய்தியபோது இவர் இளவல் சி.வை. சின்னப்பர் பாடிய இரங்கல் பாடலால் அறியலாம். இவர்க்குத் தமிழ் கற்பித்த ஆசிரியரும் தாமோதரரே என்பதும் குறிப்பிடத் தக்கது.

குடும்பக் கடமைகளைக் குழந்தைப் பருவந்தொட்டே இனிது செய்துவந்த தாமோதரர் தாம் மேற்கொண்ட பணிக் கடமைகளையும், பாராட்டுமாறு செய்தார். இவ்விரண்டன் இடையேயும் இடையறவு இல்லாமல் இறுதிக்காலம் வரை செய்துவந்த தமிழ்த்தொண்டு ஈடுஇணையற்றதாகும். அத்தொண்டே தமிழ் வாழும் காலத்தளவும் வாழும் நிலைபெற்ற புகழை அவருக்கு வழங்கிற்று.

**கணக்குத்துறை**

சென்னை வரவு செலவுக் கணக்குத் துறையில் இவர் பணியாற்றி வந்தபோது ஒருநாள் அவ்வலுவலகத் தலைவர் விரைந்து முடிக்க வேண்டிய ஒரு கணக்கைத் தாமோதரரே தக்கவரெனத் தேர்ந்து அவரிடம் ஒப்படைத்தார். அப்போது 'இதனை யானே முடிப்பதாயின் ஒரு கிழமை (7 நாள்) ஆகும். நீர் பத்து நாள்களில் முடித்துத் தருவீரென நம்புகிறேன்' என்றார். 'அவ்வாறே ஆகுக' எனப் பணியை ஏற்றுக்கொண்ட தாமோதரர் நான்கே நாள்களில் முடித்துத் தந்தார். அதனைக் கண்ட அவ்வாங்கிலத் தலைமகனார் நீவிரென்ன இவ்வேலையை நும் இரு கைகளாலும் செய்து முடித்தீரோ'' என வியந்து பாராட்டினார். அப்பாராட்டும் நல்லெண்ணமும் தாமோதரர் உள்ளம், உழைப்பு, உயர்வு ஆகியவை போலவே பதவியுயர்வும் வழங்கின. அவ்வலுவலக ஆய்வுத் தலைமையையும் அது வழங்கிற்று. அப்போது பல்கலைக்கழகம் நடாத்திய சட்டத் துறைத் தேர்விலும் பட்டம்பெற வேண்டும் என்றும் ஆர்வம் தாமோதரர்க்கு ஏற்பட்டது. ஐம்பதாம் அகவை அரசுப்பணியில் இருந்து ஓய்வுபெற்று உதவித்தொகை பெறுவாராயினார். தாமோதரர் தண்டமிழ்த் தொண்டிலே புகுந்தார்.

**பதிப்பு**

ஓய்வு பெறுவதற்கு முதல் ஆண்டிலே (1881) வீரசோழியம் வெளியிட்டார். ஓய்வுபெற்ற மறு ஆண்டிலேயே (1883) திருத்

தணிகைப் புராணம்,· இறையனார் அகப்பொருள் என்னும் நூல்களைச் சுவடிகளை ஆய்ந்து அச்சிட்டு வெளியிட்டார். சென்னைப் பகுதியிலும் தென்னிலப் பகுதிகளே ஏடு தொகுத்தற்கு ஏற்றவையாக இருத்தலை எண்ணித் தம் இருப்பிடத்தைக் குடந்தைக்கு மாற்றிக் கொண்டார். ஆங்குக் குடியிருப்புக் கொண்ட இடம் கருப்பூர். ஆண்டு 1885. தான் பெற்றுள்ள சட்டத் துறைத் தேர்ச்சி எவ்விடத்திற்கும் பயன்படுவதாயிற்றே. அதனால் குடந்தையில் வழக்கறிஞர் தொழிலும் நடத்தினார் தாமோதரர். அத்துறை வழியாக வரும் வருவாய் அனைத்தும் தமிழ்நூல் பதிப்புக்கே பயன்படுத்தும் குறிக்கோளைக் கொண்டு உழைத்தார். 1885 ஆகிய அவ்வாண்டிலேயே தொல்காப்பியப் பொருளதி காரத்தை உரையுடன் வெளியிட்டார். அதனால் அவர்க்கு ரூபாய் 3500 செலவாயிற்று. நூல் விற்பனையாலும் நன்கொடை வகையாலும் செலவில் மூன்றில் ஒரு பகுதிதானும் கிட்டவில்லை. அந்நிலையை விரித்தெழுதி 1888 ஜூலை 15இல் ஓர் அறிக்கையில் விடுத்தார். இந்து இதழிலும் எழுதினார். இவ்வறிக்கைகள் வருவதற்கு முன்னரே இவர்தம் இழப்பினை அறிந்துகொண்டு உதவிய பெருமக்கள் இருவர். ஒருவர், சென்னை மாநிலக் கல்லூரிக் கணக்கியல் பேராசிரியராகத் திகழ்ந்தவரும் தமிழ்ப்புலமையில் தலைநின்றவருமாகிய பூண்டி அரங்கநாதர். மற்றொருவர் மைசூர் உயர்முறை மன்ற நடுவராக விளங்கியவ ராகிய அ. இராமச்சந்திரன். அறிக்கை கண்ட பின்னர் அவ்விழப்பை ஈடுசெய்யும் அளவில் பலர் உதவினர். அவர்களுக் கெல்லாம் நன்றியுரைத்தார். ஏடுவழியாகவும் உதவி வழியாகவும் பேருதவி செய்த திருமடம் திருவாவடுதுறை என்பது அறியத்தக்க செய்தியாகும். திருமடத்துத் தலைவராக இருந்தவர் தவத்திரு சுப்பிரமணிய தேசிகர் என்பார். கலித்தொகைச் சுவடிகள் வழங்கிப் பதிப்பிக்கத் தூண்டியவர் அவரே. அதற்குப் பொருளுதவி புரிந்தவர் புதுக்கோட்டை அரசின் அமைச்சராக விளங்கிய சேசையா ஆவர். கலித்தொகைப் பதிப்பு 1887இல் வெளிவந்தது.

### நடுவர்

பேரன்பும் பெருந்தன்மையும் கொண்ட அமைச்சர் சேசையா தாமோதரர் தொடர்பு, நூல் வெளியீட்டு அளவில் நிற்கவில்லை. தாமோதரர் புதுக்கோட்டை அரசின் முறைமன்ற நடுவர்களில் ஒருவராகவும் அமர உதவிற்று. அதனால் 1887 முதல் தாமோதரர் புதுக்கோட்டை வாழ்வினரானார்.

## பதிப்பு

ஒரு காலத்தில் இலக்கண விளக்க நூலுக்கு மாறாக இருந்த திருவாவடுதுறைத் திருமடம் தாமோதரர் எடுத்துக்கொண்ட நன்முயற்சியால் சுவடிதந்து வழக்கம்போல் உதவியது. சமணம் சார்ந்த நூலாகிய சூளாமணி வெளியிடவும் தூண்டி உதவியது.

## இலக்கண விளக்கம்

போடி குறுநில மன்னர் திருமலைபோடய காமராச பாண்டியர் உதவியால் 1889இல் வெளிவந்தது.

## சூளாமணி

தாமோதரரின் இளவல் சி.வை. இளையதம்பியும் அவர் நண்பர்களும் புரிந்த உதவியால் அதே ஆண்டில் வெளிவந்தது.

## இன்பமும் துன்பமும்

சூளாமணி வெளிவந்த இன்பியல் ஒருபால். அதே ஆண்டில் தம் தலைமகனார் சி.வை. நல்லதம்பி தம் இருபத்தாறாம் அகவையில் இளமனைவியையும் இருமக்களையும் விடுத்து இயற்கை எய்திய துன்பியல் ஒருபால். அந்நிலையில் 1890இல் தாம் ஏற்றிருந்த முறைநடுவர் பொறுப்பை விடுத்து யாழ்ப்பாணம் சென்று சிலகாலம் தங்கினார். 1882ஆம் ஆண்டே தம் இரண்டாம் துணைவியையும் இழந்துவிட்டார். இந்நிலையில் குடும்பச் சூழல் கருதி மூன்றாம் மணமும் புரிந்தார். பின்னர் சிங்காரவேல், வெற்றிவேல் என மக்கள் இருவரும் அவர் வழியே தோன்றினர். 1890இல் தாமோதரர் தம் குடும்பத்துடன் மீளவும் சென்னைக்குச் சென்றார். புரசபாக்கத்தில் குடியமர்த்திக் கொண்டார்.

## சிறப்புகள்

சென்னை சேர்ந்த பின்னர்த் தொல்காப்பிய எழுத்ததி காரத்தை நச்சினார்க்கினியர் உரையுடன் வெளியிட விரும்பிச் சுவடிகளை ஆய்ந்தார். கல்வி வழியாலும், பதிப்பு வழியாலும், பதவி வழியாலும் நன்கு அறியப்பட்டிருந்த தாமோதரர் பல்கலைக்கழகப் பாடநூற்குழு, பதிப்புக்குழு, சட்டக்குழு, தேர்வுக்குழு, ஆட்சிக்குழு ஆகியவற்றில் உறுப்பாண்மை பெற்றுத் திகழ்ந்தார். தமிழ்ப்பாடத் தேர்வுக்குழுவின் தலைவராகவும் விளங்கினார்.

## இராவ்பகதூர்

தாமோதரர் செய்துவந்த தமிழ்த்தொண்டு, கல்வித் தொண்டு, முறைத்தொண்டு ஆகியவற்றை நன்கறிந்த அரசு அவரைச் சிறப்பிக்கக் கருதி, 'இராவ்பகதூர்" என்னும் மதிப்புறு விருதினை 1895ஆம் ஆண்டு வழங்கியது. அதனை அறிந்த மைசூர் அரசு தாமோதரரை அழைத்துப் பாராட்டெடுத்துப் பரிசு வழங்கியது. ஆங்கிலப் பெருமக்கள் செல்வர்கள், திருமடத் தலைவர்கள் ஆகியோரெல்லாம் தாமோதரர் பெற்ற சிறப்பினை வரவேற்றுப் பாராட்டினர்.

## உடல்நிலை

புலமையாலும் புகழாலும் பெருகிவந்த தாமோதரனார் உடல்நலக் குறைவாலும் நெருக்குற்றார். அந்நிலையில் ஈழத்திற்குச் சென்று கீரிமலைப் பகுதியில் உறைந்தார். முன்னர் இருமுறை "அரசபிளவை" என்னும் நோய்க்கு ஆட்பட்டதுண்டு. எனினும் இம்முறை (1896) ஏற்பட்ட அந்நோயால் இறுதியே நேருமென அவரும் எண்ணினார். உற்றார் உறவினரும் எண்ணிச் சோர்ந்தனர். எனினும் அக்கட்டியும் இக்கட்டு ஏற்படுத்தாமல் தீர்ந்தமை அனைவரையும் மகிழ்வித்தது. உடல்நலம் பெற்றுச் சிறிதுகாலம் யாழ்ப்பாணத்தில் தங்கினார். அக்காலத்தில் அவர் தம் இளையமகளார் சிவபாக்கியம் என்பார் இயற்கை எய்தினார். பட்டுப்பட்டுப் பழக்கமாகிப் போவதுதானே உள்ளம். ஒருவாறு தேறி, ஈழத்தில் இருந்து சென்னைக்கு வந்தார் தாமோதரர். அவர்க்கு அமைதியும் நிறைவும் தந்ததாகிய பதிப்புப் பணியைத் தொடர்ந்தார். எட்டுத்தொகையுள் ஒன்றாகிய அகநானூற்றைப் பதிப்பிக்க வேண்டும் எனக் கருதித் தக்க தமிழ்ப் புலமையர் இருவரை ஒருங்கமர்த்திக் கொண்டு ஆய்வு செய்தார். மணிமிடைப் பவளம் வரையில் ஆய்வு நிகழ்ந்தது. அதனை முற்றுவிக்கு முன்னர்த் தம்முன்னே பதிப்பித்த சூளாமணியை உரைநடையில் எழுதி "வசன சூளாமணி" என்னும் பெயரால் 1898இல் வெளியிட்டார்.

## இயற்கை எய்துதல்

ஆண்டு 1900, கார்த்திகைத் திங்களில் தாமோதரர் உடல் நிலை மிகச் சீர்கேடானது. இருமல் பெருகியது. செரிப்புக் குறைந்தது. மருத்துவம் ஆங்கிலமுறை, சித்தமுறை, யுனானி முறை எனப் பார்த்தும் நலமுண்டாகவில்லை. தமக்கு மருத்துவம் செய்து

கொள்வதிலும் அக்கறை அற்றார் தாமோதரர். மருந்துண் பதையும் வெறுத்தார். மருந்து உட்செல்லுதலும் அரிதாயிற்று. 1901 சனவரி முதல்நாள் செவ்வாய் காலை 9.30 மணிக்குத் தாமோதரர் இயற்கை எய்தினார். அவர் தம் உடன்பிறந்தோர் ஆகிய சி.வை.சின்னப்பாவும், மகனாராகிய அழகு சுந்தரும் அருகிருக்க சுற்றமும் நட்பும் சூழ்ந்திருக்கத் தாமோதரர் அமைதியுற்றார். அன்று பிற்பகலில் புரசைவாக்கம் சுடுகாட்டில் அவர்தம் உடலம் எரியூட்டப்பட்டது. தமிழ்ப் புலமை சான்ற பெருமக்கள் பலர்புடை சூழ்ந்திருந்து இரங்கலும் கையறு நிலையும் உரைத்தனர். பரிதிமாற் கலைஞர் கையறுநிலை பாடினார். யாழ்ப்பாணம் நா. கதிரைவேலரும் பிறரும் இரங்கல் உரைத்தனர்.

## இறுதிமுறி

தாமோதரனார் ஓர் இறுதிமுறி எழுதிவைத்திருந்தார். அதில் சில திட்டங்கள் ஏற்படுத்தி அவற்றைத் தம் கடைசி மனைவியின் வழிவந்த மக்கள் நிறைவேற்றுவரானால் தம் சொத்து முழுவதும் அவர்களிடத்து ஒப்பிக்கப்படவேண்டும் என்றும் அவ்வாறு நிறை வேற்றத் தவறினால் செந்தமிழ் வளர்ச்சியின் பொருட்டு ஈழத்தில் ஒரு கல்லூரி ஏற்படுத்துமாறு அரசிடம் ஒப்படைத்தல் வேண்டும் என்றும் தம் ஏட்டுப்படிகள் கைப்படிகள் ஆகியவை திருவாலங் காட்டிலுள்ள செந்தமிழ்ப் பிரியாலன மடத்தில் சேர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் தாம் வழிபட்டு வந்த சிவலிங்கமும் அணிந்திருந்த உருத்திரா மாலையும் தம் ஆசிரியரை அடைய வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார். தம் மைந்தர் அழகு சுந்தரம் தக்க அலுவலில் அமர்ந்திருப்பதால் தம் சொத்தில் அவர்க்குப் பங்கு இல்லை என்றும் குறிப்பிட்டிருந்தார்.

தம் இறுதிமுறியில் தம் சொத்தை அடைவதற்கும் தம் மூன்றாம் மனைவியின் மக்கள் தக்க பருவத்தினராகி இந்தியப் பல்கலைக்கழகம் ஒன்றில் பி.ஏ. பட்டம் பெற்றுத் திருமணம் செய்த பின்னர் அடையலாம் என்று வரையப்பட்டிருந்த திட்டமும் தம் நூல்களை ஏலத்தில் விற்கப்பட்டு அதனையும் தம் சொத்தோடு சேர்க்கப்படவேண்டும் என்று குறிக்கப் பட்டதையும் பெருமை சேர்க்காதவை என்பர். இவர் வைத்திருந்த நூல்களைக் கொண்டு ஒரு நூலகமாக்கும் ஏற்பாட்டைச் செய்திருப்பின் பெரும்பயனாக இருந்திருக்கும் என்றும் குறிப்பர்.

யாழ்ப்பாணத்து ஏழாலை சைவப் பிரகாச வித்தியா சாலையை நிறுவியவர் தாமோதரர் என்பதும், ஆந்திரம் வடமொழி, ஆங்கிலம் தமிழ் ஆகிய நான்கு மொழிப்புலமையும் வாய்ந்தவர் தாமோதரர் என்பதும், பூண்டி அரங்கநாதர் இயற்றிய கச்சிக்கலம்பகம் பற்றிச் சென்னைக் கிறித்தவக் கல்லூரிச் செய்தி இதழில் சில "வழுக்கள் செறிந்த கலம்பகம்" என்றொரு கட்டுரை வந்ததாக அதற்குத் தாமோதரர் ஆங்கிலத்தில் A defence for the modern Kalambakam என்றொரு கட்டுரை எழுதி அக்கலம்பகப் பெருமையை நிலைப்படுத்தினார் என்பதும் அறியவரும் பிற செய்திகள்.

**பரிதிமாற்கலைஞர் (வி.கோ. சூரியநாராயண சாத்திரியார்)**

தாமோதரர் பரிதியைத் 'திராவிட சாத்திரி' என்றே வழங்கினார். வெனிசு வாணிகன் என்னும் ஆங்கில நூலின் ஒரு பகுதியைத் தந்து தமிழ்ப் பாடலாக்கித் தருமாறு பரிதியாரிடம் கோரினார் தாமோதரர். அதனைத் தமிழ்ப்பாடலே என்று விரைந்து பாடித்தந்தார் பரிதியார். அதனைக் கண்டு வியந்த தாமோதரர் உரைநடையில் இருக்கும் கடுமை, செய்யுள் நடையில் இல்லாமல் எளிமையாய் இருத்தலைக் கண்டார்.

தாமோதரர் விரும்பியவாறு விரும்பிய நடையில் 'மதிவாணன்' என்னும் புனைகதையை எழுதினார் பரிதியார். அது 1897ஆம் ஆண்டு முதல் "ஞானபோதினி" என்னும் மாசிகையில் பகுதி பகுதியாக வெளிவந்தது. 1902ஆம் ஆண்டில் அந்நூல் வெளி வந்தது. அப்போது தாமோதரர் உலக வாழ்வை நீத்துவிட்டார். அவர் வாழ்ந்த காலத்திலேயே முந்து நூல்வடிவம் பெறாமைக்குப் பரிதியார் மிக வருந்தினார்.

தாமோதரர் பிரிவாற்றாது கையறுநிலை பாடியோருள் பரிதியாரும் ஒருவர். அதில் தரவுக்கொச்சகம் ஒன்று. அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம் மூன்று. தரவு கொச்சகப்பாடல் வருமாறு:

**"காமோதி வண்டர் கடிமலர்த்தேன் கூட்டுதல்போல்**
**நாமோது செந்தமிழில் நன்னூல் பல தொகுத்த**
**தாமோதரம் பிள்ளை சால்பெடுத்துச் சாற்றவெவர்**
**தாமோதர முடையார் தண்டமிழ்ச் செந்நாப் புலவர்"**

**உ.வே. சாமிநாதையர்**

தாமோதரனார் மதித்துப் பாராட்டிய பெருமக்களுள் பெரும் பேராசிரியர் உ.வே.சாமிநாதையரும் ஒருவர். அவர் "என்

சரிதத்தில்'' தாமோதரர் பற்றி எழுதிய குறிப்புகள் சில. தொல்காப்பியம் முதலிய பழைய நூல்களை அச்சிடும் முயற்சியில் அவர் ஈடுபட்டிருந்தார். வீரசோழியத்தையும் அவர் வெளி யிட்டார். பிறகு இறையனாரகப் பொருளுரையையும் திருத் தணிகைப் புராணத்தையும் வெளியிடத் தொடங்கினார். திருவாவடுதுறை மடத்தில் பழைய ஏட்டுப் பிரதிகள் இருக்கின்றன என்பதை அறிந்து ஆதீனத் தலைவருக்கு அவற்றை அனுப்ப வேண்டுமென்று விண்ணப்பம் செய்து கொண்டார். சுப்பிரமணிய தேசிகர் அக்கடிதங்களை எனக்குக் காட்டி அவர் விரும்பிய நூற்பிரதிகள் இருக்கின்றனவா என்று தேடிப்பார்க்கச் சொன்னார். தாமோதரம்பிள்ளை இறையனாரகப் பொருளுரை கேட்டிருந்தார். அதில் 59ஆவது சூத்திரத்தில் உரையின் பிற்பகுதி தமக்குக் கிடைக்கவில்லை என்றும் கிடைத்தால் அனுப்ப வேண்டும் என்றும் எழுதினார். மடத்திலே தேடிப்பார்த்தபோது இறையனாரகப் பொருளுரையின் பழையபிரதி ஒன்று அகப் பட்டது. அதில் அந்தச் சூத்திர உரை முற்றும் இருந்தது. உடனே அந்தப்பிரதியைத் தாமோதரம்பிள்ளைக்குக் சுப்பிரமணிய தேசிகர் அனுப்பிவைத்தார். தாங்கள் எழுதியருளிய கடிதம் வந்து மூன்றாம் நாள் ஸ்ரீ பெரிய சந்நிதானம் கட்டளையிட்டு அருளிய இறையனாரகப் பொருட்பிரதியும் தபால் மார்க்கமாக வந்து சேர்ந்தது. 59ஆவது சூத்திர உரையின் கடைசிப்பாகமும் கண்டு மகிழ்வுற்றேன்.

திருத்தணிகைப் புராணத்தின் முதலிலே ஸ்ரீலஸ்ரீ கச்சியப்ப சுவாமிகளது சரித்திரத்தைச் சுருக்கமாய் அச்சிட விரும்புகின்றேன். ஆதலால் தாங்களாவது ஸ்ரீமத் இராமசாமி பிள்ளையாவது அச்சரித்திரத்தை விரைவில் எழுதியனுப்பினால் "அடியேன் மிக்க நன்றியறிவுள்ளவனாயிருப்பேன்." யார் அதனை எழுதியனுப்பினும் இன்னாரால் எழுதப்பட்டதென்பதை அதில் குறித்துக்காட்ட அடியேனுக்கு உத்தரவும் கொடுக்க வேண்டியது. பங்குனி மதியில் உற்பத்தியான தங்கள் சினேகம் பற்குனன் போலச் சீர் பெருகுவதாக என்று கடிதத்தில் சி.வை. தாமோதரம்பிள்ளை, உவே.சா.விற்கு எழுதியிருந்தார். தணிகைப் புராணக் குறிப்புகளை இராமசுவாமி பிள்ளையிடமிருந்து பெற்றுக்கொண்டும் அவர் என்ன காரணத்தாலோ பதிப்பிக்கவில்லை. நல்ல பொருள் கிடைத்ததென்று மிக்க மகிழ்ச்சியோடு உபயோகப்படுத்திக் கொள்ளத் தெரியவில்லையே என்று நான் எண்ணினேன். சுப்பிரமணிய தேசிகரும் அதே கருத்தை உடையவராக இருந்தார் என்கிறார்.

தாமோதரம்பிள்ளை கும்பகோணத்திற்கு வந்து வசிக்கப் போகிறார் என்பது தெரிந்து எனக்கு ஓர் ஆறுதல் உண்டாயிற்று. சேலம் இராமசாமி முதலியார் கூறியபடி பழைய நூல்களை ஆராய்வாரும் படிப்பாரும் இல்லாமல் பிற்கால நூல்களையே படிப்பவர்கள் மலிந்த தமிழ்நாட்டில் எனக்குத் துணை செய்வார் ஒருவரும் இல்லை. இந்நிலையில் பழங்காலத்துத் தமிழ் நூல்களை அச்சிடும் விஷயத்தில் ஊக்கமுள்ள ஒருவர் கும்பகோணத்துக்கு வரப்போகிறார் என்று அறிந்தவுடன் எனக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று.

உ.வே.சா.விடம் சிந்தாமணி விசேஷ உரையுள்ள பிரதி யொன்று இருக்கிறதென்றும் அது நல்ல பிரதி என்றும் சென்னையில் நாவலர் பதிப்பு நூல்களை மீட்டும் பதிப்பித்து வந்த சதாசிவ பிள்ளை சொன்னார். சிந்தாமணியைப் பதிப்பிக்கலாம் என்று நான் எண்ணியிருக்கிறேன். கொழும்பில் இருக்கும் பெரிய பிரபுவாகிய கனம் ராமநா தனவர்கள் அதன் பதிப்புக்கு வேண்டிய செலவு முழுவதையும் தாம் கொடுப்பதாக எனக்கு வாக்களித்திருக்கிறார். தங்கள் பிரதியைக் கொடுத்தால் என்னிடமுள்ள பிரதியோடு ஒப்பிட்டுக்கொண்டு பதிப்பிப்பேன் என்றார். உ.வே.சா.விற்குச் சேலம் இராமசுவாமி முதலியார் வேண்டிய உபகாரங்களைச் செய்வதாக வாக்களித்திருக்கிறார். உடனே பிள்ளை அவர்கள் உ.வே.சா.விடம் கும்பகோணம் புராணம் போன்றதன்று இந்நூல். இதைப் பதிப்பிக்க வேண்டிய முறையே வேறு. சென்னைக்கே போய் அங்கே நேரில் இருந்து காரியத்தை முடிக்கவேண்டும்.

உ.வே.சா.வின் தந்தைக்குத் தன்மகனே சிந்தாமணியைப் பதிப்பிக்க வேண்டும். ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் காப்பாற்றுவார். கொடுத்த பிரதியைத் திருப்பி எப்படிப் பிள்ளையிடம் இருந்து வாங்குவது என்று யோசித்தேன். ஒன்றும் தோன்றவில்லை. என் தம்பி சிரஞ்சீவி சுந்தரேசனுடன் தாமோதரம்பிள்ளையின் வீட்டுக்குச் சென்றேன். என் வருகையை எதிர்பார்த்த பிள்ளையவர்கள் என் பிரதியை என் கையில் கொடுத்துச் சில சந்தேகங்கள் கேட்கத் தொடங்கினார். அப்போது யாழ்ப்பாணம் அம்பிகை பாக உபாத்தியாயர் என்பவரும் உடன் இருந்தார். “வென்றிக்களிற்றை விரிதாவரன் வென்றவாறும்” என்பதற்குப் “பிறரை முன்பு வென்ற வெற்றியையுடைய களிறு” என்று உரை எழுதியிருக்கிறதே என்ன விஷயம்? என்று கேட்டார். அதையும் விளக்கமாகச் சொன்னேன். ‘பொருளுதவி கிட்டும்போது நூலைப்

பதிப்பித்து விட்டால் படிப்பவர்கள் பொருள் செய்து கொள்வார்கள்' என்று சொன்னார். விஷயம் தெரியாமல் வெளி யிட்டால் படிப்பவர்கள் எவ்வாறு தெரிந்து கொள்வார்கள்? நான் ஒருவகையாக வரையறை செய்து வைத்திருக்கிறேன். ஆதலால் இந்தக் காரியத்தை நானே செய்வேன். என் முயற்சியை நான் விடப்போவதில்லை என்று சொல்லி என் கையிலிருந்த என் பிரதி இரண்டு பாகங்களையும் அவரிடம் தெரிவித்து விட்டு என் தம்பி வசம் கொடுத்து "இவற்றை ஜாக்ரதையாக வீட்டிற்கு எடுத்துப் போய் வைத்திரு. அப்பாவிடமும் சொல்லு. நான் பின்னால் வருகிறேன் என்று சொல்லியனுப்பிவிட்டு அவரிடம் சிறிதுநேரம் பேசினேன். மேலும் சிந்தாமணி முதற்பதிப்புக்கே சி.வை.தாமோதர னார் ஏட்டுப்படிகள் இரண்டு கொடுத்து உதவியுள்ளார்.

**தொல்காப்பிய முதலாந் தொன்னூல் களைப்பதிப்பித்**
**தொல்காப் புகழ்மேவி யுய்ந்தபண்பின்–அல்காத**
**தாமோதரச் செல்வன் சட்டகநீத்திட்ட துன்பை**
**யாரே தாமியம் பவே**

இது தாமோதரர் இயற்கை எய்தியபோது சாமிநாதர் பாடிய இரங்கற்பா. சி.வை.அழகு சுந்தரனார் (பிரான்சிஸ் கிங்ஸ்பெரி) - சி.வை. தாமோதரம் பிள்ளையின் மகன் ஆவார். பாவலர் என்பதும் நன்கு விளங்குகிறது. கிறித்துவமதத்திற்கு மாறியவர். தம் தந்தையார் மறைந்தபோது பாடிய இரங்கல் பாக்கள் அவர்தம் உள்ளமும் உருக்கமும் ஊற்றெழச் சுரந்தனவாம்.

**தாயில்லான் என்றென்னைத் தரணியோர் செப்பிடினும்**
**நேய உடன்பிறப்பில் நீசனெனப் பேசிடினும்**
**பேயேனுக் குண்டோர் பிதாவென்று நானிருந்தேன்**
**நீயோ எனையிந்த நீணிலத்தில் விட்டகன்றாய்!**

**என்றினிமேல் உன்றன் எழிலார்முகம் காண்பேன்!**
**என்றினிமேல் உன்றன் இனியகுரல் கேட்பேன்**
**என்றினிமேல் நீதான் எழுதுநிரு பம்பெறுவேனே!**
**என்றினிமேல் இவ்வுலகில் 'எந்தாய்' எனவிளிப்பேன்!**

**ஆனந்தங் கொண்டேன் அரதனம் பெற்றாள்**
**மணியென்**
**றானந்தத் தோடே அனுப்பின நின்கைக்கடிதம்**
**போன வருடமிந்தநாள் புந்தி குளிரப் பெற்றோம்**

**.......................... .......................... .......................... ..........................**

*மன்னுங் கமலமென வைப்பாய் ஒரு பெயரே*
*உன்னுடைய பிள்ளைக் கென்றோர் கடிதம்வரைந்தாய்*
*மன்னுங் கமலமவள் வாய்திறந்து தாதாவென்*
*றுன்னையழைக் கின்றாள் ஒளித்தெங்கே சென்றாய் நீ?*

*பிள்ளை கடாந்தேடப் பெரியார் ஒளித்தாடல்*
*உள்ளது நம் நாட்டில் ஒருவரில்லை மீதறியார்*
*பிள்ளை முடியாது பெரியாய்வருக வெனிற்*
*பிள்ளைக்கு முன்னிற்றல் பெற்றியன்றோ நீபகராய்?*

ஒன்பான் பாடல்களுள் இவையைந்தும் "கொச்சகக் கலிப்பா" என்பது யாப்புக் குறிப்பு. இறுதியது மட்டும் வெண்பா.

**தாமோதரனார் பார்த்த ஏட்டுப்பிரதிகள்**

**கலித்தொகை**

புதுவை நயனப்பர் மூலப்படி - 1

ஆறுமுக நாவலர் படி -1

திருவாவடுதுறைப் படி -1

தென்னாட்டுப் படிகள் -2

புதுவை நெல்லித்தோப்பு சொக்கலிங்கர்படி நெய்தற்கலி மட்டும்-1

திண்டிவனம் படி - நெய்தற்கலி முதற்பகுதி - 1

சென்னை ஓலைச் சுவடித்துறை - நெய்தற்கலி - 2

யாழ்ப்பாணம் ம.வி. கனகசபை படி - 1

திருமணம் கேசவ சுப்பராயர் படி -1

**இலக்கண விளக்கம்**

திருவாவடுதுறைத் திருமடத்துப்படிகள்

**சூளாமணி**

சென்னை மகாலிங்கர் படி - 1

கருவூர் பண்டிதர் வெங்கட்டராமர் படி - 1

வேதாரணியம் அ. அனந்த விசயர் படி - 1

பெருமண்டூர் சைவப்புலவர் ஒருவர் படி - 1

வீடூர் அப்பாசாமி படி - 1

திரிசிரபுரம் தமிழ்ப்புலவர் படி - 1

காஞ்சிபுரப்படி - 1

தாமோதரனார் பதிப்பித்த நூல்களின் பதிப்புரைகளிலே சில ஆய்வுகளைச் செய்துள்ளார்.

**தமிழ்**

தமிழ் என்னும் சொல்லாய்வு குறித்து வீரசோழியப் பதிப்புரை, கலித்தொகைப் பதிப்புரை ஆகிய இரண்டிலும் செய்கின்றார். தமிழும், வடமொழியும் நாவலந்தீவின் பழைய மொழிகள் என்றும் இரண்டுமே தெய்வத் தன்மை உடையவை என்றும் வடமொழி பனிமலைக்கு அப்பால் இருந்து வந்த தென்றும் தமிழ் கங்கை வரை பரவியிருந்ததென்றும் ஆரியர் வடபால் நிலங்களைப் பற்றிக் கொள்ளத் தமிழர் தென்பால் வந்தவர் என்றும் இதனால் தமிழே நாவலந்தீவின் பழமையான மொழி என்றும் கூறுகின்றார். தமிழில் வடமொழிச் சொற்கள் கலந்திருப்பது கொண்டு அது இந்திய மொழியெனல் கூடாது என்றும் கூறுகிறார்.

இகழ், இமிழ், உமிழ், கமழ், கவிழ், குமிழ், சிமிழ் என ழகரப் பேறு பெற்ற சொற்கள் போலத் தமிழ் என்னும் சொல் தனிமைப் பொருள்குறித்தத் தமி என்னும் வினை அடியாற் பிறந்து, வினைமுதற் பொருண்மை உணர்த்திய விகுதி குன்றித் தனக்கு இணையில்லா மொழி என்னும் பொருள் பயப்பது என்கிறார்.

தமி என்பது தமியேன் என்பதுபோல் இழிவுப் பொருள் தருமோ என வினவி, ஓரடியில் பிறந்தும் அடியேன் அடிகள், அடியேள் அளியாய் என்பன போல ஒன்று இழிவு ஒன்று உயர்வும் உணர்த்தின என்கிறார். செவிக்கு இனிமை பயத்தலால் இனிமைப் பொருளுடையதாய்த் தமிழ் என்பாரும் உளர் எனப் பிறர் கருத்துக் கூறி அஃதெவ்வாறு ஆயினும் தமிழ் என்பது தென்மொழிக்குத் தென் சொல்லாகிய பெயரேயாம் என்று உறுதிப்படுத்துகின்றார்.

திராவிடம் என்னும் வடமொழியே தமிழ் என்று ஆகியது என்று சற்றும் ஆய்வின்றிக் கூறுவாரும் உளர். அவர் மதம் சாலவும் நன்றாயிருந்தது. தமிழிலே தமிழ் என்னும் சொல்வரு

முன்னர் வடமொழியில் திராவிடம் என்னும் சொல் உளதாகில் அப்பெயர் எப்பொருளை உணர்த்திற்றோ? உலகத்தில் எக்காலத்தும் பெயரா பொருளா முந்தியது? பொருளெனில் அப்பொருள் இருக்கும் இடத்தால் அஃது இல்லாத பிறிது தேயத்திலா அதன் பெயர் முன்னர் நிகழும்? இஃது உணராது தமிழ் வழங்கிய இடத்தில் தமிழுக்கோர் பெயர் இருந்ததில்லை என்றும், வடமொழியில் இருந்து அதற்குப் பெயர் வந்ததென்றும் சொல்வது யார்க்கும் நகை விளக்குமே என்று மறுக்கிறார்.

யாதொரு தமிழ்ச் சொல்லில் இரண்டோரெழுத்து வட மொழிக்கு ஒப்ப நிகழுமாயின் அது வடமொழியினின்று பிறந்ததெனச் சாதிக்கின்றனர். மேலைநாட்டு மக்களின் ஆங்கிலம் முதலிய அயல்மொழிகளில் இன்றியமையா வீட்டுச் சொற்களாகிய தந்தை தாயாரைக் குறிக்கும் பாதர், மதர் என்பன முதலியன வடமொழி அடியாய்ப் பிறந்தன என்பரா? அப்படியாயின் வட மொழியைக் காணுமுன் அந்நாட்டினரெல்லாம் தாய் தந்தையரை அழைத்தற்கோர் வீட்டுச் சொல் இல்லாதிருந்தனர் என்றன்றோ முடியும்!

◆

# கல்விப் பணியும் தமிழ்ப் பணியும்

## தொடக்கநிலை

சி.வை. தாமோதரம் பிள்ளை தமிழ் இலக்கண இலக்கியங் களைக் கவிராயர் சுன்னாகம் முத்துக்குமாரரிடம் முறையாக கற்றுத்தேர்ந்தார் என்பதனை,

தெள்ளு தமிழ்க் கடல் கடந்து
செழிய கலைத் துறைபடி திரிபில் ஞானக்
கொள்ளை கொண்டு நுகர்ந்த முத்துக்
குமார கவி மேகமிதைக் கொடிச் சுன்னாக
வள்ளலெனத் துள்ளுமதி கொள்ளநறை
விள்ளு தமிழ் மணஞ்சற் றேறி
வெள்ளறிவின் முடைநாற்றம் வீவித்தான்
விரைமலர்த்தாள் மிலைவன் மாதோ

இதில் தாமோதரம் பிள்ளை தன் ஆசான் மீது கொண்ட பற்று வெளிப்படுவதைக் காணலாம்.

உயர் கல்வி பயின்ற போதே அவரது தமிழ்ப் புலமையை ஆசிரியர்கள் நெவின்ஸ் சிதம்பரம்பிள்ளை, கறோல் விசுவநாதப் பிள்ளை ஆகியோர் பாராட்டிப் பண்டிதர் என்று அழைக்கப் படுவதற்கு ஏற்பத் தகுதி வாய்ந்தவராய் விளங்கினார்.

## பல்துறையறிவு

உயர் கல்விக்காகக் கிறிஸ்தவ செமினெறி (சாத்திரக் கலா சாலை)யில் எட்டு ஆண்டுகள் பயின்றார். தமிழ் அறிவோடு பிறநூல் அறிவும் பெற்றிருந்தார். சான்றாக ஆங்கில மொழி இலக்கியம் ஆங்கில இலக்கணம். கணிதம், சட்டம், இயற்கைத் தத்துவம், மனோதத்துவம், தருக்கம் முதலிய பாடங்களில் நுண்மாண் நுழைபுலம் கொண்டவராகத் திகழ்ந்தார். பட்டப்

படிப்புத் தேர்வில் முதல் மாணவராக விளங்கினார். இவரின் கல்வியறிவு கண்டு ஆசிரியர்கள் வியப்படைந்தனர்.

**பணி நிலை**

கோப்பாய் சக்தி வித்தியாசாலையில் ஆசிரியராகப் பணியாற்றினார். சென்னை இராசதானிக் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராகப் பணிபுரிந்தார். 1852இல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பி.ஏ., தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சியடைந்தார். கள்ளிக்கோட்டை அரசுக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றினார். சிறிது காலம் சென்னை மாகாணத் தலைமைக் கணக்காளராகப் பணிபுரிந்தார். 1871இல் புதுக்கோட்டை சமஸ்தான நீதிபதியாக விளங்கினார்.

**பத்திரிக்கைப் பணி**

கறோல் விசுவநாதப் பிள்ளையால் தமிழகத்திற்கு வந்தார். பெர்சிவல் பாதிரியார் நடத்தி வந்த தினவர்த்தமானி எனும் பத்திரிக்கையின் ஆசிரியர் பணியை ஏற்க வேண்டிய கட்டாயச் சூழல் ஏற்பட்டது.

**தமிழ் ஆர்வலர்**

தமிழ் நூல்கள் பல மக்களுக்குக் கிடைக்கும்வகை செய்தார். தமிழ் மொழியின் உன்னதத்தை உணர்ந்தவர். பனை ஓலையிலிருந்து பல நூல்களை அச்சேற்றிய பெருமை பிள்ளை அவர்களையே சாரும்.

**கல்விப் பணி**

ஏழாலை என்னும் ஊரில் சைவப்பிரகாச வித்தியாசாலை ஒன்றை 1878இல் நிறுவினார். சுமார் இருபது ஆண்டுக் காலம் தம் சொந்த செலவில் நடத்தி வந்துள்ளார். முருகேசபண்டிதரும், குமாரசுவாமிப் புலவரும் ஆசிரியராகப் பணிபுரிந்தனர். அவர்களை இலக்கணம், அந்தாதி, புராணம் போன்றவற்றைப் படிக்கச் செய்தார். இவற்றால் கல்விப் பணியில் தாம் கொண்டு இருந்த ஆர்வத்தைக் காணலாம்.

**படைப்புநிலை**

கட்டளைக் கலித்துறை, சைவ மகத்துவம், சூளாமணி வசனம், நட்சத்திரமாலை என்ற நூல்களையும், காந்தள் மலர் அல்லது கற்பின் மாட்சி எனும் நாவலையும் படைத்துள்ளார்.

செய்யுள் இயற்றுவதிலும் உரைநடை ஆக்குவதிலும் சிறந்தவராக விளங்கினார்.

### பதிப்புநிலை

சென்னையில் வசித்த போது தமிழ் இலக்கண, இலக்கியங்கள் கேட்பாரற்றுக் கிடந்தன. சிலர் தமிழ் பேசுவதை வெறுத்தனர். ஆங்கிலமொழியே உயர்ந்தது என்று எண்ணினர் சிலர். இதைக் கண்டு அவர் உள்ளம் வேதனை உற்றது. பழமை நூல்களைப் பதிப்பிக்க எண்ணினார். மொழிவளம் பெற வேண்டுமென்றால் இலக்கணம் தேவை என உணர்ந்தார். பதிப்புத் துறையின் முன்னோடியாகத் திகழ்ந்தவர். பதிப்புத்துறைக்கு ஊக்க மூட்டியவர் ஆறுமுக நாவலர் பிள்ளைக்கு வழிகாட்டியாக அமைந்தார்.

### பதிப்புப்பணி

தமிழ் நூல்களைப் பதிப்பிக்கும் போது பிழைவராமலிருக்க தமது பதிப்புகளில் தவறுகள் ஏதும் காணப்படின் அவற்றைத் தமக்கு எழுதி அனுப்பினால் எழுதினோர் பெயர்களோடு அவை வெளியிடப்படும் என்றும் (50) ஐம்பது பிழைகளைக் காட்டுவோர்க்கு ஒரு புத்தகம் அன்பளிப்பாகக் கொடுக்கப்படுமென்றும் அறிவித்திருந்தமை அவருடைய பதிப்புகள் பிழையின்றி அமையவேண்டும் என்ற விருப்பத்தைக் காட்டும்.

### சுவடிப் பணி

குடந்தையில் வழக்கறிஞர் பணியில் ஈடுபட்டார். சுவடிகள் இருக்கும் இல்லந்தோறும் சென்று அவற்றைப் பெற்றார். பழமையான அவை நீர், நெருப்பு கறையானால் சிதிலமடைந்து காணப்பட்டன. அதனைக் கண்டு மனமுருகினார். கலித்தொகைப் பதிப்புரையில்

> "ஏடு எடுக்கும் போது ஓரம் சொரிகிறது. கட்டு அவிழ்க்கும் போது இதழ் முரிகிறது. ஏட்டைப் புரட்டும்போது துண்டு துண்டாய்ப் பறக்கிறது. இனி எழுத்துக்களோ என்றால், வாலுந் தலையுமின்றி நாலுபுறமும் பாணிக்கலப்பை (புழு) மறுத்து மறுத்து உழுது கிடக்கின்றது.
>
> பழைய சுவடிகள் யாவும் சீலமாய் ஒவ்வொன்றாய் அழிந்து போகின்றன. புது ஏடுகள் சேர்த்து அவற்றை எழுதிவைப்பாரும் இலர். துரைத்தனத்

தாருக்கு அதன்மேல் இலட்சியமில்லை. சரஸ்வதியைத் தம்பால் வசிக்கப் பெற்று வித்துவான்களை அவர் மாமி எட்டிப் பார்க்கின்றாள் இல்லை. திருவுடையீர்! நுங்கருணை இந்நாள் தவறினால் பின்பு தவம் புரிந்தாலும் ஒருதரம் அழிந்த தமிழ் நூற்களை மீட்டல் அரிது. யானை வாய்ப்பட்ட விளாம் பழத்தை பின் இலட்சணத்துடன் எடுத்து மென்? ஓடன்றோ கிட்டுவது! காலத்தின் வாய்ப்பட்ட ஏடுகளைப் பின்தேடி எடுப்பினும், கம்பையும் நாராசமுந்தான் மீளும்.

எத்தனையோ திவ்விய மதுர கிரந்தங்கள் காலந்தரத்தில் ஒன்றன் பின் ஒன்றாய் அழிகின்றன. சீமான்களே! இவ்வாறு இறந்தொழியும் நூல்களில் உங்களுக்குச் சற்றாவது கிருபை பிறக்கவில்லையோ ஆச்சரியம்! ஆச்சரியம்! அயலான் அரியக் காண்கிலும்மனம் தளும்புகின்றதே! தமிழ் மாது நும் தாயல்லவா? இவள் அழிய நமக்கென்னவென்று வாளா இருக்கின்றீர்களா? தேசாபிமானம், மனிதாபிமானம், பாசாபிமானம் என்று இவை இல்லாதோர் பெருமையும் பெருமையாமோ? இதனைத் தயை கூர்ந்து சிந்திப்பீர்களாக"

என்பதால் தமிழ்ப் பற்றுமிக்கவர் என்பதைக் காணலாம்.

### சுவடியில் பிரதி எடுத்தலில் சிக்கல்

ஏட்டுப்பிரதிகளைப் படித்து, பரிசோதித்துப் பலபடியாக ஆராய்ந்து, வழுவின்றிப் பிரதி செய்கிறபோது சில சந்தேகங்கள் தோன்றிவிடும். அதனைப் போக்கிக் கொள்ள உரியவர் கிடைக்க மாட்டார். மன உளைச்சலில் சில நாள்கள் வருந்திக் கொண்டே இருப்பாராம் பிள்ளைவாள். இலக்கியங்கள் அறிந்திராத காலம்; சிலப்பதிகாரமா, சிறப்பதிகாரமா என மயங்கிக் கொண்டிருந்த காலம். ஐயம் அகற்ற யார் துணையாவார். எனக்கு ஸ்ரீமத் சாமிநாதையரும் அவருக்கு நானுமே சாட்சி. இவற்றால் சுவடியிலிருந்து நகல் எடுக்கும் துன்ப நிலையை அறியலாம்.

### உரைச் சிறப்பு

பிள்ளை அவர்களின் உரை நடையில் கருத்துச் செறிவும், உவமை அழகும் மிளிரும். இலக்கண, இலக்கியப் பதிப்புரைகளில்

இனிமை வாய்ந்த நடையுடனும் நகைச்சுவையுடனும் எழுதும் ஆற்றல் பெற்றவர். 1898-இல் பதிப்பித்த வசன சூளாமணி நூலின் உரையில் சில:

வசன சூளாமணி புறஉரை

தமிழிலே சிறந்த இலக்கியங்களென, நிலைபெற்றன சிந்தாமணி. சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்னும் பெருங் காப்பியங்கள் ஐந்தும் நீலகேசி, சூளாமணி, உதயணன் கதை, நாககுமார காவியம், யசோதர காவியம் என்னும் சிறுகாப்பியங்கள் ஐந்துமே. இச்சிறு காப்பியங்களுட் தோலாமொழித் தேவர் இயற்றிய சூளாமணி யென்னும் இரண்டாவது காவியத்தை ஸ்ரீ கைலாச பரம்பரைத் திருவாவடு துறை ஆதினத்துச் சற்குருநாத சுவாமிகள் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக மூர்த்திகளின் கட்டளைப் பிரகாரம், அடியேன் அச்சிடுவித்து வெளிப்படுத்திய பொழுது, அந்நூலை மாணவர்கள் எளிதில் கற்றுணர்தற்கு உதவியாக, அதிற் கூறிய திவிட்ட குமாரன் சரித்திரத்தைச் சத்திய ரூபமாக இயற்றிப் பகிரங்கஞ் செய்தால் மிகவும் உலோகோபகாரமாகு மென்று அனேகர் விரும்பிக் கேட்டுக் கொண்டனர். அது காலத்திற் புதுக்கோட்டை மகாராசாவின் ஹைகோர்ட் நியாயாதி பதிகளில் ஒருவராக இருந்த யான் இடையிட்ட நேரங்களில் எல்லாம் இலக்கண விளக்கத்தைப் பரிசோதனை செய்து அச்சிடுவித்துக் கொண்டிருந் தமையால் எனக்குச் சாவகாசம் நேரிடாமல், என்னோடு கூட இருந்த வித்துவான் ஸ்ரீ தாவடி அம்பிகைபாக உபாத்தியாயரைக் கொண்டு, அங்ஙனமே அதனைச் சிறுவரும் வாசித்துத் தமிழ் பயிலத்தக்கத் தெள்ளிய நடையில் எழுதுவித்தனன்.

பின்னர் அதனைச் சென்னை சர்வகலா சங்கத்திற் பிரவேச பரிக்ஷைக்கு நியமிப்பான் கருதி அச்சங்கத்திற் திராவிட பாட சபையாருக்கு அனுப்பினேன். அவர்கள் அதிற் தற்கால வித்தி யாசிரமத்திற்கு ஒவ்வாதனவும் பூகோளக் கோள

சாஸ்திர உண்மைக்கு மாறானவுமாக சத்த சமுத்திர தீவக அசலாதி பழைய தமிழ் நூற் கோட்பாடுகள் பலப்பல ஆங்காங்கு விரவியிருப்பதை நோக்கி மறுத்து விட்டனர்.

அதன் மேல் அக்கோட்பாடுகளை நீக்கியுந், திவான் பஹதூர் வன்பாக்கம் கிருஷ்ணமாசாரியாரவர்கள் மாதாந்திரம் பதிந்து வரும் மஹாராணி பத்திரிகை யின் சென்ற வருட சம்புடத்திற் பாகம் பாகமாக அச்சிடுவித்தேன். அச்சில் வந்த பின் சபையார் சிலர் நடையை மெச்சிச் சரித்திரத்தை இன்னும் பெருக்கியும் பஞ்சதந்திர கதை போலத் திரிசொற் பிரயோகத்தால் அர்த்தத்தைச் சற்றே அருக்கியும், ஒரு பொருட் பன்மொழிகள் நெருக்கியும் வரைந்தாற் பிரதம வித்தியா பரிக்ஷைக்கு இனி நியமிக்க அருகமாகுமெனக் கருதினர்.

ஆதலால் முதனூற்கு விரோதமாகாது கதையைப் பல்லாற்றால் அகல விரித்தும், நடையைப் பெரும்பாலும் உயரத்திரித்தும், இடைக்கிடையே ஒரு பொருட்குப் பல பரியாயங்களைத் தெரிவித்தும், மூல நூலிலுள்ள அனேகஞ் செய்யுட்கள் அங்கும் இங்குங் கமழ வரித்தும், முழுவதும் மாற்றி எழுதலா யினேன். ஆயினும் இடந்தொறும் இடந்தொறும் உபாத்தியாயர் புத்தக வாக்கியம் இன்னும் இருத்தலாற் பாஷை நடை இரண்டு பட்டுத் தோன்றும். அஃது யான் மேற்கூறியதற்குச் சான்று. அக்குறையை ஆன்றோர் மன்னித்தல் வேண்டும்.

### பட்டம்

நூல் ஆராய்ச்சியும், நூற்பதிப்பும் செய்து வந்த இவர்க்கு இந்திய அரசு 'இராவ் பகதூர் பட்டம்' கொடுத்தது. வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் போன்ற அறிஞர்கள் பலர் முன்னேற ஊக்கமளித்தவர் தாமோதரம்பிள்ளை. இவர்க்குத் 'திராவிட சாத்திரி' என்றும் பட்டம் வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

### குமாரசாமிப் புலவரின் பாராட்டு

இலக்கண இலக்கிய நூல்கள் சுவடியிலிருந்தவற்றை நூலாக்கிய பெருந்தகை சி.வை. தாமோதரம்பிள்ளையாவார். பதிப்புப் பணியின் சிறப்பினை,

"ஏட்டிலிருந்தே அருந்தமிழி நூல்களெனப் பலவுந்
தீட்டி வழுக்களைந் தச்சினி லாக்கும் செந்தமிழ் சேர்
நாட்டில னிந்துயா தாமோ தரந்திரன் நண்ணுபுகழ்
பாட்டிலடங்கும் தாகத்தோ புலவர்கள் பாடுதற்கே"

எனப் பாராட்டுவர் குமாரசாமிப் புலவர்.

பம்மல் சம்பந்த முதலியார் பாராட்டு

பொதுவாக அக்காலத்தில் யாழ்ப்பாண வாசிகளே தமிழில் நன்றாய்க் கற்றவர்கள் என்று மதிக்கப்பட்டவர்கள். அவர்களுக் குள்ளும் தாமோதரம் பிள்ளையவர்கள் சிறந்த புலமையுள்ளவர் என்று மதிக்கப்பட்டார்.

பரிதிமாற் கலைஞரின் கூற்று

"காமோதி வண்டர் கடிமலர்த்தேன் கூட்டுதல் போனா
மோது செந்தமிழி னன்நூல் பலதொகுத்த
தாமோதரம்பிள்ளை சால்பெடுத்துச் சாற்றவெவர்
தாமோதர முடையார் தண்டமிழ் செந்நாப்புலவீர்"

என்று தமிழிற் சிறந்தவர் என்பதைக் காட்டும்.

மாயூரம் வேதநாயகம்பிள்ளை பாராட்டு

"நீடிய சீர்பெறு தாமோதர மன்ன, நீள்புவியில்
வாடிய லூழ்கள் மறைமுகங் கண்டெடன மாண்புற
பாடிய செய்யுளைப் பார்த்தின்ப வாரி படிந்தனன் யான்
கோடிப் புலவர்கள் கூடினும் நின்புகழ் கூறலரிதே"

என்பதால் சிறந்த செய்யுள் நடை இயற்ற வல்லவர் என்பதை உணரலாம்.

உ.வே.சாமிநாதய்யர் பாராட்டு

"தொல்காப் பியமுதலாந் தொன்னூல்க ளைப்பதிப்பித்
தொல்காப் புகழ்மேவி யுய்ந்த பண்பி–னல்காத
தாமோதரச் செல்வன் சட்டக நீத்திட்டதுன்பை
யாமோ தரமியம்ப வே"

எனத் தமிழ்த்தாத்தா தாமோதரனாரின் சிறப்பினை மெச்சுவர்.

**கருத்துரை**

தாமோதரம்பிள்ளை யாழ்ப்பாணத்தில் தோன்றி, தமிழகத் திற்கு வந்து, தமிழ்ப்பணியில் நூலாசிரியராகவும், உரையாசிரியரா கவும், இதழ் ஆசிரியராகவும், பதிப்பாசிரியராகவும் விளங்கினார். தமிழ் அறிஞர்களிலே மேன்மையுற்றவராகத் திகழ்ந்தார்.

"சொல்வன யார்க்கும் எளியவாம் அரியவாம்
சொல்லிய வண்ணஞ் செயல்"

என்ற வள்ளுவர் கூற்றிற் கேற்ப முழுமூச்சாகத் தமிழ்ப் பணியே தமது தலையான பணியாகக் கொண்டார். அருந்தமிழ்த் தொண்டர் 1901ஆம் ஆண்டு இம்மண்ணை விட்டுப் பிரிந்தார். உடலால் பிரிந்தாலும் அவருடைய தமிழ்ப் பணியைத் தமிழர் நெஞ்சம் என்றென்றும் மறவாதிருக்கும்.

◆

# தொல்காப்பியப் பதிப்புகள்

**சி.வை.தா.**

அன்று ஈழம், இலங்கை என்று கூறப்பெற்று இன்று ஸ்ரீலங்கா என அழைக்கப்பெறும் நாட்டின் வடபகுதியில் உள்ள யாழ்ப்பாணப் பகுதியில் புத்தூரைச் சார்ந்த சிறுபிட்டி என்ற கிராமத்தில் வைரவநாதபிள்ளை என்பவருக்கு மூத்தமகனாகப் பிறந்தவர் தாமோதரம்பிள்ளை. அதனால் அவர் சி.வை. தாமோதரம்பிள்ளை என அழைக்கப்பெற்றார். 1832ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12ஆம் நாள் பிள்ளை அவர்கள் தோன்றினார்.

சிறுவயதில் தமது தந்தையாரிடம் வாக்குண்டாம். நன்னெறி, மூதுரை முதலிய நீதி நூல்களையும், திவாகரம், உரிச்சொல் நிகண்டு முதலிய ஏனைய நூல்களையும் கற்றார்.

தமிழ்க் கல்வியை மிகுதியாகக் கற்றல் வேண்டும் என்ற எண்ணத்தால் தமது இருப்பிடத்திற்கு அருகாமையில் இருந்தவரும் அக்காலத்துச் சிறந்த வித்துவான்களில் ஒருவருமான முத்துக்குமார நாவலர் என்பவரிடம் நைடதம், இராமாயணம், பாரதம், கந்த புராணம் முதலிய நூல்களையும் இலக்கணப் பயிற்சியும் பெற்றார். இச்செய்தியை

கற்றறி வில்லாக் கடையனேன் தமக்கு
நற்றமிழ் கொளுத்திய நாவலன் சுன்னை
முத்துக்குமார வித்தகன் அடியிணை
சித்தத் திருத்தி

எனத் தொல்காப்பியப் பதிப்புரையின்கண் ஆசிரிய வணக்கம் கூறுமிடத்துக் கூறியுள்ளார்.

வீரசோழியம் பதிப்புரையிலும் தமிழாசிரியர் வணக்கம் என்ற தலைப்பில் தன் ஆசிரியருக்கு வணக்கம் செலுத்துகிறார்.

எழுத்தொடு விழுத்தமிழ் பழுத்தசெந்நாவினன்
முழுத்தகை யேற்கவை யழுத்தியோன் சுன்னா

கத்துயர் மரபினோன் முத்துக் குமார
வித்தகன் அடிதலை வைத்து வாழ்த்துவனே

யாழ்ப்பாணத்திற்கு அருகில் பேரூராய் விளங்கிய தெல்லியம்பதி சென்று அங்குள்ள அமெரிக்கன் மிஷன் கலா சாலையில் சிறிதுகாலம் கல்வி கற்றார். பின்பு வட்டுநகர் ஊர் சென்று உயர்கல்வி தம் பன்னிரெண்டாம் வயதில் இருந்து படித்தார். 1852ஆம் ஆண்டு செப்டம்பர் 23 தேதி தமது 20 வயதில் கலாசாலைக் கல்வியை நிறைவுசெய்தார். அதற்குப்பின்பு யாழ்ப்பாணத்துக் கோப்பாய் போதனாசக்தி வித்தியாசாலையில் ஆசிரியராக நியமனம் பெற்றுச் சிறப்பாகக் கற்பித்து வந்தார். இதுவே இவர் முதல் முதல் செய்த ஆசிரியப்பணி.

இந்தியாவில் பெர்சிவல் என்ற பாதிரியார் நடத்தி வந்த தினவர்த்தமானி என்னும் தமிழ்ப்பத்திரிகையின் ஆசிரியராக வருமாறு பெர்சிவல் அழைத்த காரணத்தால் சென்னை வந்து தினவர்த்தமானி பத்திரிகையாசிரியரானார். அக்காலத்து சென்னையில் சிறந்த உத்தியோகத்தில் இருந்த ஆங்கிலேயர் களுக்குத் தமிழ் கற்பித்தார். 1857இல் சென்னைப் பல்கலைக்கழகம் (சர்வகலா சாலை) தொடங்கியபோது பி.ஏ. பட்டம் பெற்றார். பி.ஏ. பட்டம் பெற்றவுடன் கள்ளிக்கோட்டை அரசாங்க வித்தியா சாலையில் உதவி ஆசிரியராக மாற்றப்பட்டு அங்குச் சென்று கற்பித்தார்.

பிள்ளை அவர்களிடம் தமிழ் கற்ற லக்ஷிங்கடன் துரை இவருடைய திறமையை உணர்ந்து சென்னையில் உள்ள அரசாங்க வரவு செலவுக் கணக்கு சாலையில் (Account General Office) உரியதோர் உத்தியோகத்தில் அமர்த்தினார்.

1860இல் திருமணம் செய்துகொண்டார்.

முதல் முதலில் யாழ்ப்பாணத்துக் கோப்பாய் வித்தியா சாலையில் ஆசிரியராக இருந்த காலத்து, குமரகுருபர சுவாமிகள் இயற்றிய சிறந்த நூலாகிய நீதிநெறி விளக்கத்தை உரையோடு அச்சிட்டு வெளியிட்டார்.

**தொல்காப்பியம்**

தொல்காப்பியம் தமிழில் இன்று கிடைக்கின்ற நூல்களில் முதல் நூல்; முதன்மையான நூல்; கி.மு. 3ஆம் நூற்றாண்டில்

தோன்றியது என்பது அறிஞர் பலரின் கருத்து; அதற்கு முன்பும் இருக்கலாம். தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல் உலக மொழிகளில் இல்லை. இலக்கணப் பொதுநிலையில் எழுத்து சொல் என இருநிலைகளில் தான் எல்லா உலக மொழிகளிலும் அமைந்துள்ளன. பொருள் இலக்கணம் தமிழுக்கே உரிய ஒன்று. வாழ்வியல் இலக்கணமாகவும், இலக்கிய இயல் இலக்கண மாகவும் உலகப் பொதுச் செய்திகள் அனைத்தையும் கொண்டுள்ள நூலாகவும் பொருள் அதிகாரம் அமைந்துள்ளது.

தொல்காப்பியம் என்ற சொல் மூன்று சொற்களின் கூட்டு. தொல் + காப்பு + இயம் என்று பிரித்தும் பொருள் கொள்ள வேண்டும். தொல் - பழமை; காப்பு - காத்தல்; இயம் - இயம்பல், கூறுதல் என்று பொருள் பெறும். தமிழின் தமிழரின் பழம் பெருமையையும் பண்பாட்டையும், பாதுகாத்து இயம்புகின்ற நூல் தொல்காப்பியம். தொல்காப்பியத்தை உருவாக்கிய தொல்காப்பியர் என்ற பெயர் காரணப்பெயர்; இயற்பெயர் அன்று.

**பதிப்புகள்**

தொல்காப்பியத்திற்கு இதுவரை 140 பதிப்புகளுக்கு மேல் வந்துள்ளன. தொல்காப்பியம் கி.மு.வில் எழுதப்பெற்றாலும், முதல் முதலில் அச்சானது 1847இல்; மழவை மகாலிங்க ஐயர், தொல்காப்பியம் எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியர் உரையை, முதல் முதலில் வெளியிட்டார்.

தொல்காப்பியம் முழுவதும் மூலம் மட்டும் திரு. சாமுவேல் பிள்ளை என்பவரால் 1858இல் வெளியிடப்பெற்றது. அதில் தொல்காப்பியம் எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியர் உரையை, முதன் முதலில் வெளியிட்டார்.

நூல்களைப் பதிப்பித்தல் என்பது மிகக் கடினமான ஒன்று. தொல்காப்பியம் எழுத்தின் ஒலிவடிவிற்குத்தான் இலக்கணம் கூறியுள்ளது. எழுத்தின் வரிவடிவம் பற்றி மூன்று நூற்பாக்களே உள்ளன. மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல் (தொல் 15), எகர ஒகரத்து இயற்கையும் அற்றே (தொல். 16), உள்பெறுபுள்ளி உருவாகும்மே (தொல். 154).

காலந்தோறும் எழுத்தின் வரிவடிவங்கள் மாறிக்கொண்டே இருந்தன. நூல் அச்சானபிறகுதான் வரிவடிவங்கள் ஒருநிலை பெற்றன. தொல்காப்பியர் காலத்து வரிவடிவம் வேறு; இன்றைய

தமிழ் எழுத்துக்களின் வரிவடிவம் வேறு. ஓலைச்சுவடிகளில் எழுதும்போது புள்ளி வைத்தல், நெடில் கோடு இழுத்தல் போன்றவை செய்யப்பெறுவதில்லை, ஓலை கிழிந்துவிடும் என்பதால். சுவடிகளைப் படிப்பது அதன் பொருளைப் புரிந்து கொள்வது மிகமிகக் கடினம். தமிழின் பெருமையை உணர்ந்தவர்கள் மிகவும் கடுமையாக உழைத்துத் தமிழ் நூல்களை வெளியிட்டனர்.

சங்க இலக்கியங்களை வெளியிட்ட டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்கள் தொல்காப்பிய வெளியீட்டு முயற்சியில் ஈடுபடவில்லை. சுவாமிநாதையர் நூல் நிலையத்தில் தொல்காப்பியச் சுவடிகள் 30க்கும் மேல் உள்ளன. ஆனால் அவர் அது இலக்கண நூல் என்று கருதி அதைப் பதிப்பிப்பது கடினம் என்ற நிலையில் அதைப் பதிப்பிக்க முயலவில்லையோ? என்று தோன்றுகிறது.

சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் தொல்காப்பியத்தின் பெருமையை, சிறப்பிலை.த் தெளிவாக உணர்ந்திருந்தார். அதனால் தொல்காப்பிய நூல்களைப் பதிப்பிக்க வேண்டும் என்ற உணர்வு அவருக்கு ஏற்பட்டது. தொல்காப்பியப் பதிப்புகள் தொடர்பாகப் பல நிலைகளில் முதல் நிலையில் நினைக்கத்தக்கவர் சி.வை. தாமோதரம் பிள்ளை.

### தொல்–சொல் சேனாவரையம் பதிப்பு

முதன் முதலில் 1868இல் தொல்காப்பியம் சொல்லதிகாரம், சேனாவரையர் உரையை வெளியிட்டார். அதற்கு உதவியவர் நல்லூர் ஆறுமுக நாவலனார்.

சி.வை.தா. அவர்கள் தமிழகத்தில் அரசாங்கப் பதவியில் இருந்த காரணத்தாலும் பல இடங்களுக்கும்சென்று ஏடு தேடி அலைவதற்குக் காலம் இன்மையாலும் ஏடுகளை ஒருங் கிணைத்துப் பரிசோதிப்பதற்குரிய காலமின்மையாலும் ஏற்கெனவே 1847ல் மழவை மகாலிங்க ஐயர் தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியர் உரையை வெளியிட்ட காரணத்தாலும் சொல்லதிகாரம் சேனாவரையர் உரையை ஆறுமுக நாவலர் அவர்கள் உதவியுடன் 1868இல் பிள்ளையவர் கள் வெளியிட்டார்.

வீரசோழியத்தை 1881ஆம் ஆண்டு வெளியிட்டார்.

உ

கணபதி துணை

தொல்காப்பியம்

சொல்லதிகாரம்

இஃது

வடநூற்கடலை நிலைகண்டுணர்ந்த

சேனாவரையருரையோடும்

நல்லூர்

ஆறுமுகநாவலரால்

பலபிரதிரூபங்களைக்கொண்டு

பரிசோதித்தது

யாழ்ப்பாணம்

சி.வை. தாமோதரம்பிள்ளையால்

கலாரத்நாகர அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது

(1868) விபவஷு புரட்டாதி

Registered Copyright

வீரசோழியத்தைப் பதிப்பித்த காலத்துத் தணிகைப்புராண ஏட்டுப்பிரதிகள் அவருக்குக் கிடைத்தன. திருவாவடுதுறை ஆதினத்துக் கச்சியப்ப முனிவர் திருத்தணிகைப் புராணத்தை எழுதிய காரணத்தாலும், குமரக்கடவுள் எழுந்தருளி இருக்கின்ற சிறந்த தலம் ஆன காரணத்தாலும் 1853ஆம் ஆண்டு திருத்தணிகைப் புராணத்தைப் பதிப்பித்தார். அதே ஆண்டு இறையனார் அகப்பொருளையும் பதிப்பித்தார்.

### தொல்–பொருள்–பதிப்பு

1885ஆம் ஆண்டு தமிழ்ச்சுவடிகள் சேகரிப்பதற்காகவும் மடங்களோடு தொடர்பு கொள்வதற்காகவும் திருக்குடந்தை அதாவது கும்பகோணத்திற்கு அருகே உள்ள கருப்பூரில் சென்று சிலகாலம் வாழ்ந்தார். அப்போது தொல்காப்பியத்தின்

பெருமையை உணர்ந்து பொருளதிகாரத்தினை வெளிப்படுத்த வேண்டும் என நினைத்தார்.

திருவாவடுதுறை ஆதீனத்து மகாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகமூர்த்திகள் தம் மடத்தில் உள்ள தொல் காப்பியப் பிரதிகளைக் கொடுத்தார். வேறு நாடுகளிலிருந்தும் சுவடிகளைத் தருவித்துக் கொடுத்தார். அதோடு சி.வை. தாமோதரம் பிள்ளை பதிப்பிக்கும் நூல்கள் ஒவ்வொன்றிலும் 20 பிரதிகளுக்குக் குறையாமல் கிரையத்துக்கு வாங்கிக் கொள்வ தாகவும் வாக்களித்தார்.

யாழ்ப்பாணம், நகர சதாசிவம்பிள்ளை திருநெல்வேலி தாசில்தார் திரு. கணிதசங்கம் வை. சின்னத்தம்பியாபிள்ளை முதலியோரும் பல பழைய ஏட்டுப் பிரதிகளை அனுப்பிக் கொடுத்தனர். இவற்றோடு திருத்தணிகை சரவணப்பெருமாள் ஐயர் பௌத்திரர் துரைசாமி ஐயர் பிரதி ஒன்றும், புரசை சாமுவேல் பண்டிதர் பிரதி ஒன்றும் பிள்ளை அவர்களிடம் இருந்த கைப்பிரதி ஒன்றும் ஆக, பன்னிரெண்டு சுவடிகளைக் கொண்டு பரிசோதித்த பின்னரே பொருளதிகாரத்தை வெளி யிட்டார்.

இருக்கின்றதை அவ்வாறே அவர் பதிப்பித்தார். தன் விருப்பம் போல் எதையும் மாற்றுவதில்லை.

பொருளதிகாரத்தைப் பதிப்பித்த பின்பு அவருக்கு மிகுதியான பொருள் இழப்பு ஏற்பட்டது.

தொல்காப்பிய முதல் பதிப்புகள் பெரும்பான்மையும் நூற்பா அமைப்பு இல்லாமல் உரைநடை போன்று நூற்பாவும் உரையும் ஒருப்போல் காணப்பெறும். 1847இல் மழவை மகாலிங்கரால் பதிப்பிக்கப் பெற்ற தொல்காப்பியம் எழுத்ததி காரம், நச்சினார்க்கினியர் உரை, உரைநடையில் அமைந்துள்ளது.

சுவடியில் இருப்பதைப் போன்ற நூற்பாவும் உரையும் உரை நடை அமைப்பிலேயே உள்ளன. நூற்பா வடிவத்தில் நூற்பாக்கள் தரப்பெறவில்லை. முகவுரை, பதிப்புரை போன்றன இல்லை.

1858இல் தொல்காப்பிய நன்னூல் என்ற தொல் காப்பியத்தையும், நன்னூலையும் சேர்த்துப் பதிப்பித்த சாமுவேல் பிள்ளையின் மூலப்பதிப்பில் அவருக்கு எங்கு இருந்து சுவடிகள் கிடைத்தன? அவைகள் ஓலைச்சுவடிகளா? தாள் சுவடிகளா?

போன்ற விபரங்கள் இல்லை. ஆனால் தொல்காப்பியப் பொருளதிகாரம், உரையுடன் உள்ள கையெழுத்துப்படியைச் சி.வை. தாமோதரம்பிள்ளை பெற்றுக் கொண்டுள்ளதாகத் தம் பதிப்புரையில் கூறியுள்ளார்.

தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையத்தைச் சி.வை.தா. விபவஸு புரட்டாசி மீ பதிப்பித்தார். இரண்டு மாதங் கட்குப் பின்பு இராஜகோபாலப்பிள்ளை விபவஸு கார்த்திகையில் தொல். சொல். சேனாவரையத்தைப் பதிப்பித்தார்.

இப்பதிப்பில் நூற்பா அமைப்பில் நூற்பாக்களும் உரை பிறிதொரு சிறிய எழுத்திலும் அச்சிடப்பெற்றுள்ளன. அடிக் குறிப்புகள் சில இடங்களில் தரப்பெற்றுள்ளன. சிவஞான முனிவரின் தொல்காப்பியச் சூத்திரவிருத்திக் கருத்துக்கள் ஒப்புமைக்கு எடுத்தாளப்பெற்றுள்ளன. பதிப்புரை இல்லை. முகப்புப் பக்கமே பதிப்புரையாக அமைகின்றது. பின்பகுதியில் நூற்பாக்களுக்கு அகராதி உள்ளது. சைவப்பற்றின் காரணமாக உ கணபதி துணை இப்பதிப்பில் காணப்பெறுகிறது. பொருளடக்கத்தைச் சூசி பத்திரம் என வழங்கினர்.

சூசி பத்திரம்

| பக்கம் | | சூத்திரத் தொகை |
|---|---|---|
| க | கிளவியாக்கம் | சக |
| சஉ | வேற்றுமையியல் | உஉ |
| அஎ | வேற்றுமை மயங்கியல் | ஙச |
| ககங | விளிமரபு | ஙஎ |
| கருரு | வினையியல் | ருக |
| உ0க | இடையியல் | சஅ |
| உஉஅ | உரியியல் | க00 |
| உசஎ | எச்சவியல் | கூஎ |
| | | ஆக சசங |

இவ்வாறு அமைந்துள்ளது. 1847இல் இயலகராதியும் அகர வரிசையில் தரப்பெற்றுள்ளது. இப்போது இயல் வரிசையில் தரப்

பெற்றுள்ளது. தொல்காப்பியம் பொருளதிகாரம் முதல் பதிப்பின் முதல் பக்கம்

திருச்சிற்றம்பலம்

தொல்காப்பியம் பொருளதிகாரம்

இஃது

பாரத்துவாசி

நச்சினார்க்கினியர்

இயற்றிய உரையோடும்

பலதேசப்பிரதி ரூபங்களைக் கொண்டு

பரிசோதித்து

யாழ்ப்பாணம்

சி.வை. தாமோதரம்பிள்ளையால்

பதிப்பிக்கப்பட்டது

பார்த்திபஇ ஆவணிமீ

Copyright registered

Madras

Printed at the Scottish press

By Graves, Cookson and Co

1885

தொல்காப்பியம் - பொருளதிகாரம் - நச்சினார்க்கினியம் 1885இல் வித்தியாநுபாலன யந்தரசாலை, சென்னை, பக். 889.

தொல்காப்பியம் - பொருளதிகாரம் - ஒன்பது இயல்களை யும் ஒருசேரப் பதிப்பித்தவர் சிவை.தா. 1885இல் முதன் முதலாகப் பொருளதிகாரம் உரையுடன் வெளிவந்தது. எழுத்தையும் சொல்லையும் எளிதாகப் பதிப்பித்துவிடலாம். மொத்த நூற்பாக்கள் 1610இல் எழுத்து 483, சொல் 463, பொருள் - 664, பொருளதிகாரத்தில் நூற்பாக்கள் ஏனைய அதிகாரங்களைக் காட்டிலும் மிகுதி. அதோடு எழுத்து, சொல்லைக் காட்டிலும், பொருளில் சங்கஇலக்கிய எடுத்துக்காட்டுகள் மிகுதி. இலக்கியச்

சான்றுகள் அதிகம். அவற்றை அறுதியிடுவது மிகக் கடினம். சுவடிகளிலிருந்து நூல்களை அச்சுக்குக் கொணர்வது எளிதன்று. உயிர்மெய்க்கும் மெய்களுக்கும் வேறுபாடிருக்காது. புள்ளிகள் வைப்பதில்லை. நெடிலுக்கும் குறிலுக்கும் வேறுபாடிருக்காது. கொடு கோடாக இருக்கலாம். ரகரத்திற்கும் நெடில் 'ா' காலுக்கும் வேறுபாடில்லை. கா-கரவாகலாம். இதற்குச் சி.வை.தா. தரும் எடுத்துக்காட்டையே தரலாம். பொருட் தொகுதி என்பதைப்

பொருட் தொகுதி என்றும்,
பேரர் உட்தொகுதி என்றும்,
பேர் அருட்தொகுதி என்றும்,
பேரருட் தேர்குதி என்றும்,
போருட்தொகுதி என்றும்,
பொருட் தேர்குதி என்றும்,

படிக்கலாம். ஒரு சுவடியில் பொருட்டொகுதி என்றிருந்ததால் இது தெளிவுபடுகின்றது.

இப்பதிப்பிற்கு 12 பக்கங்களில் மிகத் தெளிவான பதிப்புரை எழுதியுள்ளார். திருநெல்வேலிப் படி 2 மதுரைப்படி 2, தஞ்சைப் படி 3, சென்னைப்பட்டினம் படி 3, யாழ்ப்பாணப்படி 2, ஆகப் பன்னிரண்டினை ஒப்புநோக்கிப் பதிப்பித்துள்ளார். அவை யார்யாரிடமிருந்து கிடைத்தன என்பதையும் குறிப்பிட்டுள்ளார். அக்காலத்தில் சென்னையில் தொல்காப்பியம் முழுவதும் தெரிந்த ஒருவர் தொல்காப்பிய வரதப்பமுதலியார் என்றே அழைக்கப் பட்டுள்ளார். எழுத்தும், சொல்லும் பாடஞ்சொல்லப் பலர் இருந்தாலும் பொருள் பாடஞ்சொல்லப் பிறையூர் வடுகநாத தேசிகர் ஒருவரே அக்காலத்திருந்தார் என்ற குறிப்பும் கிடைக்கின்றது.

பழந்தமிழ் நூல்களை வெளிக்கொணர வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் மிகுந்த சிரமத்துடன் இத்தொல்காப்பியம் பொருளதிகாரத்தைப் பதிப்பித்துள்ளார் என்பது அவர் பதிப்புரையால் மிகத் தெளிவாகின்றது.

திரவியலாபத்தை எவ்வாற்றானுங் கருதி முயன்றிலேன். கை நஷ்டம் வராதிருப்பதொன்றே எனக்குப் போதும். இது வரையிற் பதிப்பித்த நூல்களால் எனக்குண்டான நஷ்டம் கொஞ்சமல்ல. இவ்வித முயற்சியிற் கையிடுவோர் நஷ்டமுறா திருத்தற் பொருட்டுச் சர்வகலாசாலைப் பரீக்ஷையிற் தேறி, ஆங்காங்குப்

பெரும் உத்தியோகம் வகித்திருப்போர் தத்தம் சொயபாஷையில் அச்சிடப்படும் பூர்வகிரந்தங்களில் ஒரு பிரதி வாங்குதல் அவர் கடமையென்றெண்ணுகிறேன்.

இந்நூலைப் பதிப்பித்தற் வேண்டிய காகிதத்திற் காகத் திரவிய சகாயஞ் செய்த கண்ணிய தர்மசீலர் இருவர் உளர். அவர்களுக்கு மிக்க நன்றி கூறுகின்றேன் என இறுதிப் பகுதியில் எழுதுகின்றார்.

(இப்பதிப்புரையால் கடந்த நூற்றாண்டு உரைநடை அமைப்பு, 2. ஈழத்தமிழ் அமைப்பு, 3. பதிப்பித்தலின் சிக்கல்கள், 4. தொல்காப்பியம் பற்றிய எண்ணங்கள் இவற்றைத் தெரிந்து கொள்வதற்காகப் பின் இணைப்பாகத் தொல்காப்பியப் பொருளதிகாரம் சி.வை.தா. பதிப்புரை 1885 தரப்பெற்றுள்ளது).

இவர் பொருளதிகாரத்தைப் பதிப்பித்தபோது முழுவதும் நச்சினார்க்கினியர் உரையென்றே கருதிப் பதிப்பித்துள்ளார்.

தொல்காப்பியம் நச்சினார்க்கினியம் முற்றும் என்றே உள்ளது. நூற்பா ஒருவகை எழுத்திலும் உரை பிறிதொரு எழுத்திலுமாக அச்சிடப்பட்டுள்ளன. பின்பு ரா.ராகவையங்கார் முதல் ஐந்து இயல்களுக்கு நச்சினார்க்கினியமும், பின் நான்கு இயல்களுக்குப் பேராசிரியமும் எனத் தெளிபடுத்துகின்றார்.

முதற்பதிப்பு என்ற முறையில் மிகவும் பயனுடைய பதிப்பு. அடிக்குறிப்புகளோ, பாடவேறுபாடுகளோ தரப்படவில்லை. முதலில் சூத்திர அகராதி 12 பக். அடுத்துப் பதிப்புரை 12, பக். பிழைதிருத்தம் 4 பக். நூல் 851 பக். ஆக 886 பக்கங்கள். வித்துவான் மு. சண்முகம்பிள்ளையிடமிருந்து இப்பதிப்பு கிடைத்தது. இம்முதல் பதிப்பு (1885) தற்போது தமிழ்நாட்டில் மறைமலை அடிகள் நூலகம், சென்னை உ.வே.சா. நூலகம், சென்னை சிவஞானமுனிவர் நூலகம் திருநெல்வேலி ஆகிய மூன்று நூலகங்களிலும் கிடைக்கின்றன.

தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - நச்சினார்க்கினியர் 1892 வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னை.

தொல்காப்பியம் நச்சினார்க்கினியர் உரையை முழுவதும் வெளியிடவேண்டும் என்ற எண்ணம் சி.வை.தாவுக்கு இருந்ததால் 1847இல் தொல்.எழுத்து.நச்சினார்க்கினியம் வந்திருந்தாலும் 1891இல் நூற்பா அமைப்பில் நூற்பாக்களும், உரை பிறிதொரு

வகை எழுத்திலுமாக அச்சிட்டார். பதிப்புரையில் இதுபற்றிக் குறித்துள்ளார். பதிப்புரை, பிழைதிருத்தம், நச்சினார்க்கினியர் பற்றிய உரைச்சிறப்புப் பாயிரம் - நூல் இயல் வெண்பா - சூத்திர எண்ணிக்கை வெண்பா, சூத்திர அகராதி என்ற நிலையில் இப்பதிப்பு அமைந்துள்ளது. அடிக்குறிப்புகள் சில உள.

தொல் - சொல். சேனாவரையத்தை 1868இல் வெளியிட்ட சி.வை.தா. தொல்-சொல் நச்சினார்க்கினியத்தை 1892இல் வெளியிட்டார். இப்பதிப்புத்தான் இவ்வுரைக்கு முதற்பதிப்பாக அமைகின்றது. முன்பகுதி இல்லாததால் பதிப்புரை, போன்றவை கிடைக்கவில்லை. அடிக்குறிப்புகள் இல்லை. நூல், இயல் நூற்பா எண், வெண்பா, சூத்திர அகராதி - இந்நிலையில் நூல் அமைந்துள்ளது. முதற்பதிப்பாக இருப்பதால் பின் பதிப்புகளோடு ஒத்துப் பார்த்துப் பாடவேறுபாடுகள் காண மிக உதவியதாக உள்ளது. இப்பதிப்பு மறைமலையடிகள் நூலகத்திலிருந்து கிடைத்தது.

தொல்-சொல்- சேனாவரையம் (1868)

தொல் - பொருள் - நச்சினார்க்கினியம் (1885)

தொல்.சொல்.நச்சினார்க்கினியம் (1892)

மூன்றையும் முதன் முதல் அச்சில் கொணர்ந்தவர் என்ற பெருமை சி.வை.தாவைச் சாரும்.

> பன்னீராயிரம் வருஷ காலத்திற்கு மேற்பட நிலை பெற்றோங்கித் தமிழ்க்கோல் தனிச் சுடர்போலப் பிரகாசித்துவந்த தொல்காப்பியமுந், தற்காலத்து இலக்கணங்கற்போர் அனைவரும் அதன் வழித் தோன்றிய சிற்றிலக்கணங்களையே கற்று அம்மட்டோடு நிறுத்தி விடுவதால் எழுதுவாரும் படிப்பாரு மின்றிப் பழம்பிரதிகளெல்லாம் பாணவாய்ப்பட்டுஞ் செல்லுக்கிரையாகியுஞ் சிதைவுபட்டும் போக யாவராயினும் ஒருவர் வாசிக்க விரும்பிய வழியுங் கிடைப்பதருமையாய் விட்டது. தமிழ் நாடனைத்தினுமுள்ள தொல்காப்பியப் பிரதிகள் மிகச்சிலவே. அவையாவும் மிக்க ஈனஸ்திதி அடைந்திருப்பதால் இன்னுஞ் சில வருடத்துள் இறந்துவிடுமென்று அஞ்சியே அதனை உலோகோபகாரமாக அச்சிடலானேன்"

இதுவும் யாம் மேற்கூறியதை வற்புறுத்தும்.

### எழுத்ததிகாரம்

ஒருமுறையாயினும் பிறர் பிரசுரித்த நூல்களை மீள அச்சிடுவிக்காத எனக்கு இவ்வெழுத்ததிகாரம் ஒருவிலக்காயிற்று. அன்றியும் ஒரு பெருநூலின் முதலிலேயுள்ள ஓர் சொற்பாகத்தை மாத்திரம் ஒருவர் பிரசுரம் செய்து கதி அடைந்துவிட்டால், பின்னர் அந்நூல் முழுவதையும் அச்சிடுவோர் முதல் பாகத்தையும் சேர்த்து அச்சிடுதல் நன்றாகும். உலக வழக்கமும் அதுவே. இந்நூல் அச்சிடுவதற்குப் புதுக்கோட்டை சமஸ்தானத்து நீதிபதி ஒருவரான ம. அண்ணாமலைப்பிள்ளை அவர்கள் மிக்க திரவியோபகாரஞ் செய்தனர். ஆகவே எழுத்ததி காரம் 1891 ஆ வைகாசி மீ வெளிபோந்தது.

அது பெரும்பாலும் மகாலிங்க ஐயர் பிரதியை ஆதார மாகக் கொண்டும் தென் தேசப்பிரதிகளை உபகரணமாக வைத்தும் அச்சிடப்பட்டது. முன் ஒருவர் பதிப்பித்த நூலை திரும்பவும் பதிப்பித்தல் தகாது என்பது பிள்ளை அவர்களின் பிரமாணம். இவ்வெழுத்ததிகாரம் மாத்திரம் அப்பிரமாணத்திற்கு ஓர் புறனடையே போலும்.

## பின்னிணைப்பு

உ

### தொல்காப்பியப்
### பதிப்புரை

யானை யானனனைத் தேனிமிர் கடம்பனை
வானமர் குழவியா லோனுறை சடையனை
இமய சிமிலமென் குமரியென் றமையும்
உமையைத் தமியேன் றமமலந் துமிப்பப்
போத சற்குருவாய் மாதொரு பாகன்
வேத வனத்தெழூஉ மேதகு கயிலாய
நாத தேசிகன் பாதவருட் கொடுதொழீஇக்
கற்றறி வில்லாக் கடையனேன் றனக்கு
நற்றமிழ் கொளுத்திய நாவலன் சுன்னை
முத்துக் குமார வித்தக னடியிணை

சித்தத் திருத்திமற் றுத்தம புலவர்
அடிக்கம லங்களென் முடிக்கணி கொடுக்கநின்று
அடியேன் கூறுவது ஒன்றுளது

உலகிலுள்ள கல்லெல்லாஞ் சாதிரத்தினமாயின், அவை உயர்வுடையனவாமா? இழிந்தனவும் உளவாயினன்றே ஒழிந்தன உயர்வது? ஆதலாற் தம் உயர்வு விளங்குதற் பொருட்டாகவாவது என் மொழியையும் பெரியோர் தம் பொன் மொழியினடுவே வைத்தனர் எனத் துணிந்தனன்.

"வீங்குகடலுடுத்த வியன்கண் ஞாலத்துத்
தாங்கா நல்லிசை தமிழ்க்கு விளக்காகென
வானோரேத்தும் வாய்மொழிப் புகழானாப் பெருமை
யகத்திய னென்னு மருந்தவ முனிவனாகிய முதனூல்"

எனப் புகழப்பெற்ற அகத்தியம் முதற்சங்கக் காலத்திற் தொல்காப்பியத்திற் தலைமை பெற்றும், இடைச்சங்கத்தார் காலத்தில் அதனோடு கூடநின்று லவியுங்.... அதன்பின் இதுவரைக்குந் தமிழுக்குப் பேரிலக்கணமாயுள்ளது தொல்காப்பியமே. இஃது அகத்தியற்பாற் தமிழ் நன்குணர்ந்த அவர் மாணாக்கர், திரணதூமாக்கினி அதங்கோட்டா சான் தூராலிங்கன் செம்பூட்சேய் வையாபிகன் பல்காப்பியன் பனம்பாரன் கழாரம்பன் அவினயன் காக்கைபாடினியன் நற்றத்தன் வாமனன் என்னும் பன்னிருவருள் முதல் மாணாக்கரென்று தம்மனோ ரனை வரானுந் துதிக்கப்பட்ட திரணதூமாக்கினி யென்னும் இயற் பெயரினையுடைய தொல்காப்பிய முனிவர் அருளிச் செய்தது.

அகத்தியர் மாணாக்கர் அனைவருள்ளும் இவரே மிகச்சிறந்தரென்பது "தொல்காப்பியன்ற னாணையிற் றமிழறிந் தோர்க்கடன்" எனவும், அகத்தியரிடம் பாருந்தக் கற்றுப் புனைவுணர்ந்தோர் நல்லிசை நிறுத்த தொல்காப்பியன்" எனவும் பல்காப்பியத்தும் பன்னிருபடலத்தும் விதந்தோதப்பட்டமை யானும், நிறையோருட்சிறந்து இவரோடொருதலை அகத்தியனார் பொருள் முரணிய அதங்

கோட்டாசாற் கரிறபத் தெரித்து'' எனப் பனம்பாரனாற் துதிக்கப்பட்டமையானும் உணர்க.

அகத்தியர் உத்தரதிசையினின்று நீங்கித் தெக்ஷண திசை வதிந்தபின் தமிழிற்கு இலக்கணஞ் செய்வான் கருதி, இயலிசை நாடகங்களில் ஆங்காங்குத் தமது ஆராய்ச்சியின்கண் எதிர் வந்தார் குறிக்கப்பட்ட விதிகளைப் பின்னர் ஒருங்கு திரட்டி அகத்திய மென்றும் பெயரிட்டுக் கொடுத்தனர். அது நெறி முறைப் பட இயைபு பட்டிலாது, இயலிசைநாடகத் தமிழ்களும், இயலுள்ளும் எழுத்து சொற் பொருள்களும், ஒருங்கு விரவிப் பெரிதும் பரந்து கிடந்ததோர் நூலாயிற்று. அதனை வெவ்வேறு பிரித்து, அடைவுபடுத்து, தொல்காப்பியமுடையார் இயற்றமிழையும் பெருநாரை பெருகுருகு முதலிய நூலுடையார் இசைத் தமிழையும் முறுவல் சயந்தணநூல் செயிற்றியமென்றிவையுடையார் நாடகத்தமிழையும் இதும் விரித்தும் மயக்கற முறை காட்டித் தத்தமநூல் யாத்தனர்.

இவற்றுள்ளும் "முந்துநூல் கண்டு முறைப்பட வெண்ணி மயங்கா மரபி னெழுத்துமுறை காட்டி" ஐந்திரநிறைந் தொரு இலக்கணத்தின் மாண்பு இளங்கதிர்க்கான்றுதித்த பாலசூரி யானனாற்போல வரவர அதிகரிக்கத் துரோகவிடத்து முன் குலவி விளங்கிய கிருபாசாரியாஞ்ஞையை யொத்து அகத்தியாப்பியாசங் குன்றின மையானுந் தவத்தான் மனந்தூய முக்குணங்களையுங் கடந்து இறை வனருள் பெற்றுடையாராகிய தொல்காப்பியர் ஒருகாலத்துத் தமக்கு அகத்தியனாரால் வந்ததோர் சாபத்தி னிமித்தம் இட்ட சாபத்தின் வலிமையி னானும், அகத்தியமும் இறந்துபோக நேர்ந்தது. அல்லாக்கால் என்றென்றுஞ் சிரஞ்சீவியா யிருக்கப் பெற்றுள்ள அகத்தியனார் அருளிச்செய்த நூல் சங்கத்தார் காலத்திற்றானே வீழ்ந்துபோகாது, ஆசாரிய வழிபாட்டிற் குறைவில்லாத திரண தூமாக்கினி அவ்வாறு சபித்தற் பாலரோ என்றாரு முளர். அதுவன்றே அவர் ஆசாரியரைச் சபியாது

அவராற் செய்த நூலைச் சபித்ததென்க. சீஷரது சாபத்தை ஆசாரியர் தடுக்க வன்மையிரோ வெனில் ரிஷிகள் சாபத்தைக் கடவுளர் தடுக்கும் வன்மையில ரெனின் இது கடாவன்றென மறுக்க.

பராக்கிரம பாண்டியனை வென்று துலுக்கர் முதன் முதல் அரைசாண்டு எண்ணூற்றைம்பது வருடத்தின் மேலாயிற்று. சங்க காலத்தார் காலத்திற்கும் பராக்கிரமபாண்டியன் காலத்திற்கும் இடையிலே சோமசுந்தர பாண்டியன் முதலாக நாற்பத்திரண்டு அனுலோம பாண்டியர் அரசு செய்திருக்கின்றனர். ஆதலாற் கடைச்சங்கம் ஒழிகாலம் இரண்டாயிரம் வருஷத்திற்குக் குறையாது.

முடத்திருமாறன் முதல் உக்கிரப் பெருவழுதியீறாகக் கடைச்சங்கம் இரீஇய நாற்பத்தொன்பதின்மர் பாண்டியர் அரசுபுரிந்தகாலம் இரண்டாயிரம் வருஷமும், வெண்டேர்ச் செழியன் முடத்திருமாறனீறாக இடைச்சங்கம் மூவாயிரத்தைஞ் ஞூறு வருஷமுங் வழுதிமுதற் கடுங்கோன் வழுதியீறாக முதற் சங்கம் இரிஇயநாற் பத்தொன்பதின்மர் பாண்டியர் அரசு புரிந்த காலம் நாலாயிரத்தைஞ் ஞூறு வருஷமுமாம்.

ஆகவே, முதற் சங்கத்திற்கு முன்னரே முதனூல்கண்ட ஆசிரியர் அகத்தியனாரிடந் தமிழ்கற்று, அச்சங்கத்திற் தாமும் உடனிருந்து தமது நூல் நிலவச் செய்த திரணதூமாக்கினி முனிவரர் தொல்காப்பியம் இயற்றியபின் சென்றகாலம் எவ்விதத்தானும் பன்னிரெண்டாயிரம் வருடத்திற்குறையாது. இக்கால விவரணம் வீரசோழியப் பதிப்புரையில் விரிவாக ஆக்ஷேபநிவாரணத்தோடும் எழுதியிருக் கின்றேன். ஆங்குக் கண்டுணர்க.

இவ்வாறு பன்னீராயிர வருஷகாலத்தில் மேற்பட நிலை பெற்றோங்கித் தமிழ்க்கோர் தனிச்சுடர் போலப் பிரகாசித்து வந்த தொல்காப்பியமுந் தற்காலத்து இலக்கணங் கற்போர் அனைவரும் அதன் வழித் தோன்றிய சிற்றிலக்கணங்களையே சற்று அம்மட்டோடு நிறுத்திவிடுதலால், எழுது

வாரும் படிப்பாருமின்றிப் பழம்பிரதிகளெலாம் பாணவாய்ப்பட்டுஞ் செல்லுக்கிரையாகியுஞ் சிதைபட்டுப்போய் யாவராயினும் ஒருவர் வாசிக்க விரும்பியவழியுங் கிடைப்பது அருமையாய் விட்டது. தமிழ் நாடனைத்திலும் உள்ள தொல்காப்பியப் பொருளதிகாரப் பிரதிகள் இப்போது இருபது இருபத்தைந்திற் மேற்படா. அவையும் மிக்க ஈனஸ்திதி அமைந்திருப்பதால் இன்னுஞ்சில வருஷத்துள் இறந்துவிடு மென்று அஞ்சியே அதனை உலோகோபகாரமாக அச்சிடலானேன்.

இந்நூற்கு உரையெழுதினோர் இளம்பூரணர் கல்லாடர் பேராசிரியர் சேனாவரையர் நச்சினார்க்கினியர் ஐவர். இவருள் வட நூற்கடலை நிலை கண்டுணர்ந்த சேனாவரையர் சொல்லதிகாரம் ஒன்றனுக்கே மற்றை உரைகளினும் மிகச்சிறந்ததோர் உரையெழுதினர். இளம்பூரணர் பேராசிரியருரைகள் முழுவதும் இப்போது இல்லை. கல்லாடருரை மிகச்சுருங்கியது. நச்சினார்க்கினியருரையே பிற்காலத்தது. பூரணமாகவும் விரிவாகவும் உள்ளதும் பெரும்பாலும் ஓதிவரப்பெற்றதும் அஃதொன்றே.

அது கடைச்சங்கத்தார் காலத்தின்பின் சமணர் தமிழ் தானஞ் செய்த காலத்துத் தோன்றியதாதலானும், நச்சினார்க்கினியாரும், பரிமேலழகரும் ஒரே காலத்தினராதலானும். இற்றைக்கு ஆயிரத்திருநூறு வருஷத்தின் முன்பு எழுதப்பட்டிருத்தல் வேண்டும். அன்றியுந் தமிழிற் சிறந்த இதிகாசங்களாகிய இராமாயணம் பாரதங்களின்றும், பெருங்காப்பியமாகிய கந்தப் புராணத்தினின்றும் உதாரணங்கள் கொள்ளப்படாமையே இதற்குச் சான்றாகும். அவைகள் எழுதப்பட்டு ஆயிரத்திருநூறு வருஷஞ் சென்றமை யாரானும் மறுக்கப்படாது.

சென்னப்பட்டணத்தில் இற்றைக்கு ஐம்பதறுபது வருஷத்தின் முன்னிருந்த வரதப்ப முதலியாரின் பின் எழுத்துஞ் சொல்லுமேயன்றித் தொல்காப்பியப் பொருளதிகாரத்தை உரையுதாரணங்களோடு பாடங்கேட்டவர்கள் மிக அருமை. முற்றாய்

இல்லையெனத் தெரிந்தவாறே சொல்லலாம். வரதப்ப முதலியார் காலத்திலுந் தொல்காப்பியம் அருமையென்பது அவர் தந்தையர் வேங்கடாசல முதலியார் அதனைப் பாடங்கேட்கும் விருப்ப முடையரான போது திருவாரூர் வடுகநாததேசிகர் ஒருவரே தொல்காப்பியம் அறிந்து இருக்கிறா ரென்று கேள்வியுற்றுத் தமது ஊரைவிட்டு அதிக திரவியச்செலவோடு அவ்விடம்போய் இரண்டு வருஷமிருந்து பாடங்கேட்டு வந்தமை யானும், வரதப்ப முதலியார் ஒருவரே பின்பு அவர் தந்தைபாற் கேட்டறிந்தவரென்பதானும், அது காரணமாக அவருக்குத் தொல்காப்பியம் வரதப்பமுதலியா ரென்று பெயர் வந்தமையானும், பின்பு அவர் காலத்திருந்த வித்துவான்கள் தமக்குத் தாயாயினும் இலக்கண சமுசயம் நிகழ்ந்துழி அவரையே வினவி நிவாரணஞ் செய்தமையானும் நிச்சயிக்கலாம்.

பொருளிலக்கண ஆராய்ச்சி குறைவுபட்டது தற்காலத்து மாத்திரமன்று கடைச்சங்கத்தார் காலத்திலேயே உக்கிரப் பெருவழுதி "நூல் வல்லாரைக் கொணர்கவென்று எல்லாப் பக்கமும் போக்க, எழுத்ததிகாரமுஞ் சொல்லதிகாரமும் யாப்பதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து, பொருளதிகாரம் வல்லாரை எங்கும் தலைப்பட்டிலேமென்று வந்தார். வர, அரசனும் புடைப்படக்கவன்று. என்னே? எழுத்துஞ் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட் டன்றே! பொருளதிகாரம் பெற்றேமே யெனின் இவை பெற்றும் பெற்றிலேம் எனச் சொல்லி வருந்தினான்" என்றும், மதுரை ஆலவாயெம் பெருமான் இறைவனார் அகப் பொருட் சூத்திரம் அறுபதும் அருளியவழியும் அவற்றின் பொருள் காண்பாரின்றி வருந்திக் கடவுளையே தன் சங்கத்தாரோடு சென்றிரந்து பொருள் காணவல்லானொருவனைப் பெற்றா னென்றுஞ் சங்கப்புலவர் சிகாமணியாகிய நக்கீரர் வாயாற் கூறப்பட்டுக் கிடக்கின்றதே. பின்னை இக்காலத்து அதன் அருமை ஆச்சரியமாமா?

இந்நூலைப் பரிசோதித்து அச்சிட முயன்றபின் தமிழ் நாடுகளில் ஆங்காங்குத் தேடிப் பல பிரதிகள் சம்பாதிப்பது பெரும் பிரயாசையும் நெடுங்கால வேலையுமாயிற்று. இது தமிழ்நாட்டிற்குப் பேருபகாரமான முயற்சியென்று கண்டு ஸ்ரீகைலாச பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து மஹாசந்நிதானமுந் தம்மை அடைந்தோருக்குப் பெருங்கருணைத் திருவுருவமுமாகிய ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகமூர்த்திகளுஞ் சைவசமயாபிமானியுஞ் செந்தமிழ்ப் பரிபாலனமுமாகிய ஸ்ரீமத் யாழ்ப்பாணம் ந.க.சதாசிவப் பிள்ளையவர்களும், எனது அதி இஷ்டராகிய திருநெல்வேலித் தாசில்தார் ஸ்ரீ கணிதசிங்கம் வை. சின்னத்தம்பியா பிள்ளையவர்களும் பல பழைய ஏட்டுப் பிரதிகள் அழைப்பித்துத் தந்தனர். இவர்கள் செய்த நன்றியை எஞ்ஞான்றும் மறக்கற்பாலனல்லேன் இப்பிரதிகளோடு ஸ்ரீதிருத்தணிகைச் சரவணப் பெருமாளையர் பௌத்திரர் துரைசாமியையர் பிரதியொன்றும் புரசபாக்கம் ஸ்ரீ சாமுவேற்பண்டிதரவர்கள் தமது சொந்தக் கையினாலே எழுதிவைத்திருந்த பிரதியொன்றும், அடியேன் வசமிருந்த தொல்காப்பியம் வரதப்பமுதலியார் பிரதியொன்றும், மதுரைப் பிரதியொன்றுஞ் சேர்த்து, இவற்றுட் திருநெல்வேலிப் பிரதி இரண்டு, மதுரைப் பிரதி இரண்டு, தஞ்சாவூர்ப் பிரதி மூன்று, சென்னைப் பட்டணப் பிரதி மூன்று, யாழ்ப்பாணப்பிரதி இரண்டாகப் பன்னிரண்டு பிரதிகொண்டு பரிசோதித்து என் விருப்பத்தை ஒருவாறு நிறைவேற்றினேன்.

ஆயினும் இஃது இப்போது வழுவறப் பிரசுரஞ் செய்யப்பட்டதென்று கொள்ளற்க. எனக்குச் சந்தேகம் பிறந்துழியெல்லாம் தற்காலத்துப் பெயர்போந்த வித்துவான்களாயுள்ளோர் பலரை வினவியும் அயனூற் துணிபுகள் மேற்கோள்களோடு சீர்தூக்கி இன்னும் ஐயமறுத்துக் கொள்ளாத இடங்கள் அனேகம் உள. அவைகளைக் கூடிய மாத்திரம் பிரதிகளிலிருந்தவாறு அச்சிடுவித்ததன் பொருட் தொகுதி என்பதைப் பொருட்தொகுதி

என்றும் பேரர் உட்தொகுதி என்றும், பேர் அருட்தொகுதி என்றும், பேரருட் தேர்குதி என்றும், பொருட்தேர்குதி என்றும், பொருட் தேர்குதி என்றும் படிக்கலாம். ஒரு சுவடியில் பொருட் டொகுதி என்றிருந்ததால் இது தெளிவுபடுகின்றது என்றத் தொடக்கத்தனவாய் இன்னும் பலபாட பேதகப் படித்தற்கிடம் பெற்றுப் பொருட்டொகுதி என்றெழுதிக்கிடந்த தொன்றையான் அவற்றுள் ஒன்றாக என் சிற்றறிவு சென்றவாறு குறியிட்டுப் பதிப்பித்தமை பற்றி அதுவே பாடமென்று நிச்சயிக்க வில்லை. சமுசயநிகழ்வுழியெல்லாஞ் சந்தியை மீளவும் இலக்கணப் பிரகாரம் புணர்த்துத் தீர்க்க பேதத்தையும் புள்ளியையும் நீக்கிப் பாடபேதப் படுத்திப் பார்க்குமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

சம்பளத்திற்காக ஏடெழுதுவோரது சாதாரண கல்வித் திறனையும் எழுத எழுத வழுக்கள் அதிகப்படும் விதத்தையும், பழங்காலத்து ஏட்டுப் பிரதிகள் அடைந்திருக்கும் ஈனஸ்திதியையும், பாடங் கேட்டோர் இல்லாததன்மையையும் நோக்கில் அனகே வித்துவான்களாய் ஒரு சபை சேர்ந்து ஒருவரொடொருவர் தீர்க்க ஆலோசனை செய்து பதிப்பினும் பல வழுக்கள் புகுதற்கிடனாய இவ்வரிய நூலை யான் ஒருவனாய்ப் பரிசோதித்துப் பிரசுரஞ் செய்தமையால் இடந்தோறும் பலபல வழுக்கள் செறிந்திருத்தல் இன்றியமையாமையே.

ஐயந்திரிபறத் தாங்கற்றறியாததோர் நூலை இவர் இங்ஙனம் வழுவுற அச்சிடவேண்டியதென்னையென யாரும் வினவுவாராயின் வழுச்செறிந்ததாயினும். அடியோடழிந்துபோகின்ற நூலை அடியேன் பாதுகாத்தது பேருபகாரமன்றோ என்க. மேலும், இதனை உரையுதாரணங்களோடு பாடங் கேட்டவர் யாராவது உளராயினரோ அவராயின்றி யான் செய்தது தவறாவது? யார் செய்யினும் இதுவே முதலாவதாயின் அடியேன் மேற் குறை கூறுதல் தர்மமன்று.

அன்றியுஞ் சும்மாகிடந்த அம்மையாருக்கு அரைப்பணத் தாலி போதாதா? காண்டற்கும் அரிய நூலைக் கைக்கெட்டப் பண்ணினது கேடாமா? பிரதி கிடைப்பதே மிக அருமையாயுங் கிடைப்பினுங் குறைப்பிரதிகளாகவும் அவை தாமும் ஒரோவொரு வரிக்குப் பலவழுவாக ஆயிரக்கணக்கான வழு உடையவனவாகவும் இருக்க அடியேன் அவ்வழுத் தொகையைக் குறைத்து நூற்றுக்கணக்காக்கி விட்டதா என்மேற் குறையாயிற்று?

அங்ஙனமாயின், இவரினும் வல்லோராய் இன்னும் அனேக வழுக்கள் குறையப் பிரசுரஞ்செய்யத்தக்க வித்துவான்கள் இலரோவெனின், உளராயின் ஏன் செய்திலரென விடுக்க. பல பெரும் வித்துவான்கள் இந்நூலை அச்சிட விரும்பியதும், முயன்றதும் இரண்டொரு பிரதிகள் தேடிப் பார்வையிட்டதும், தமக்கு நிகழ்ந்த சந்தேகங்களான இதனை அச்சிடிற் தம் பெயர்க்குக் குறைவு நேரிடுமென்று முயற்சியைக் கைவிட்டதும் அடியேன் பூரணமாக அறிவேன். ஆதலாற் பண்டிதர் கவிராஜபண்டிதர் மஹா வித்துவான் புலவரென்றோரின்ன பெரும்பட்டச் சுமையைத் தலைமேலேற்றிக் கொள்ளாது இன்னும் பலகாலந் தமிழ் படித்தற் குரிமை பூண்டு நிற்கும் என்போலியரே இதிற்கையிடுவது போலவசிய மாயிற்று.

பஞ்சகாவியம், பஞ்சிலக்கியம், அகநானூறு, புறநானூறு, நற்றிணை, கலித்தொகை, நெடுந் தொகை, குறுந்தொகை, திணை மரபு, செய்யுட் டொகை, கல்லாடம், பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, பரிபாடல், தகடூர் யாத்திரை, பெருந்தேவனார் பாரதம், பதினெண் கீழ்க்கணக்கு, வெண்பாமாலை யென்று இன்னோரன்ன இலக்கியங்களும், புறப் பொருட் பன்னிருபடலம், வையாபிகம், வாய்ப்பியம், அவினயம், காக்கைபாடினியம், நற்றத்தம், வாமனம், பல்காயம், பல்காப்பிய மென்று இன்னோரன்ன இலக்கணங்களும் முற்றக்கற்ற வல்லோரே இந்நூலைப் பரிசோதித்தற்கு அருகராவர் அப்படிச் சிறந்துளோர் தற்காலத்தில் இலரென்பது யான் கூற

வேண்டியதில்லை. "விடியல வெங்கதிர் காயு வெயமலகலறை" என்னும் வாக்கியத்தையும் ஓர் பரிபாடற் செய்யுளையுஞ் சரியாய்ப் பிரித்துணர்தற்கு எத்தனை புலவரிடங் கொண்டு திரிந்தேன்? எத்தனை வித்துவான்களுக்குக் கடிதமெழுதிக் கைசலித்தேன்? எனக்கு வந்த மறுமொழிகளை வெளியிட்டுச் சொன்னால் மிகவும் வெட்கக் கேடென்றறிக, அவை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் மகத்துவத்தை நன்கு விளக்கின.

மேலுஞ் சரகத்தைச் சாகமென்றும், அளபை அன் பென்றும், இதரவிதரத்தை இதாவிதாவென்றும், திகந்தராளத்தைத் திகந்தரளமென்றும், மென்மையையே என்றும், தபுதார நிலையை தபுதரா நிலையென்றும், மூலவன் என்பதை முதல்வ னென்றும் இன்னும் பலவாறாக மயங்கினோர் பெயர் பெற்ற வித்தவான்களே யாதலான் ஏட்டுப் பிரதியோடு ஊடாடிய சிரேஷ்ட புலவர்கள் அடியேன் தவறுகளைப் பாராட்டாது பொறுத் தருளுவதுமன்றி இன்னும் இம்முயற்சியை வியந்து கொள்வார்களௌன்பதிற் சந்தேகமில்லை. ஏடு பிடித்துவாசிக்க அறியாத அச்சுப்பிரதி வித்துவான் களுந் தமதகத்து மெய்ப் பொருமையொன்றிலராய்ப் பிறரைக் குறைதூற்றலாற் தாம் நிறையுடையார் போலத் தோற்றலாமென மயங்கும் போலி வித்து வான்களுமே இவ்வித வழுக்களைக் குறித்து என்னை இகழ்வர். எனக்கு அது குறைவன்று. இவர் கூற்றைப் பெரியோருங் கவனியார்.

குறைகூற இஷ்ட முள்ளவர்கள் இன்னும் அச்சிலே தோன்றாதனவாய், அடியேன் காட்டுங் கிரந்தங் களில் இரண்டொரு ஏட்டையாயினும் எழுத்துப் பிழையற மாத்திரம் வாசித்துக் காட்டுவாராயின் அவர்கள் பாதாம்புயத்தை உச்சிமேற் சூடி அவர்கட்குத் தொண்டுபூண்டொழுகு வேனென்று அறிவாராக. ஏடு கையிற் பிடித்தவுடன் அதன் எழுத்துத் தேகவியோகமான தந்தை கையெழுத்துப் போற்தோன்றிற்றென்று கண்ணீர் பெருக அழுத கதையுமுண்டன்றோ?

காலாந்தரத்தில் நூல்களுஞ் செய்யுட்களும் அடைந் திருக்கும் மாறுபாடு இவ்வளவிற்றெனற்பாலதன்று. கம்பர் சேரதேசத்திருந்து வரும்வழியிற், பாலைக் காட்டிலே, சிலர் செய்த இராமாயணப் பிரசங்கத்தைக் கேட்டபோது, தமது பாட்டுக்களும் இடைக்கிடை வருவனவாகச் சொல்லி கதை கேள்வியுற்றிருக்க லாமே.

"அடிசிற் கினியாளே யாக்கஞ்செய் வாளே
படிசொற் கடவாத பாவா - யடிவருடிப்
பின்றூங்கி முன்னெழூஉம் பேதையே போதியோ
என்றாங்கு மென்கண் ணினி"

எனத் திருவள்ளுவ நாயனார் சொல்லியதாக இக்காலத்து வழங்கும் பாட்டுக்கும் நமது உரையாசிரியர் காலத்து வழங்கியபடி எழுதியிருக்கும்.

"அடிசிற் கினியாளைப் பண்புடையன் யாளைப்
படுசொற் பழிநாணு வாளை - யடிவருடிப்
பின்தூங்கி முன்னுணரும் பேதையை யான் பிரிந்தா
லென்றூங்கு மென்க ணெனக்கு"

என்பதற்கும் எவ்வளவுபேதம்!

அடித்தொகை சீர்த்தொகைகள் மாறுபட்டுப் பாவே வேறு பட்டுப் போயினவும் அனேகம் உள. இப்போது அறுசீரடியாசிரிய விருத்தமாக வழங்குகின்ற

"முன்னைத்தஞ் சிற்றின் முழங்கு கடலோத மூழ்கிப் பெயர
வன்னைக் குரைப்பனறிவாய் கடலே யென்றலறிப் பெயருந்
தன்மை மடவார் தணந்துகுத்தவெண் முத்தந் தகைசால் கானற்
புன்னை யரும்பென்னப் போவாரைப் பேதுறுக்கும் புகாரே யெம்மூர்"

என்னும் புகார்ச்சிறப்பு ஆசிரியர் மூன்றாம் அடி நான்கு சீரேயுடையதாக வேறு பாவின்பாற்படுத்தி உதாரணங் காட்டினர். இவ்வாறு மாறுபட்ட செய்யுட்கள் அனேகம் உரையகத்து ஆங்காங்குக் காணப்படும். அவைகள் ஆசிரியர் காலத்திற்கு முன்னர்த்தானே எத்துணைத் திரிபடைந் தனவோ?

இனி இவற்றின் பூர்வசொரூபம் நிச்சயித்தல் யார்க்கும் அரிது அரிது.

இந்நூலின் இயலடைவுகளேயன்றி அதிகாரத் தொகை தானும் உரையாசிரியர் காலத்திற்கு முன்னரே பிறழ்ந்து போயின. அவையிற்றை ஆசிரியர் பலவிடத்துங் குறித்த கண்டனைகளா னுணர்க.

உரையாசிரியர் காட்டிய உதாரணச் செய்யுட்களிற் தற்காலத்திலுள்ள வில்லங்கத்தைக் குறித்துஞ் சில மொழி சொல்வது யான் அவற்றோடு பட்ட பிரயாசத்தை ஒருவாறு விளக்கும்.

"விண்டுதாங்குகைம் மேலையோன் மால்வரை சென்றான் மாழிவும் வாம்பெருந்திரை வளாகமென் மொழிய செல் வழியாம்"

விண்டு தாங்குறு முலகுயிர் முழுதுமோர் விரவிற்
கொண்டு தாங்குறு குறட்படை கோடிநூ றிண்டப்
பண்டு தாங்கலந் தரியர னிருவரும் பயந்த
செண்டு தாங்குகைம் மேலையோன் மால்வரைச்
சென்றான்

(கந்தப்புராணம், கணங்கள்செல்படலம், பா. 8)

வாம்பெ ருந்திரை வளாகமுன குடிபயில் வரைப்பிற்
றாம்ப ரப்பிய கயல்களின் விழிக்கய ரவிரக்
காம்பி னேர்வரு தோளியர் கழிக்கயல் விலைசெய்
தேம்பொ திந்தசின் மழலைமென் மொழியசெவ் வழியாழ்

(பெரியபுராணம், திருக்குறிப்புத்
தொண்ட நாயனார் புராணம், பா: 38)

எனவும் மோனையுந் தவறாது அடியளவும் விகாரப்படாது இரண்டு தாரணங் குறிக்கப் படுமாயின், இவற்றை ஒன்றொன்று ஒரோவொரு செய்யுளின் முதலும் ஈறுமென்பது அச்செய்யுட் களைக் கந்தப்புராணத்திலும் பெரியபுராணத்திலுங் கண்டறிந் தோர்க்கன்றி மற்றையோருக்குப் புலப்படுவதெங்ஙன்? "மண்ட மாலோ", "தண்ணறுங் கோங்கமலை என்பன "மண்ட மா" லோதண்ணறுங் கோங்க "மலை" என முன்னையதில் ஒரெழுத்து

பின்னையதில் இரண்டெழுத்துமே மாத்திரம் அவ்வச்செய்யுளின் ஈற்றெழுத்து எனக் கண்டு பிடிப்பது எந்த ஞானக் காட்சி கொண்டோ! இவற்றுள் அனேகம் இக்காலத்து இல்லாத நூற்களில் உள்ளனவாயின் யாதுதான் செய்தற் பாலது? உள்ள நூற்கும் எல்லாவற்றுக்கும் பெயர் குறித்தாரா.

இது மட்டோ? ஓரோரிடத்தில் ஒன்றினின்று ஒன்றைப் பிரிக்கும் அடைச் சொல்லாவது குறியாவது இன்றி, முதலும் ஈறுமாகப் பல செய்யுட் குறிப்பு ஒருதொடராய் வருவனவும் உள. இவற்றின் அடிமுடி தேடுவது ஸ்ரீ அருணாசலேஸ் வரனுடைய அடிமுடி தேடிய பிரமவிஷ்ணுக்களின் பிரயாசைக்கு எட்டுணையேனுங் குறையுமா?

இதனால் உரையாசிரியர்மேற் குற்றஞ் சொல்கின் றேனென்று கொள்ளற்க. அவர் காலத்து அச்செய்யுட் களும் அவற்றையுடைய கிரந்தங்களும் வழக்கத் துள்ளனவாதலால் அவர் அப்படிச் செய்தலாயிற்று. நமது தேசத்துக் கிரந்த மண்டபங்கள் துலுக்கரால் அக்கினி பகவானுக்கு அளிக்கப்படு மென்றும், தப்பிக்கிடந்தனவும் எழுதுவாரும் படிப்பாருமின்றி ஒன்றொன்றாய் இத்தனைனாள் இலேசில் இறந்து விடுமென்றும் அவர் கனவிலும் நினைத்தவரல்லர். அதை இறந்துபோன இக்காலத்திற்கே இஃதோர் பெருஞ்சங்கடமாயின் அல்லதூஉம் அவர் குறியீடு கொடுத்துப் பிரித்தும் இருக்கலாமே.

இனிச் செய்யுண் முழுவதுங் காட்டப்பட்ட வற்றுள்ளும் இஃது இன்னபாவினமென்று நிச்சயிப்பதும் பலவிடத்து மிக அருமையாயினது. கலியினமான சிலசெய்யுட்களை அடி பிரிப்பதில் சந்தேகமுற்றுப் பல தக்க பண்டிதரை எழுதி விசாரித்தபோது அவர்களும் மயங்கி இணைக் குறளாசிரியப்பாவாகப் பிரித்தனுப்பினர் யாது செய்யுளைத் தான் இணைக்குறளாசிரியமாகப் பிரிக்கக்கூடாது?

முதலில் ஒரே செய்யுளென அடியேன் கொண்ட தோர் உதாரணம் பின்னர் அயனூல் உதாரணச்

செய்யுட்களால் வெவ் வேறு நூலிலிருந்து எடுத்துக் காட்டப்பட்ட இரண்டு செய்யுளெனக் கண்டு இவ்வாறு மாற்றலாயிற்று. பொருட்சுவையே பெரிதெனக் கொண்டு மோனை எதுகை ஆகிய சிறப்புகளைப் பாராட்டாத சங்கச் செய்யுட்களைப் பழம் ஏட்டுப்பிரதிகளில் வாசித்து அடி வகுத்தறிந்த பெரியோர்க்கு இதன் பிரயாசை தெரியாதிராது.

இனி, "இனி, என்சொற் கொள்ளன் மாதோ" என்பதற்கு வார்த்தையைக் கேட்டல் நினக்கு விருப்பமோ? விருப்பமாகில் யான் கூறுகின்றதனைக் கொள்க" என்றாற் போலவும் "அறுசுவை கட்கு முதலாகிய வேம்புங் கடுவும் உப்பும் புளியுங் கரும்பும் போல்வன" என்றாற் போலவுஞ் சொன்முடிவு பொருண் முடிவு பூரணப் படாமல் நின்றுழியும் ஆக்ஷேபவிடைகள் பிறர்கோட் கூறல் தன் மதங்கோட லென்றிவற்றில் ஆசிரியர் மதமிது பிறர் மதமிதுவெனக் காட்டற்கவசியமான அடைகள் சிதைவுற்றுக் கிடந்துழியும், இன்னோரன்ன பிறழ்ச்சி பிற அனுமானிக்கப் பெற்றுழியும், பிரதிகள் அனைத்தும் ஒத்திருப்பனவற்றை எட்டுணையும் யான் மாற்றிலேன், எவ்வகைப் பொருட்டிருத்தமும் யானாகச் செய்ததின்று. துடங்கல் கலிழ்தலாதிய வற்றின் ரூபத்தைமாத்திரம் இக்காலத்ததாகத் தொடங்கல் கலுழ்தலென மாற்றியிருக்கின்றேன்.

இலக்கிய இலக்கணங்களில் வல்ல பெரியோர் இப்பதிப்பிலிலுள்ள குற்றங்களை அடியேனுக்குத் தெரிவிக்கும்படி பல முறையும் பிரார்த்திக்கின்றேன். அன்னோர் அறிவிக்குந்திருத்தங்களைத் திரட்டி, இன்ன இன்ன வழு இன்னஇன்ன வித்துவான்களால் உணர்த்தப்பட்டனவென்று குறிப்பிட்டுத் தொல் காப்பியப் பதிப்புத்திருத்த மென்றொன்று உடனே அச்சிட்டு வெளியிடக் காத்திருக்கின்றேன். ஐம்பது புதுத் திருத்தங்களுக்கு ஒரு பிரதி என நன்றியறிவிற் கோர் அடையாளமாக அனுப்புவேன். இந்நூல் பிழையற வழங்கச்செய்யுழி ஓர் பெரும் லோகோப கார மென்று உணர்வாராக.

இதனைப் பதிப்பித்ததில் அச்சிற்குங் காகிதத்திற்கும் வந்த செலவினும் பரிசோதனைச் செலவு இரு மடங்கிற்கு மேலே சென்றதாகயானும் இப்பெயர்ப் பட்ட அரிய நூல்களைப் படிக்க விரும்பி வாங்குவோர் சிலரேயாதலானும், இதுவித முயற்சியில் கையிடுவது கைம்முதலுக்கே நஷ்டத்தை விளைவிக்கிறது. ஆதலாற் தமிழ் விருத்தியில் அபிமானமுள்ள பொருட்செல்வர்களாற் சிறிது சகாயம் பெற்றாலன்றி இன்னும் இதுபோல அழிகின்ற தசையை அடைந்திருக்கும் அரிய கிரந்தங்களைப் பரிசோதித்துப் பதிப்பித்தலில் ஊக்கஞ் செல்லாது இதுவரையும் அச்சுமணமும் பெறாத பூர்வ கிரந்தங் களைத் தேடிப் பதிப்பிக்கும் நோக்கமுடையேற்குக் கல்வியருமை அறிந்த திரவியசீலர்கள் கைகொடுப் பார்கள் என்று நம்புகின்றேன்.

ஓரொருவர் ஓரொரு நூலைத் தமது செலவிற் தமக்கு இனமான வித்துவான்களைக் கொண்டு பரிசோதித்து அச்சிடு விப்பது தமிழ்த் தேசத்திற்கு எவ்வளவு பேருபகாரமாகும்? எத்தனை அரிய நூல்கள் இறவாதொழியும்? அடியேன் வேண்டுகோளின்படி முன்பு திருவனந்தபுர அரசற்கு மந்திரியாயிருந்த கனம்பொருந்திய ஸ்ரீ.அ. சேஷைய சாஸ்திரியாரவர் கள் கலித்தொகையையுங், கூடலூர் பிரபுக்களில் ஒருவருந் தர்மசீலருமாகிய ஸ்ரீமத் மஞ்சக்குப்பம் ராஜரத்தின முதலியாரவர்கள் தொல்காப்பியம் சொல்லதிகாரத்தை, நச்சினார்க்கினியாருரையோடு தமது செலவாகப் பரிசோதித்துப் பதிப்பிக்கும்படி உத்தரவு செய்திருக்கின்றார்கள். இவர்கள் முன் மாதிரையைப் பிறரும் அனுஷ்டிப் பாராக. இதில் முந்தி நிற்க வேண்டியவர்கள் மடாதி பதிகள். இவர்கள் கருத்து இதிற் செல்லுமாறு சரஸ்வதி கிருபை புரிவாளாக.

திரவிய லாபத்தை எவ்வாற்றானுங் கருதி முயன்றிலேன். நஷ்டம் வராதிருப்பதொன்றே எனக்குப்போதும். இதுவரை பதிப்பித்த நூல்களால் எனக்குண்டான நஷ்டங் கொஞ்சமல்ல. இவ்வித

முயற்சியிற் கையிடுவோர் நஷ்டமுறாதிருத்தற் பொருட்டுச் சர்வகலாசாலைப் பரீக்ஷையிற் தேறி, ஆங்காங்குப் பெரும் உத்தியோகம் வகித்திருப்போர் தத்தஞ் சொயபாஷையில் அச்சிடப்படும் பூர்வ கிரந்தங்களில் ஒருபிரதி வாங்குதல் அவர் கடமையென் றெண்ணுகின்றேன்.

இந்நூலைப் பதிப்பித்தற்கு வேண்டிய காகிதத்திற் காகத் திரவிய சகாயஞ்செய்த கண்ணியதர்மசீலர் இருவர் உளர். அவர்களுக்கு மிக்கநன்றி, கூறுகின்றேன்.

கும்பகோணம் சி.வை.தா.
பார்த்திபஹு ஐப்பசி மீ

## துணை நூல்கள்


1. **தொல்காப்பியம் சொல்லதிகாரம்** - சேனாவரையர் உரை - சி.வை.தாமோதரம்பிள்ளை விபவஹு புரட்டாசி மீ 1868.
2. **தொல்காப்பியம் – பொருளதிகாரம்** - நச்சினார்க்கினியம், 1885, வித்தியாநுபாலனயந்தரசாலை, சென்னை, ப. 889.
3. **ஸ்ரீமான் இராவுபகதூர் – சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்களது சரித்திரம்**, டி.ஏ. இராஜரத்தினம், பிள்ளை, 20 நவம்பர் 1901.
4. அதே நூலை என் முனுசாமி முதலியார் 1934இல் டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர் அவர்கள் எழுதிய முன்னுரையுடன் வெளியிட்டுள்ளார்.
5. **தமிழ் வளர்த்த தாமோதரனார்**, புலவர் இரா.இளங்குமரன், கழக வெளியீடு, 1991.
6. **சி.வை. தாமோதரம்பிள்ளை – தமிழ்ச்சுடர் மணிகள்**, எஸ். வையாபுரிப்பிள்ளை, 1949, பக். 183-193.
7. **நான் அறிந்த தமிழ்மணிகள்** - முதற்பகுதி - பி.ஸ்ரீ., வானதி பதிப்பகம், 1988.
8. **தற்காலத் தமிழ் முன்னோடிகள், சி.வை. தாமோதரம் பிள்ளை**, ஆ. வேலுப்பிள்ளை, 1975.
9. தொல்காப்பியப் பதிப்புகள், முனைவர் ச.வே. சுப்பிரமணியன் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1992.

# பதிப்பு முன்னுரைகள்

தமிழ் இலக்கண, இலக்கியச் சுவடிகள் பதிப்பிக்கத் தொடங்கிய பின்புதான் தமிழ்மொழியின் பரந்துபட்ட பரப்பு தெரியவந்தது. தமிழ் நூல்களை அழியாமல் காத்துப் பாமர மக்களிடையே பரவலாக்கிய பெருமை தமிழ்ச்சுவடிகளைப் பதிப்பித்த பதிப்பாசிரியர்களையே சாரும். தமிழ்ச் சுவடிப் பதிப்பு வரலாற்றில் ஆறுமுக நாவலருக்குப் பின் சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்களின் பதிப்புப்பணி போற்றுதற்குரியது. சி.வை.தா. அவர்கள் தமிழ்நூல்கள் பலவற்றை முதன்முதலில் பதிப்பித்துத் தமிழுலகம் அறியச் செய்தார்.

சுவடியில் உள்ளவற்றை அச்சில் கொண்டு வருவதே பதிப்புப் பணியாய்த் திகழ்ந்த காலத்தில் சுவடிப்பதிப்பிற்கு ஆராய்ச்சி நோக்கில் அரிய பதிப்பு முன்னுரைகளை எழுதி, சுவடிப் பதிப்பை ஆய்வு நிலைக்கு உயர்த்தியவர் சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்கள். அவர்தம் பதிப்புகளின் சிறப்பியல்புகளில் முத்தாய்ப்பாய் விளங்குவது அவரது பதிப்புரைகள். அவர், அப்பதிப்புரைகளை மூலபாடத் திறனாய்வுடனும் வரலாற்று அணுகுமுறையுடனும் கால ஆராய்ச்சியுடனும் அணுகியிருப்பது குறிப்பிடத்தக்க செயல் ஆகும்.

அவரது பதிப்புரைகளின் ஊடாக அறியலாகும் அக்கால ஏடுகளின் அவலநிலை, ஏட்டுப்படிகள் மாறுபடுதலும் பாட பேதங்களும், படித்துணரும் போது நிகழ்ந்த குழப்பங்கள், ஏடு தேடிய போதும் பதிப்பிக்கும் போதும் அவருக்கு ஏற்பட்ட இன்னல்கள், பொருள் விளங்காப் பகுதிகள் முதலானவையுமே; தமிழ், சமஸ்கிருத மொழிகளின் நிலைப்பாடு, நூலின் காலம், வரலாறு குறித்த ஆராய்ச்சிச் செய்திகள், நூலாசிரியர் - உரையாசிரியர் பற்றிய செய்திகள் முதலான ஆய்வு நிலைப்பட்ட கருத்துகளையும் ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கம்.

*பதிப்புரை விவரம்*

ஆறுமுக நாவலரின் கீழ் இருந்தும், நாவலர் மறைவிற்குப் பின்பு தனிநபராய் நின்றும் பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்துத் தமிழ்மொழியை வளப்படுத்தினார். பழந்தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களான பதினொரு தமிழ்ச் சுவடிகளை அச்சில் பதிப்பித்தார். இப்பதிப்புகளில் தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியருரை தவிர மற்ற அனைத்து நூல்களும் முதன் முதலாய், சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களால் அச்சுவாகனம் ஏறிய பெருமையுடையவை. இப்பதிப்பு நூல்களில் ஆறு பதிப்புகளுக்கு அரிய பதிப்பு முன்னுரைகளை எழுதியுள்ளார்.

***நீதிநெறி விளக்கம் (1853)***

இப்பதிப்பு, அவர் கிறித்தவராக இருந்தபோது பதிப்பித்தமையால் அவரது கிறித்தவப் பெயரான சி.எல்.டபிள்யூ. கிங்ஸ்பெரி என்ற பெயரில் வெளிவந்தது. (பொ. பூலோக சிங்கம், *1970*, ப. *170*). இந்நூல் தற்போது கிடைக்கப் பெறவில்லை. மேலும் சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்கள், தாம் பதிப்பித்த நூல்களுக்கு எழுதிய பதிப்பு முன்னுரைகளின் தொகுப்பான 'தாமோதரம்' நூலில் நீதிநெறி விளக்க நூலின் பதிப்புரை காணப் படாமையால், சி.வை.தா. இந்நூலுக்குப் பதிப்புரை எழுதவில்லை என்பது பெறப்படுகிறது.

**தொல்காப்பியம் சொல்லதிகாரம் – சேனாவரையருரை (1868)**

ஆறுமுக நாவலர் பரிசோதித்து, சி.வை.தா. அவர்கள் பதிப்பித்த நூல். இந்நூலிற்கு, சி.வை.தா. பதிப்புரையோ, முன்னுரையோ எழுதவில்லை.

***வீரசோழியம் – பெருந்தேவனாருரை (1881)***

ஆறுமுக நாவலரின் மறைவுக்குப்பின் சி.வை.தா. பதிப்பித்த நூல். இந்நூலிற்கு முப்பது பக்கங்களுக்கு விரிவான பதிப்புரையை எழுதியுள்ளார். இத்துடன் 'வீரசோழியப் பதிப்புப் பற்றிய சிறப்புக் கவிகள்' என்ற தலைப்பின்கீழ், சதாவதானம் சுப்பிரமணியஐயர், அஷ்டாவதானம் சபாபதி முதலியார், வித்துவான் சபாபதிப் பிள்ளை, வேலாயுத முதலியார், சோடாசாவதானம் சுப்பராயச் செட்டியார், துவாத்திரிம் சதாவதானம் இராமசாமிச் செட்டியார், சுன்னாகம் அ. குமாரசுவாமி உபாத்தியாயர் ஆகியோரின் கவிகள் இடம்பெற்றுள்ளன.

**தணிகைப் புராணம் (1883)**

தணிகைப் புராணத்தின் மூலம் மட்டும் பதிப்பித்துள்ளார். இந்நூலிற்குப் பதிப்புரை எழுதவில்லை. ஆயினும் கச்சியப்ப முனிவரின் சரித்திரத்தை நான்கு பக்கங்களில் குறிப்பிட்டுள்ளார். இருப்பினும் அதனைப் பதிப்புரையாக ஏற்க முடியாது.

**இறையனாரகப் பொருள் - நக்கீரர் உரை (1883)**

தணிகைப் புராணம் பதிப்பித்த ஆண்டிலே இந்நூலைப் பதிப்பித்துள்ளார். இந்நூலுக்கும் பதிப்புரை எழுதவில்லை. ஒரே ஆண்டில் பதிப்பிக்கப்பட்ட இவ்விரு நூல்களுக்கும் பதிப்புரை எழுதவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**தொல்காப்பியம் பொருளதிகாரம் நச்சினார்க்கினியருரை (1885)**

இந்நூலை மூன்று பகுதிகளாகப் பகுத்துப் பதிப்பித்துள்ளார். பன்னிரண்டு பக்கங்களில் பதிப்புரை எழுதியுள்ளார். இப்பதிப்புரையின் ஊடாகப் பொருளதிகாரம் முழுமைக்கும் நச்சரே உரை எழுதினார் என அவர் மயங்கியமை தெரியவருகிறது. பின்னர் வந்த ஆராய்ச்சி நூல்களும் ஆராய்ச்சி உரைகளும் இச்செய்தியை மறுத்துள்ளன.

**கலித்தொகை - நச்சினார்க்கினியருரை (1887)**

கலித்தொகைப் பதிப்பின் மூலம் சங்க இலக்கிய நூல்களின் பதிப்பிற்கு முன்னோடியாகவும் வழிகாட்டியாகவும் திகழ்ந்தார். தாம்பதிப்பித்த நூல்களிலே இந்நூலிற்குத் தான் முப்பத்து நான்கு பக்கங்களில் மிக நீண்ட பதிப்புரையை எழுதியுள்ளார். இப்பதிப்புரையில் உரையாசிரியர் நச்சினார்க்கினியரைப் பிற உரையாசிரியர்களுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்துள்ளார். இவரது மற்ற பதிப்புகளை விட இந்நூற் பதிப்பு சிறந்த ஆய்வுப் பதிப்பாக மிளிர்கிறது.

**இலக்கண விளக்கம் (1898)**

இந்நூலிற்கு இருபது பக்கங்களில் பதிப்புரை எழுதியுள்ளார். இதில் ஐந்திலக்கணம் குறித்து விரிவாகப் பேசியுள்ளார்.

**சூளாமணி**

இலக்கண விளக்கம் பதிப்பித்த அதே ஆண்டில் சூளாமணியைப் பதிப்பித்தார். இதில் பதினேழு பக்கங்களில் பதிப்புரை

எழுதியுள்ளார். இந்நூலின் முகப்பில் 'இரண்டாவது காவியம்' எனக் குறித்தமைக்கான காரணத்தைப் பதிப்புரையில் விளக்கி யுள்ளார்.

**தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியருரை (1891)**

இந்நூலிற்கு நான்கு பக்கங்களில் பதிப்புரை எழுதியுள்ளார். இப்பதிப்புரையின் வாயிலாக 1848ஆம் ஆண்டு மழவை மகாலிங்கையர் இதன் எழுத்ததிகாரவுரையை அச்சிட்டு இருப்பினும், தொல்காப்பியம் நச்சினார்க்கினியருரை முழுமையும் பதிப்பிக்க விழைந்து மீண்டும் பதிப்பித்ததாகக் கூறுகிறார்.

**தொல்காப்பியம் சொல்லதிகாரம் – நச்சினார்க்கினியருரை (1892)**

சி.வை.தா.வின் பதிப்பில் வெளிவந்த இறுதி நூல் இதுவே. இந்நூலிற்கு அவர் பதிப்புரை எழுதவில்லை.

**பதிப்புரைகள் உணர்த்துவன**

சி.வை.தா.வின் பதிப்புரைகளை நோக்குங்கால் சுவடிகள் பற்றிய அடிப்படைச் செய்திகளான

சுவடிகளின் நிலை,
சுவடி எழுத்தின் தன்மை,
சுவடியைப் படிக்கின்றபோது நிகழும் தவறுகள்,
சுவடிகளிலே காணப்படுகின்ற வழுக்கள்,
பாட பேதங்கள்

முதலானவையும் சி.வை.தா. அவர்கள் ஏடுகளைத் தேடிய பொழுதும் பதிப்பித்த பொழுதும் ஏற்பட்ட இன்னல்கள், அவர் பதிப்பித்தமைக்கான காரணங்கள், பதிப்பில் அவர் கையாண்ட மாற்றங்கள், மாணவர்களுக்குச் சலுகை அளித்தல், பொருள் வேண்டலும் நன்றி கூறலுமான செய்திகளையும் நூல், நூலாசிரியர், உரையாசிரியர் குறித்த செய்திகள், காலம் நிர்ணயித்தல், வரலாறு கூறுதல் முதலானவையும் அறிய இயல்கிறது.

மேற்கூறிய கருத்துகளை மூன்று நிலைகளில் பகுத்து விளக்கம் காணலாம். அவை,

அ. சுவடிகளின் நிலைப்பாடு

ஆ. சி.வை.தா.வின் நிலைப்பாடு

இ. ஆராய்ச்சிச் செய்திகள்

## அ. சுவடிகளின் நிலைப்பாடு

### 1. சுவடிகளின் நிலை

சி.வை.தா. அவர்களின் காலத்திலிருந்த பல ஏட்டுச் சுவடிகள் சிதைந்திருந்தன. பல சுவடிகள் மறைந்துவிட்டிருந்தன. இப்பழஞ்சுவடிகள் அழிந்ததற்கான காரணத்தையும், அழிந்து போன சுவடிகளைப் பற்றியும் தம் பதிப்புரைகளில் எடுத்துக் காட்டியுள்ளார். கலித்தொகைப் பதிப்புரையில்,

> "என் சிறுபிராயத்தில் எனது தந்தையார் எனக்குக் கற்பித்த சில நூல்கள் இப்போது தமிழ் நாடெங்குந் தேடியும் அகப்படவில்லை. ஒட்டித் தப்பியிருக்கும் புத்தகங்களுங் கெட்டுச் சிதைந்து கிடக்கும் நிலைமையைத் தொட்டுப் பார்த்தாலன்றோ தெரியவரும்! ஏடு எடுக்கும்போது ஓரஞ் சொரிகிறது; கட்டு அவிழ்க்கும் போது இதழ் முரிகிறது. ஏட்டைப் புரட்டும் போது துண்டு துண்டாய்ப் பறக்கிறது."
> (தாமோ. ப. 45-46)

எனச் சுவடிகளின் அவலநிலையைக் கண்முன் நிறுத்துகிறார். இங்ஙனம் சுவடிகள் அழிவை நோக்கிச் செல்வதற்கான காரணங்களையும் கலித்தொகைப் பதிப்புரையிலே கூறிச் செல்கிறார். அது,

> "பழைய சுவடிகள் யாவுங் கலிமாய் ஒன்றொன்றாய் அழிந்து போகின்றன; புது ஏடுகள் சேர்த்து அவற்றை எழுதி வைப்பாரும் இலர்; துரைத்தனத்தாருக்கு அதன் மேல் இலட்சியமில்லை; சரஸ்வதியைத் தம்பால் வகிக்கப்பெற்ற வித்துவான்களை அவள் மாமி எட்டியும் பார்க்கின்றாளில்லை"
> (தாமோ. ப. 68)

எனக் காரணங்களை எடுத்துரைக்கிறார்.

### 2. சுவடி எழுத்தின் தன்மை

சுவடியிலுள்ள எழுத்துக்களைப் படித்துணர்வதே கடினமான செயல். இதில் பாணப் பூச்சிகள் சுவடிகளை அரிக்கும்

போது எழுத்து வடிவங்களை இரையாக்கிக் கொள்கின்றன. இதனால் எழுத்தின் வடிவம் மாறுபட்டு நிற்பதும் எழுத்துக்கள் மறைவதும் நிகழ்கின்றன. இக்காரணங்களால் படித்துப் பொருள் கொள்ள இயலா நிலை ஏற்படுகிறது. இச்செய்தியை, சி.வை.தா. அவர்கள் தம்பதிப்புரையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

> "பிரதி எத்துணைப் பழையதோ அத்துணை அதன் மாறுபாடுகள் குறைவு. ஆனால் பூர்வ பிரதிகள் பாண வாய்ப்பட்டு எழுத்தொன்றற்குப் பாணவரி மூன்றென்றால் யாதுதான் செய்யத்தக்கது" (தாமோ. ப. 28)

என்று வீரசோழியப் பதிப்புரையில் கூறியவர் மற்றொரு பதிப்புரையில்,

> "இனி எழுத்துக்களோ வென்றால் வாலுந் தலையு மின்றி நாலுபுறமும் பாணக் கலப்பை மறுத்து மறுத்து உழுது கிடக்கின்றது" (தாமோ. ப. 46)

என்று கூறியுள்ளார். தமக்குக் கிடைத்த ஒரு பிரதியையே இப்பிரச்சினையால் நீக்கி விட்டதை,

> "மேலும் பெரும்பாலும் எழுத்துக்கள் சிதைந்து ஒரு பாட்டின் ஒருறுப்பாவது முற்றும் வாசிக்க முடியாமல் கிடந்ததாற் படிப்பதற்கே வெறுப் புண்டாய் நீக்கி விட்டேன்" (தாமோ. ப. 62)

எனக் கலித்தொகைப் பதிப்புரையில் குறிப்பிட்டுள்ளார்.

### 3. வழுக்களும் பாடபேதங்களும்

காலந்தோறும் படியெடுக்கப்பட்டு வரும்போது பாடபேதங்கள் ஏற்படுவது இயல்பே. இவையன்றி ஏடு எழுதுவோரின் கவனக் குறைவாலும் கல்வியறிவின்மையாலும் பல பிழைகள் மலிந்திருந்தன. இவ்விதம் வழுக்கள் மலிந்திருந்த நிலையை வீரசோழியப் பதிப்புரையில் கம்பரின் பழமரபுக் கதையின் ஊடாக நயம்பட விளக்கியுள்ளார். இதனை

> "சுரலிகிதங்களால் ஏட்டுப் பிரதிகளிற் காலந்தோறும் புக்க அக்ஷரவழுவுஞ் சொற்சிதைவும் வாக்கியப் பிறழ்வும் இத்துணையவென்று சொல்லற்பாலதன்று. இதிகாச சிரோரத்தினமாகி இராமாயணத்தை எழுதி அரங்கேற்றிய கம்பர் சோழன்மேற் கொண்ட சில

வெறுப்பினால் அவனூரை விட்டு இருபது முப்பது வருஷஞ் சேரனிடம் போயிருந்து பின்பு சோழனைக் காண அபேட்சையுடையாராய்த் திரும்பி வரும் வழியில் ஒரு மடத்திலே சில வித்துவான்கள் சேர்ந்து இராமாயணப் பிரசங்கம் செய்து கொண்டிருந்தனர். அஃது தனது இராமாயணப் பிரசங்கமெனத் தெரியாதிருந்துங் கற்றாரைக் கற்றார் காமுறுதல் இயல்பாதலின் கம்பர் யாது பிரசங்கமாயினுமாகுக கல்விப் பிரசங்கங்கண்டுங் கம்பன் புறம் பொழுகலாமா வென்று, தன்னை இன்னானென்றன் னோர்க்குத் தெரிவியாது யாரோ வழிப் பிரயாணக் காரன் போல உள்ளே சிலநேரம் போயிருந்து ஒன்றையொன்று பார்த்தெழுத எழுதப் பிரதிகள் தோறும் புக்க வழுக்களுந் திரிபுகளும் அதிகப் பட்டிருந்தமையால் அஃது தனதிராமாயண மென்று மட்டிடாமற் றன்வாக்குஞ் செய்யுட்களும் இடைக் கிடையாரோ சொருகுகவிகள் சேர்த்திருப்ப தாகச் சொன்னாராம். ஒருவர் காலத்திலே இவ்வள வாயின் ஆயிரத்தைஞ்ஞூறு வருஷத்துத்திரிவு எப்படி யிருக்கலாமென்பதை அநுமானித்துக் கொள்க" (தாமோ. ப. 25)

என்று வழுக்கள் தோன்றுதற்குரிய சூழ்நிலையை எடுத்துக் கூறுகிறார். இவ்வாறு பெருகிய பிழைகளால் பாடமானது பேதப்பட்டு மிக விகாரமடைந்து கிடக்கின்றது. எனவே ஏட்டைப் படிக்கின்ற போது படிக்கின்ற பாடத்தின் தவறுகள் நிகழ்ந்து விடுகின்றன. இவர் தம் தொடக்ககாலப் பதிப்புகளில் அவ்வழுக்களைக் களைய முனைந்தாரில்லை. ஆனால் பின்னர்ப் பதிப்பித்த சூளாமணிப் பதிப்பிலிருந்து வழுக்களைக் களைந்து பாடபேதத்துடன் பதிப்பித்துள்ளார்.

"காலாந் தரத்தில் ஏடெழுதுவோராற் பெருகிப் பெருகி வந்த பிழைகளினாற் காவியங்கள் மிகவும் பேதப்பட்டு விகாரம் அடைந்திருக்கின்றமை முன்னமே சொன்னேன். இம்மாறுபாடுகளைக் குறித்து இந்நூற் பதிப்பில் அடியேனுக்கோர் துணிவு புதிதாகப் பிறந்தது. இதுகாறும் அச்சிட்ட பழைய நூல்களில், ஒரு பிரதியின் ஆதாரமாவது இல்லாது பாடபேதத்தைத் திருத்துதல் ஒழிந்த யான்,

> இப்பொழுது பிரதிகள் அனைத்தும் பிழை யென்றும், பிரதிகளில் இருக்கும் பாடம் ஆக்கி யோன் வாய்மொழியாய் இருக்க மாட்டா தென்றும், எந்தப் பிரதி வழிச் சென்றாலும் அச்சில் வருவது ஆசிரியரினின்றும் வேறுபட்ட பிழை பாடென்றும் நிச்சயிக்க ஏது உண்டான இடங்களில் இரண்டொரு எழுத்தையாவது மொழியையாவது சந்தர்ப்பத் திற்கும் பொருளுக்கும் இயையுமாறு திருத்தத் துணிந்தேன்" *(தாமோ. ப. 101)*

எனக் கூறியதுடன்,

> "அவ்வாறு செய்யாவிடின் நூலின் சிறப்பு அழிவது மன்றிச் சில பாடங்கள் ஒரு பயனுந் தராமலுஞ் சில முன்பின்னோடும்பிற நூல்களோடும் விரோதப் பட்டும் நிற்குமாதலிற்றிருத்தம் அத்தியாவசிய மாயிற்று. இதனை உலகம் அறியச் சொல்லாமல் விடுவதே தப்பென்று உணர்ந்து இங்ஙனந் தெரிவிக்க லாயினேன்" *(தாமோ. ப. 101)*

என்று மாற்றிப் பதிப்பித்தமைக்கான காரணத்தை நவில்கிறார்.

### ஆ. சி.வை.தா.வின் நிலைப்பாடு

#### 1. ஏடு தேடுதலும் பதிப்பித்தலும்

ஒரு சுவடியைப் பதிப்பிப்பதற்கு முன் அச்சுவடியின் பிற பிரதிகளைத் தேட வேண்டும். அவ்வாறு தேடிக் கண்டறிந்த சுவடிகளைப் படித்துப் பதிப்பிக்க வேண்டிய நிலையில் படியெடுக்க வேண்டும்; பின்னரே பதிப்பிக்க வேண்டும். இப்பணி களின் ஒவ்வொரு செயல்பாடும் கடினமான செயல். இதனை நன்குணர்ந்த சி.வை.தா. அவர்கள் தாம் பதிப்பிக்கும் போது அனுபவித்த துன்பங்களைத் தம் பதிப்புரையில் வடித்துள்ளார்.

> "ஒரு நூலைப் பரிசோதித்து அச்சிடுதற்கு முதலிற் கையெழுத்துப் பிரதிகள் சம்பாதிப்பதே மஹாபிர யாசை. அதிலும் ஒரு நூல் பழையதும் இலேசில் விளங்காததுமானால் எழுதுவாரும் ஓதுவாரு மில்லாமல் இருக்கிற இடமுந் தெரியாமல் போய் விடுகின்றது. கலித்தொகைப் பிரதிகள் தேட யான் பட்ட கட்டம் வாயினாற் கூறும் அளவைத்தன்று" *(தாமோ. ப. 61)*

இத்துணை துன்பத்திற்கிடையிலும் பலபழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்தார். அவ்வாறு பதிப்பித்த நூல்களும் விலை போகாமல் சி.வை.தா. அவர்களுக்கு நட்டம் ஏற்பட்டது. இந்நிலையில் அவருக்கு அன்பர்கள்சிலர் உதவி புரிந்தனர். இச்செய்திகளை எடுத்தியம்பி நன்றியையும் தம் பதிப்புரையில் குறித்துள்ளார்.

### 2. பதிப்பிற்கான காரணங்கள்

சி.வை.தா. அவர்கள், அழிந்து கொண்டிருக்கும் பழஞ் சுவடிகளைத் தேடியலைந்து அவற்றைப் பதிப்பித்தார். இவரது பதிப்புகள் அனைத்தும் யாவரும் பதிப்பிக்காத பழஞ்சுவடிகளே. தம் பதிப்பிற்கான காரணத்தை,

> "இதனைக் கண்டு சகிக்கலாற்றாது மனம் நொந்து அழிந்து போகுஞ் சுவடிகளை இயன்ற மட்டுந் தேடி அவற்றுட் டமிழிற்குப் பேரிலக்கணமாகிய தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையம், அதன் பொருளதிகாரம் நச்சினார்க்கினியம், வீர சோழியம், இறையனாரகப்பொருள், திருத்தணிகைப் புராணமென்று இன்னவற்றைப் பலதேசப் பிரதிகள் கொண்டு பரிசோதித்து அச்சிடுவித்தேன்" (தாமோ. ப. 46)

என்று எடுத்துரைக்கிறார். இவரது பதிப்பிலே தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியருரை பதிப்பு நூலின் பதிப்பு நோக்கம் வேறுபட்டதாயும் இவரது பதிப்புக் கொள்கைக்கு மாறு பட்டதாயும் அமைந்துள்ளது. ஏற்கெனவே பதிப்புக் கண்ட இந்நூலை மீண்டும் பதிப்பிப்பதற்கான காரணத்தைத் தெளிவுபட விளக்கியுள்ளார்.

> "ஒரு முறையாயினும் பிறர் பிரசுரித்த நூல்களை மீள அச்சிடுவிக்காத எனக்கு இவ்வெழுத்ததிகாரம் ஒரு விளக்கமாயிற்று. அன்றியும் ஒரு நூலின் முதலிலே யுள்ளதோர் சொற்ப பாகத்தை மாத்திரம் ஒருவர் பிரசுரஞ் செய்து கால கதியடைந்து விட்டாற், பின்னர் அந்நூல் முழுவதையும் அச்சிடுவோர் முதற் பாகத்தையுஞ் சேர்த்து அச்சிடுதல் தவறன்றாம். உலக வழக்கமும் அதுவே" (தாமோ. ப. 112)

### 3. பொருள் விளங்காப் பகுதிகள்

சி.வை.தா. அவர்கள் சுவடியைப் பதிப்பிக்கும் போது தமக்குப் பொருள் விளங்காத பகுதிகளைத் தக்க அறிஞர்களிடம்

கேட்டுத் தெளிந்தபின்புதான் பதிப்பித்தார். தமக்குப் புரியாத பகுதி களையும், பொருள் விளக்கிய அறிஞர்களையும் மறைக்காமலும் மறக்காமலும் நினைவுகூர்ந்து நன்றி கூறுகிறார். காட்டாக வீரசோழியம் பதிப்புரையில்,

> "வடநூற் பயிற்சி யில்லாத எனக்குப் பொருள் யாப்பலங்காரங்களில் வரும் அரிய சம்ஸ்கிருத விதிகளிற் றுணை செய்தோராய, அடியேனது பரமா சாரியர் வேதாரணியாதீனம் ஸ்ரீலஸ்ரீ கைலாயநாத சந்நிதிக்கும், சென்னபட்டினம் பச்சையப்ப முதலியார் பாடசாலை சம்ஸ்கிருத பண்டிதராகிய ஸ்ரீமத். மண்டைக்குளத்தூர் கிருஷ்ணசாஸ்திரியாருக் கும், யாழ்ப்பாணம் நீர்வேலி ம.ள.ள.ஸ்ரீ.சிவசங். சிவப்பிரகாச பண்டிதருக்கும் மிக்க வந்தனஞ் சொல்லுகின்றனன்." (தாமோ. ப. 30)

என நன்றி நவின்றதைக் கூறலாம்.

**4. பதிப்பிற் கையாண்ட மாற்றங்கள்**

சி.வை.தா. அவர்கள் நூலை ஏட்டுப் பிரதிகளின் போக்கிலே விடாமல் அறிவுத் துணைக்கொண்டு வேண்டிய இடங்களில் மாற்றம் செய்தும் செய்திகளை நிரல்பட வரிசைப் படுத்தியும் கோவைப்படுத்தியும் பதிப்பித்தார். இவர் இங்ஙனம் செய்த விகற்பங்களைத் தம் கலித்தொகைப் பதிப்புரையில் ஐந்து குறிப்புகளாகத் தந்து அதனை உணர்த்துதல் தம் கடமையெனக் கூறுகிறார்.

**மாற்றிய முறைகள்**

1. முதலில் பாட்டுக்களை அச்சிட்டு அதன்கீழ் இஃதின்ன கிளவியெனக் கூறும் கருத்துரையை அச்சிட்டார்.
2. பாட்டு முழுவதையும் ஒரே தொடராகச் சேர்த்து ஒவ்வொரு கலிப்பாவையும் முடித்தபின் மீண்டும் அவ்வப் பகுதியை முதலும் ஈறுங்காட்டி மீளவும் பகுத்துப் பதிப்பித்துள்ளார்.
3. விசேட உரைகளைப் பாடலுக்கும் உரைக்கும் பின்னரே வரும்படிச் சேர்த்துள்ளார்.
4. பாட்டுறுப்புக்கள் மூலம், உரை என்று பிரிந்து கிடந்தவற்றை இரண்டும் ஓரிடத்தாம்படி உரையிடத்தை மாற்றியிருக் கிறார்.

5. பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் பயில்வாரை மனத்தில் கொண்டு சில மாற்றங்களைச் செய்துள்ளார். அம்மாற்றங் கள் குற்றமாயின் அதனை மன்னிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

### 5. மாணவர்களுக்குச் சலுகை அளித்தல்

பதிப்பித்து வெளியிடுவதில் பல பொருளாதாரப் பிரச்சினை இருந்த போதிலும் மாணவர்கள் தமிழ் இலக்கணத்தைக் கற்றுணர்தல் வேண்டும் என்பதாலும், பலர் செல்வரல்லர் என்பதாலும் புத்தக விலையில் சலுகை அளித்தார். அதிலும் அவர் மேற்கொண்ட முறை,

> "வித்தியாசாலைகளிற் றமிழ் கற்கும் மாணர்கள் 25 பெயருக்குக் குறையாமல் ஒருங்கு சேர்ந்து தமது பாடசாலைத் தலைவர் மூலமாக நேரே என்னிட மிருந்து அழைப்பிப்பின் இப்புத்தகம் அவர்களுக்கு அரைவிலையாகக் கொடுக்கப்படும்." (தாமோ.ப 90)

என்று அறிக்கை விடுத்ததின் மூலம் புலனாகிறது.

### பொருள் வேண்டலும் நன்றி கூறலும்

சி.வை.தா. அவர்கள் பிரதிகளைத் தேடி அலைவதற்கும், பிரயாணம் செய்வதற்கும்,பரிசோதனைச் செலவிற்கும் பொருளாதாரச் சிக்கலில் உழன்றார். இந்நிலையில் பணப் பிரச்சினையால் பதிப்பு முயற்சி மிகத் தாமதப்பட்டது என்றும், பலருடைய பொருள் உதவியால் பல நூல்கள் வெளிவந்தன என்றும் ஒவ்வொரு பதிப்புரையிலும் எடுத்துக்கூறி, அந்த அன்பர்களை நினைவுகூறி நன்றி நவில்கிறார்.

> "அதனை யான் எடுத்துப் பிரசுரஞ் செய்யத் துணிந்தும் இதுவரையும் அச்சிட்ட நூல்களால் எனக்கு நேரிட்டிருக்கும் நஷ்டம் இடங்கொடுத்தில தாதலாற் பிறர் திரவிய சகாயம் அவசியம் வேண்டிய தாய் அது விஷயத்தை ஆங்காங்குள்ள சில மஹான்களுக்குத் தெரிவித்தேன்." (தாமோ. ப. 60)

எனக் கலித்தொகைப் பதிப்புரையில் தெளிவாகக் காட்டியுள்ளார்.

ஒவ்வொரு பதிப்புரையிலும் அந்நூல் பதிப்பிற்கு வரத் துணை நின்றவர்களை மறவாமல் குறிப்பிட்டு நன்றி கூறியுள்ளார். சூளாமணிப் பதிப்புரையில், தொல்.எழுத்து.பதிப்புரையில் 'பணம்

அனுப்பினோர் பெயர்வழி' எனப் பட்டியலிட்டே காட்டி யுள்ளார். இவையன்றி' 'நன்றி கூறல்' என்ற தலைப்பின்கீழ் விரிவாகப் பேசியுள்ளார்.

> "இவர்கள் செய்த இவ்வுபகாரத்தை யான் ஒரு போதும் மறவேன். இவர்கள் முன் மாதிரியைப் பின் பற்றி இன்னும் அநேகர் தத்தமக்கு ஏற்ற வித்துவான் களைக் கொண்டு பற்பல பழைய தமிழ் நூல்களை வெளிப்படுத்தி நிலைநிறுத்தக் கலைமகள் கடாட்சிப்பாளாக" (தாமோ. ப.109)

என எடுத்துரைப்பதன் மூலம் இவருக்குப் பழந்தமிழ் நூல்களை அழியாமல் காக்க வேண்டுமென்ற தணியாத ஆவல் புலப்படு கிறது.

### இ. ஆராய்ச்சிச் செய்திகள்

#### 1. நூலும் நூலாசிரியரும்

சி.வை.தா. தாம் பதிப்பிக்க எடுத்துக்கொண்ட நூல், நூலாசிரியர் குறித்த செய்திகளை நன்கு ஆராய்ந்து இன்னதெனத் தெளிவுபட நிறுவுகிறார். இப்பாங்கு அவரது ஆய்வுத்திறத்திற்குச் சான்றாய் அமைகிறது. நூல் பற்றிக் குறிப்பிடும்போது அந்நூலின் சிறப்பியல்புகளைக் கூறத் தவறவில்லை.

கலித்தொகை நூலாசிரியர் நல்லந்துவனார் எனக் கூறும்போது,

> இந்நூல், முதலிற் குறித்த எட்டுத்தொகையுள் ஒன்று. அது மதுரைக் கடைச்சங்கத்துப் புலவர் நாற்பத் தொன்பதின்மருள் ஒருவராகிய நல்லந்துவனார் இயற்றியது. சிலர் இவர் இஃது இயற்றினோரல்லர், சிறந்த கவிச் செய்யுட்களைப் பல நூல்களிலு மிருந்து திரட்டித் தொகுத்தவரென்பர். அவ்வாறு தொகுக்கப்பட்ட அகம் புறம் நற்றிணை ரென்றின்னோ ரன்ன நூலுளெல்லாம் அவ்வச் செய்யுளின்கீழ் அதன் ஆக்கியோன் பெயர் குறிக்கப் பட்டதுபோல இதனுட் குறிக்கப்படாமையானும் நல்லந்துவன் தொகுத்தாரென்று பல்லாசிரியர்கள் கூறிய இடம் அனைத்தும் அவர் "முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச் சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே" எனவும் உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர் புரியுண்ட புணர்ச்சி யென்றற் றொடக்கத்து நெய்தற் கலியின் கீழ்ச் சொல்லொடுங் குறிப்பொடு முடிவு கொளியற்கை -

> புல்லிய கிளவி யெச்சமாகும்'' என்பதனாற் சொல்லெச்சமுங் குறிப்பெச்சமுமாகத் தம் பேரறிவு தோன்ற ஆசிரியர் நல்லந்துவனார் செய்யுட் செய்தாரெனக் கூறியமையானும் இஃது அவ்வாசிரிய ராற்றாமே இயற்றப்பட்டமை தெள்ளிதின் விளங்கக் கிடந்ததெனக் கூறி மறுக்க." (தாமோ. ப. 52-53)

என ஆய்ந்து விளக்கமுறக் கூறியுள்ளார்.

அவ்வாறே இலக்கண விளக்கப் பதிப்புரையிலும் இலக்கண விளக்க நூலின் இயல்பைச் சுட்டும் போது நன்னூல், சின்னூல், காரிகை போன்ற நூல்கள் தமிழ் இலக்கணம் முற்றும் கூறாது ஒன்றிரண்டு மட்டும் கூறுவதாய் அமைகின்றன; வீரசோழியம் போன்ற நூல்கள் ஐந்திலக்கணம் கூறினாலும் மிகச் சுருங்கியதாய் உள்ளமையால் கற்போர்க்கு வேண்டியதுமான, மாணவர்களுக்குப் போதுமானதாக விளங்குவது இலக்கண விளக்கமொன்றே என்கிறார். இதன் மகிமையாலே இதற்குக் 'குட்டித் தொல்காப்பியம்' என்னும் பெயர் வழங்கப்பட்டது என்றும் கூறுகிறார்.

**2. காலம் நிர்ணயித்தல்**

சி.வை.தா. நூல்களைப் பதிப்பிக்கும்போது அந்நூல், நூலாசிரியர் காலத்தைக் குறிப்பிடுகிறார். முன்னோர் சொன்ன காலத்தை அப்படியே பதிவு செய்யாமல், நூல்களின் ஊடாகவும் பிற நூல்களின் துணைக்கொண்டும் காலவரையறை செய்தமை அவரது வரலாற்று அணுகுமுறையைப் புலப்படுத்துகிறது.

தொல்காப்பியம், கலித்தொகை, சூளாமணி, இலக்கண விளக்கம் முதலான நூல்களின் காலத்தை வரையறுத்துக் கூறுவதுடன் அதனைச் சான்றுகளுடன் வலியுறுத்தியுள்ளார். இலக்கண விளக்க நூல் ஆசிரியர் காலத்தை நிறுவும்போது அவர் கையாண்ட முறையைச் சான்றாக்கலாம்.

> இந்நூல் மூலமும் உரையுமாகச் செய்தவர், மன்னார் குடித் தாலுகாவிலுள்ள ஆதித்தேச்சரத்திற்கு அணித்தான திருக்களரில் இப்பொழுது அதிவயோதிபராயிருக்கின்ற ஸ்ரீமத் சூரியமூர்த்தி தேசிகரைத் தமக்கு ஆறாவது சந்ததியாக உடைய வரும், இற்றைக்கு 250 வருஷத்தின்முன் சத்த விடங்கத் திவ்விய க்ஷேத்திரங்களில் முதன்மையுடைத் தாகிய திருவாரூரின்கண் அவ்வூர் அபிஷேகத்தர் மரபிற் சிறப்புற்றோங்கிய ஸ்ரீவன்மீகிநாத தேசிகர் குமாரரு மாகிய வைத்தியநாத தேசிகர். இராமநாத

> புரத்தில் 1685ம் ஆண்டு முதல் 1723ஆம் ஆண்டு வரையும் அரசு புரிந்த இரகுநாத சேதுபதியின் சமஸ்தான வித்துவானான படிக்காசுப் புலவர் இந்நூலாசிரியரிடங் கல்வி கற்றவராதலானும், சற்றேறக்குறைய 180 வருஷத்தின் முன் நன்னூல் விருத்தியுரை இயற்றிய சங்கரநமச்சிவாயப் புலவரது இயற்றமிழாசிரியராகச் சாமிநாததேசிகர் இவர் காலத்தில் சிறு வயதினராயிருந்தமையானும், இவர் காலம் இற்றைக்கு 250 வருஷத்தின்முன்னெென்பது போதரும்." (தாமோப . 72)

### 3. வரலாறு உணர்த்துதல்

வீரசோழிய, கலித்தொகைப் பதிப்புரையில் தமிழ், சம்ஸ்கிருத மொழி தோன்றியதாகச் சொல்லப்படும் பழமரபுக் கதைகளை எடுத்துரைத்துள்ளார். அதன் வழி எம்மொழி முதன் மொழி எனவும் சுட்டிக்காட்டி இருமொழியின் இயல்புகளையும் பகர்ந்துள்ளார். அவையன்றி வீரசோழியப் பதிப்புரையில் தமிழ் இலக்கியக் காலத்தை எண்வகையாகப் பகுத்துக் காட்டியுள்ளார்.

> "தமிழ் பாஷையின் காலவருத்தமானம் அபோத காலம், அக்ஷரகாலம் இலக்கண காலம், சமுதாய காலம், அநாதாரகாலம், சமண காலம், இதிகாச காலம், ஆதீனகாலமென எண் வகைப்படும்" (தாமோ. ப. 9)

எனக்கூறி, ஒவ்வொரு காலத்தையம் மிக விரிவாக ஆராய்ந்துள்ளார். இவ்வாய்வு பின்வந்தோரால் செய்யப்பட்ட தமிழிலக்கிய வரலாற்று ஆராய்ச்சிக்கு வழிவகை செய்தது எனலாம். இவ்வாய்வுக் கருத்து முரண்பாடு கொண்டதால் பதிப்பு நூல்களில் இம்முயற்சி முதல்முயற்சியாகவும் புது முயற்சியாகவும் அமைந்து பின்னாளில் வளர்ச்சியடையக் காரணமாய் அமைந்தது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

### நிறைவாக

தமிழ்ச்சுவடிப் பதிப்பு வரலாற்றில் பதிப்புரைகளின் இன்றியமையாமையை உணர்த்திய பெருமை சி.வை.தாமோதரம் பிள்ளைக்கே உரியது. இவரது பதிப்புரைகள் அரிய ஆராய்ச்சிச் செய்திகளையும் பதிப்பு நெறிமுறைகளையும் பெற்று அரிய பதிப்புகளாய் மிளிரவும், இன்று வரையில் பலரும் ஏற்றுக் கொள்ளும் தன்மையுடையதாகவும் விளங்கக் காரணமாய் அமைந்தன. பதிப்புரைகள் தமிழ்ச்சுவடிப் பதிப்பு வரலாற்றின் வளர்நிலையாய் விளங்கின.

◆

# தமிழ்ப் பதிப்புலகின் முன்னோடி

எழுத்தாளனின் எழுதுகோல் பிரசவிக்கும் பொழுது அறியாமை என்னும் இருள் அகற்றப்பட வேண்டும் என்பது படைப்புலக நியதி. அவ்வரிகளில் சிந்தனையுகத்தில் எழுந்து ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டு வீட்டோரங்களிலும், பெட்டிகளிலும் முடங்கிக் கிடந்த நூல்கள் ஏராளம். அவ்வகையான ஓலை நூல்களை எடுத்துச் சிதறிக் கிடந்த எழுத்துக்களைக் கருத்துக்கள் சிதையாமல் ஒருங்கிணைத்து அதனை அச்சில் ஏற்றுவது தான் பதிப்புலகம். இது அறிவியல் யுகத்தின் அற்புதம். காகிதக் கண்டுபிடிப்பும் அச்சுத் தொழிலும் தான் மனித இனத்தின் சிந்தனை வளத்தைக் கிளர்ச்சியூட்டின எனலாம். ஏனென்றால் அதுதான் ஓர் இடத்தில் முடங்கிக் கிடந்த கருத்துக் கருவூலத்தைப் பூமிப்பந்தின் எம்முனைக்கும் சென்று சேர்க்கும் வல்லமையைப் பெற்றிருந்தது. அவ்வகையில் தமிழ் இலக்கியப் பதிப்புலகில் முன்னோடியாகத் திகழும் சி.வை. தாமோதரம் பிள்ளையின் பணிகளை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைந்து உள்ளது.

## பதிப்புலகில்

'ஆறுமுக நாவலருக்கே முன்னோடி (பதிப்பில்)' என்பர் டி.ஏ. இராசரத்தினம் பிள்ளை. இத்தகு பெருமையைப் பெற்றவர் சி.வை.தா. இவரின் முதல் பதிப்பு 'நீதிநெறி' விளக்கம் ஆகும். இது 1854ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டுள்ளது. இக்காலக் கட்டத்தில் கோப்பாய் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார் சி.வை.தா. இந்நூலின் மூல ஆசிரியர் குமரகுருபரர். இப்பதிப்பின்போது பதிப்பாசிரியருக்கு வயது 22 ஆகும். இக்காலக்கட்டத்தில் தான் தமிழறிஞர்களின் பார்வை இவரின் மேல் பதிந்தது எனலாம்.

தொல்காப்பியமும் சி.வை.தா.வும்

தமிழின் சட்ட நூல் என்றழைக்கப்படும் தொல்காப்பியம் மூன்று அதிகாரங்களைக் கொண்டது. எழுத்து, சொல், பொருள் எனும் இவ்வதிகாரங்களில் எழுத்ததிகாரம் தவிர மற்ற இரு அதிகாரங்களும் புதுமைகளோடுதாம் பதிப்பிக்கப்பட்டுள்ளன. 'தொல்காப்பிய எழுத்ததிகாரத்தை நச்சினார்க்கினியர் உரையுடன், மழவை மகாலிங்கையர் முன்பு பதிப்பித்த பிரதியை ஆதாரமாகக் கொண்டும், தென்பகுதியிலும் பிற பகுதியிலும் கிடைத்த ஏட்டுச் சுவடிகளின் துணைக்கொண்டும் ஒப்பிட்டுச் செயல்படுத்தி 1891இல் அச்சிட்டுப் பதிப்பித்தார் தாமோதரனார்.

சொல்லதிகாரத்தைச் சேனாவரையர் உரையுடன் பதிப்பித்துள்ளார். 1868 ஆம் ஆண்டு புஷ்பரத செட்டியாரது அச்சகத்தில் பதிப்பித்துத் தம் பெயரிலேயே வெளியிட்டுள்ளார். இதற்காக ஆறுமுக நாவலரின் உதவியை நாடியிருக்கிறார்.

> "இது நாவலரவர்களால் பரிசோதிக்கப்பட்டதாயினும், பிள்ளையவர்கள் தமக்குச் சாவகாசம் நேரும் போதெல்லாங் கூடவிருந்து தம்மாலியன்ற உதவியாவும் புரிந்தே இவ்வேலையை நிறைவேற்றினர் என்பதற்குப் போதிய சான்றுளது"[1]

என்பர் இராசரத்தினம் பிள்ளை.

இறுதி அதிகாரமான பொருளதிகாரத்தையும் பதிப்பித்தார். பேராசிரியர் உரையுடன் நச்சினார்க்கினியர் உரையையும் சேர்த்து, சென்னையில் ஸ்காட்டிஷ் அச்சகத்தில் பதிப்பித்தார். மேலும்,

> "1882இல் தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - நச்சினார்க்கினியர் உரையைப் பல ஏட்டுச் சுவடிகளின் பாடவேறுபாடுகளை ஒப்பு நோக்கி, பரிசோதித்து, சென்னைப் பட்டின விக்டோரியா ஜூபிலி யந்திர சாலையில் அச்சிட்டுப் பதிப்பித்தார். 1885இல் தொல்காப்பியம் - பொருளதிகாரம் - நச்சினார்க்கினியர் உரையுடன் முன் குறிப்பிட்ட வகையில் பரிசோதித்து, சென்னை ஸ்காட்டிஷ் பிரஸ்ஸில் அச்சடித்துப் பதிப்பித்துள்ளார். ஒரு நூலின் எல்லா அதிகாரங்களையும் ஒரே உரையாசிரியரின் பெயரில் தொடர்ந்து வெளியிடுவது பெரிதும் நலன் பயக்கும் என்று கருதி, தொல்காப்பிய

எழுத்ததிகாரத்தை நச்சினார்க்கினியர் உரையுடன், மழவை மகாலிங்கையர் முன்பு பதிப்பித்த பிரதியை ஆதாரமாகக் கொண்டும், தென்பகுதியிலும் பிற பகுதியிலும் கிடைத்த ஏட்டுச் சுவடிகளின் துணைக் கொண்டும் ஒப்பிட்டுச் செயல்படுத்தி 1891ஆம் ஆண்டு அச்சிட்டுப் பதிப்பித்தார் தாமோதரனார்"[2]

என்பர் மா.சு. சம்பந்தன். ஆகவே முழுமையான தொல்காப்பியப் பதிப்பையும், அவரால் பதிப்பிக்க முடிந்தது எனலாம்.

**கலித்தொகை**

கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகை தான் சங்க இலக்கியப் பதிப்புகளில் முதல் பதிப்பாகும். அத்தகு பெருமையைப் பெற்றவர் சி.வை.தா. இவர் 1887ஆம் ஆண்டு இப்பதிப்பை வெளி யிட்டார். இந்நூல் பதிப்பிற்கு உ.வே.சா.வும் உதவி புரிந்துள்ளார்.

"சீவகசிந்தாமணியைப் பதிப்பித்து வெளியிடுவதில் சி.வை.தா. அவர்களுக்கும் உ.வே.சா. அவர்களுக்கும் மனவேறுபாடு இருப்பினும் கலித்தொகைப் பதிப்புப் பணியில் திருத்தங்களை மேற்கொண்டமையும் புருப் திருத்தியமையும், சிற்சில நேரங்களில் தாமும் செய்ததாக என் சரித்திரத்தில் சுட்டுகின்றார்."[3]

ஏட்டுப் பிரதியில் சில மாற்றங்களைக் கொண்டு பதிப்பித் துள்ளார் சி.வை.தா. அதனைத் தெளிவுபடுத்தும் பேரா. சு. தமிழ் வேலு,

"ஒவ்வொரு பாடலுக்கு முன்னும் குறிக்கப்பட்டிருந்த துறைக்குறிப்பும் கூற்றும் அச்சில் பாடலுக்குப் பின்னர் மாற்றியுள்ளார். உரைப்பகுதிக்கு ஏற்பப் பாடல்கள் பகுக்கப்பெற்று இடையிடையே உரை யுடன் இணைந்து பாடல் பகுதிகள் இடம்பெறும். இந்நிலையினை மாற்றிப் பாடல் முழுமையும் தொகுத்து உரைப்பகுதிக்கு முன் கொடுத்து விட்டுப் பிறகு உரையின் போக்குக்கு ஏற்பப் பாடற்பகுதியின் முதற்சொல்லையும் இறுதிச் சொல்லையும் கொடுத்து உரைப் பகுதியைக்" கொடுத்துப் பதிப்பித் துள்ளார். அதே போன்று விசேட உரைப்பகுதி யையும் உரைப்பகுதிக்குப் பின் தொகுத்துத் தந்துள்ளார்.

பாடலைக் கலிப்பாவின் உறுப்புகளான தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்ற அடிப் படையில் பாடலைப் பகுத்து அமைத்துள்ளார். இவ்வுறுப்புகள் உரைகளில் மாறுபட்டு அமைந்திருந் தமையால் அவற்றைப் பல்வேறு பதிப்புகளை ஒப்பு நோக்கிச் சரியான நிலையில் அமைத்துள்ளதாகக் குறிக்கின்றார்"[4]

என்று கலித்தொகையின் பதிப்பு உத்திகளை விளக்குகிறார். முதல் பதிப்பு என்பதைக் கவனத்தில் கொண்டு பன்னிரண்டு ஏட்டுச் சுவடிகளை ஒப்புநோக்கிப் பதிப்பித்து உள்ளார். அந்நூல்களை வரிசைப்படுத்தும் பேரா. அ. தமிழ்வேலு,

"புதுவை நயனப்ப முதலியாரின் மூலபாடப்பிரதி, ஆறுமுக நாவலர் பிரதி, திருவாவடுதுறை மடத்துப் பிரதி, தென் திசைப்பிரதி இரண்டு, கனகசபைப் பிள்ளை பிரதி, திருமணம் கேசவராய முதலியார் பிரதி, மயிலை இராமலிங்கம் பிள்ளை பிரதி, சென்னை மிராசிய மண்டபத்துப் பிரதி இரண்டு, தஞ்சை சரசுவதி மகால் பிரதி, புதுச்சேரி சொக்க லிங்கம் பிள்ளை பிரதி, திண்டிவனத்துப் பிரதி"[5]

என்பனவற்றையெல்லாம் பார்த்துள்ளார் என்றும் அஃதாவது பதிப்பாசிரியர் தன்னுடைய செல்வாக்கினை நூல் பதிப்பில் செலுத்தாமல் சுவடியில் இருக்கின்றமையை அப்படியே செய்துள்ளார்' என்கிறார். இதனை

"முன்னோர் மொழி பொருள் யன்றி யவர் மொழியும் பொன்னே போற் போற்றுதல், அவரினின்று வேறாக வழிநூல், சார்பு நூல் செய்தோர்க்குங் கடனாகவே அவர் நூலையே அச்சொரூபமாக எடுத்துப் பதிப்பிப்போர் ஓர் அட்சரமாவது மாற்றுதல் பெருந்தவறென்பது யாவர்க்கும் உடன்பாடே"[6]

எனும் கருத்துக்கேற்ப இவரது பதிப்புகள் அமைந்திருப்பதற்கு கலித்தொகைப் பதிப்பே சான்றாகும்.

**சூளாமணி**

தலையில் சூடும் அணிகலன் சூளாமணி. ஆசிரியர் தோலா மொழித்தேவர். ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்று. சி.வை.தா.

பதிப்பித்த ஆண்டு 1889 ஆகும். இந்நூலினை வித்தியானுபாலன யந்திர சாலையில் அச்சிட்டிருக்கிறார். 'இதனைச் சைன வித்துவான்களின் துணையுடன் திருத்தியும்', இந்நூலுள் அராதியோர் பெயர், ஊர் சம்பந்தம் அறிதல் பயன்படும்படி அவற்றிற்கு ஓர் அகராதியைச் சேர்த்துச் சீர் பிரிக்காமலே தாமோதரனார் பதிப்பித்துள்ளார்.

**வீரசோழியம்**

வீரசோழியத்தின் ஆசிரியர் புத்தமித்திரர். தொல்காப்பியத்தைப் பேரளவு தழுவியும், வடமொழி இலக்கணத்தை ஓரளவு தழுவியும் உள்ளது. புத்தமித்திரரின் மாணவராகிய பெருந்தேவனார் இதற்கு உரை செய்தார். தமிழகத்தில் செல்வாக்குப் பெறாத இந்நூல் சிங்கள மொழியின் இலக்கணத்திற்கு உதவியது என்பர். இந்நூலை, சி.வை.தா. 1881ஆம் ஆண்டு பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

**இலக்கண விளக்கம்**

வைத்தியநாத தேசிகரால் எழுதப்பட்ட ஐந்திலக்கண நூல். மூலமும் உரையும் சேர்த்தே எழுதியிருக்கிறார். இந்நூல் குட்டித் தொல்காப்பியம் என்றும் அழைக்கப்பட்டு வந்தது. இதனைப் பெருத்த எதிர்ப்புகளுக்கிடையே 1889இல் அச்சிட்டுப் பதிப்புரையுடன் வெளியிட்டார் தாமோதரனார். இப்பதிப்புரையில் இவரது தருக்க அறிவு பளிச்சிடுகிறது. மேலும் இதனைத் தெளிவு படுத்தும் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை,

> "சி.வை. தாமோதரம்பிள்ளை மதிப்பெல்லாம் மற்றொருவர் புரியாத புத்தம் புதிய பதிப்புகளே என்றும், 1881இல் வீரசோழியமும் 1883இல் தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்குத் திறவுகோலான இறையனார் களவியல் உரையும், அவ்வாண்டில்தானே சிவஞான சுவாமிகளின் மாணவரான கச்சியப்ப முனிவர் இயற்றிய தணிகைப் புராணமும், 1887இல் கற்றறிந்தாரேத்துங் கலியும் உரையும் 1889இல் குட்டித் தொல்காப்பிய மாகிய இலக்கண விளக்கமும் சூளாமணியும் பிள்ளையவர்கள் அச்சிட்ட புதிய பதிப்புகளே"[7]

என்பர்.

## பதிப்போடு படைப்பும்

பதிப்பிக்கப் பல்வேறு திறன்களையும் பெற்றிருத்தல் வேண்டும். இவரது பதிப்புப் பணியின் பொழுது பல நூல்களை எழுதியும் வெளியிட்டார். அவை 'சைவ மகத்துவம், சூளாமணி வசனம், கட்டளைக் கலித்துறை, நட்சத்திர மாலை' என்னும் நூல்களும் 'கற்பின் மாட்சி' அல்லது 'காந்த மலர்' எனும் நாவலும் ஆகும். இதன் மூலம் செய்யுள் திறத்திலும் உரைநடை வளத்திலும் புகழ்பெற்றார். இச்செய்யுளைப் பாராட்டும் மாயூரம் வேதநாயகம் பிள்ளை,

> "நீடிய சீர்பெறு தாமோதரமன்ன நீள் புவியில் வாடிய
> கூழ்கள் மழைமுகங் கண்டென மாண்புறநீ பாடிய
> செய்யுளைப் பார்த்தின்ப வாரி படிந்தனன்யான்
> கோடிப் புலவர் கூடினும் நின்புகழ் கூறலரிதே"

என்று பாராட்டியிருக்கிறார். மேலும் தமிழ்ப் பதிப்புலகின் தந்தை என்றழைக்கப்படும் உ.வே.சாமிநாதையர் சி.வை.தா.வை குறிப்பிடும் இடத்து,

> "இக்காலத்தில் தமிழில் பல துறைகளில் ஆராய்ச்சி செய்வோருக்குப் பெருந்துணையாக இருப்பன இவர் வெளியிட்ட புத்தகங்களாகும். இவருடன் நெருங்கிப் பழகியிருக்கிறேன்"[8]

என்று சிறப்புறப் பாராட்டுகிறார். மேலும் உ.வே.சா.விற்கும் பதிப்புப் பணியில் உதவியிருக்கிறார். அதனைச் சீவக சிந்தாமணியின் முன்னுரையில் காணலாம். அந்நன்றியானது:

> "இந்த நூலையும் (சீவகசிந்தாமணி) உரையையும் பின்னும் இரண்டொருமுறை பரிசோதித்தற்கு விருப்பமுடையனேனும், இவற்றை விரைவிற் பதிப்பித்துப் பிரகடனஞ் செய்யும்படி யாழ்ப்பாணம் ம.ள.ள.ஸ்ரீ.சி.வை. தாமோதரம் பிள்ளையவர்கள் பல முறை தூண்டினமையால் விரைந்து அச்சு விடுவிக்கத் துணிந்தேன்." தாமோதரனார் இரு சிந்தாமணிப் பிரதிகளை ஐயருக்குக் கொடுத்து உதவியுள்ளார்"[9]

என்று இம்மேற்கோளைத் தெளிவுறுத்துகிறார் மா.சு. சம்பந்தன். மேலும் இவரது பதிப்பை, 'பதிப்பாசிரியர் தாமோதரம்' எனும் பெயரில் சிதம்பரநாதன் தொகுத்துள்ளார். அந்நூலில்

> "ஏட்டிலே பாட்டு முழுவதும்" எடுத்தவுடன் படித்துப் பார்ப்பதற்குத் தக்க முறையில் பதிப்பித்தார். ஏட்டில் விசேட உரைகள் சில பாட்டினுரைக்கு முன்னும் சிலவற்றின் பின்னுமாக நியதியற்றுக் கிடந்தவற்றை ஒரு வரிசைப்படுத்திப் பின்னரையே பதிப்பித்தார்"[10]

என்றும்

> "பிள்ளையவர்களுடைய முக்கிய நோக்கம் அடியோடு அழிந்து போகுந்தறுவாயில் உள்ள பழைய நூல்களைப் பாதுகாப்பது ஆகலின் அதற்கு மேல் நூலைத் திருத்த முற்பட்டார் அல்லர். இயன்ற அளவு பண்டைய வடிவைப் பெறச் செய்வதும் இயலாதவிடத்து இருந்த வண்ணம் உலகிற்கு ஒப்புவிப்பதுமே இவர் கடனாகக் கொண்டார். இவர் வெளிப்படுத்திய பிற்பாடு, கலித்தொகையைத் திரு. ஈ.வை. அனந்தராமையரும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரும் வெளியிட்டுள்ளனர்.

என்று பாராட்டுகிறார். "தாமோதரம் எந்தப் பணி ஆற்றினாலும், தமது சொந்தப் பணியாகக் கருதித் தேடுவதை, சுவடிகளைப் பிரதி எடுப்பதை, விளக்கமுடன் பதிப்பித்து வெளியிடுவதைத் தொடர்ந்து, 'உயிர்த் தொண்டாகக் கருதி, இரவு பகல் பாராது, தாகத்துடன் பாடுபட்டு உழைத்துத் தமிழ்மொழியைச் செழுமைப் படுத்தினார் என்பர் குன்றக்குடிப் பெரிய பெருமாள்.

## முடிவு

இருட்டு விழுதுவிட்டிருக்கும் பூமிக்கோளத்தைச் சூரிய உதயம் வெளிச்சமாக்குவதைப் போல் மூலையில் முடங்கிக் கிடந்த தமிழின் அரிய நூல்களை எவரும் அறிந்திராத காலத்தில் 'சல்லடையிட்டு', தேடிக்கண்டறிந்து பதிப்பித்த சி.வை. தாமோதரம் பிள்ளை 'தமிழ்ப் பதிப்புலகின் முன்னோடி' என்பதை இக்கட்டுரை உணர்த்தி நிற்கின்றது.

### அடிக்குறிப்புகள்

1. இராசரத்தினம் பிள்ளை, சி.வை. தாமோதரம் பிள்ளை சரித்திரம், ப. 37.
2. சம்பந்தன், மா.சு., அச்சும் பதிப்பும், ப. 228.

3. தமிழ்வேலு, சு., **பதிப்புகள் ஆய்வடங்கல்** (த.ப.க.), ப.2.
4. மேலது, ப. 3.
5. மேலது, ப. 3.
6. சம்பந்தன், மா.சு. **அச்சும் பதிப்பும்**, ப. 228.
7. பெரிய பெருமாள், **தமிழ் வளர்த்த நல்லறிஞர்கள்**, ப. 81.
8. சம்பந்தன், மா.சு., **அச்சும் பதிப்பும்**, ப. 229.
9. சம்பந்தன், மா.சு., **அச்சும் பதிப்பும்**, ப. 229.
10. சிதம்பரநாதன் அ., **பதிப்பாசிரியர் தாமோதரம்**, ப. 127.
11. மேலது, ப. 128.

◆

# கலித்தொகைப் பதிப்பு

தமிழிலக்கிய ஆய்வு பல்வேறு துறைகளில் இன்று சிறந்து விளங்குவதற்கு அடிப்படையாக இருப்பவை பழந்தமிழ்ப் பதிப்பு நூல்களே. காலப் பழமை வாய்ந்த இப்பதிப்புகள் ஒரு நூற்றாண்டிற்கு முன்னரே தோற்றம் கொண்டன. ஆறுமுக நாவலர், சி.வை. தாமோதரம் பிள்ளை, உ.வே. சாமிநாதையர் முதலிய அறிஞர்களின் முயற்சியால் இப்பதிப்பு நூல்கள் வெளி வந்தன. இவை இன்றைய சங்கத் தமிழ் பற்றிய பல்வேறு ஆய்வுகளுக்கும் மூலமாக அமைகின்றன.

பழந்தமிழ் இலக்கிய வெளியீட்டுக்குக் கால் கண்டவர் நாவலர்; சுவர் எழுப்பியவர் சி.வை.தா; கூரை வேய்ந்து, நிலையம் கோலியவர் உ.வே.சா.

சி.வை.தா. பதிப்புத் துறையின் முன்னோடி எனப்பட்டார். உ.வே.சா.வுக்கு முன்பாகவே பதிப்பித்த பெருமை இவருக்குண்டு. சங்க இலக்கியப் பதிப்பில் முதலில் வெளிவந்தது ஆறுமுக நாவலர் பதிப்பித்த பத்துப்பாட்டில் ஒன்றாகிய திருமுருகாற்றுப் படை (1851). எட்டுத்தொகையில் முதலில் வெளிவந்தது சி.வை.தா. பதிப்பித்த கலித்தொகை. யாழ்ப்பாணத்தைச் சார்ந்த இவர் புதுக்கோட்டையில் நீதிபதியாகப் பணியாற்றிய போது கலித் தொகையைப் பதிப்பிக்க முயன்றிருக்கிறார். இதற்கு முன் நீதிநெறி விளக்கம் (1853), தொல்காப்பியம் (1868), வீரசோழியம் (1881), திருத்தணிகைப் புராணம் (1883) ஆகியவற்றைப் பதிப்பித்த அனுபவத்துடன் கலித்தொகையை 1887இல் பதிப்பித்திருக்கிறார். இக்கலித்தொகைப் பதிப்பைப் பற்றி ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## கலித்தொகையின் மாண்பு

கற்றறிந்தார் ஏத்தும் கலி எனச் சிறப்பித்துப் பேசப்படு கின்ற கலித்தொகை, தொகை நூல்களுள் ஆறாவது இடத்தில் கூறப்படுகின்றது. இது தமிழிலக்கணப் பெருநூல்களில் கூறப் படும் அகப்பொருட் பகுதிக்கு இலக்கியமாகத் திகழ்கின்றது. தமிழர் கண்ட ஐந்திணைப் பாகுபாட்டின் தனிச்சிறப்பும் மற்றன்னார் தம் மாண்புறு ஒழுக்கமும் உயர்வும் இதில் மிளிர்கின்றன.

இந்நூல் கலிப்பா வகையில் சிறந்த ஒத்தாழிசை யாலியன்ற 150 பாக்களைக் கொண்டது. தேன் செறிந்த மொழிகளாலும், தெள்ளிய உருவகங்களாலும் ஆகிக் கற்பவர் மனத்தைக் கவரக் கூடியது. நல்வாழ்விற்கு வேண்டிய நன்னெறிகள் பலவற்றை இடையிடையே தொகுத்தும் விரித்தும் கூறுவது இதன் சிறப்பு.

பாலைக்கலி-35, குறிஞ்சிக் கலி-29, மருதக்கலி-35, முல்லைக் கலி-17, நெய்தல் கலி-33 என்றவாறு மொத்தம் 150 பாடல்களைக் கொண்டுள்ள இந்நூல் நல்லந்துவனாரால் இயற்றப்பட்டது.

## கலித்தொகைப் பதிப்பு வரலாறு

தொகை நூல்களுள் முதன்முதலில் கலித்தொகையை 1887இல் சி.வை.தா. பதிப்பில் கொண்டு வந்தார். பாலைக்கலி, குறிஞ்சிக் கலி ஒரு பகுதியாகவும், மருதக் கலி, முல்லைக் கலி இன்னொரு பகுதியாகவும் 1925இல் வெளிவந்தன. நெய்தற்கலி மட்டும் 1931இல் மூன்றாவது பகுதியாக வெளிவந்தது.

கல்லூரி ஆசிரியராகப் பணிபுரிந்ததாலும், பல இலக்கியங்கள் இவர் பதிப்பிக்கும் முன்பே வெளிவந்திருந்த தாலும், உ.வே.சா.வின் உறுதுணை கிடைத்ததாலும் ஆய்வுக் கண்ணோட்டம் மிகுதியாகப் பெற்றிருந்த இவர் 2000 குறிப்புகள் எடுத்துக் கொடுக்க எண்ணி, 4000 குறிப்புகளாகப் பெருகிவிட்டது என்கிறார்.

ஒவ்வொரு பகுதியிலும் கலித்தொகை தொடர்பாகவும், பதிப்பு தொடர்பாகவும் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். பாடல், பாடலுக்குப் பொருள், குறிப்புரை, இலக்கிய இலக்கண மேற் கோள், அதிகமான பாடவேறுபாடுகள், செய்யுள் முதற் குறிப்பகராதி, ஆசிரியர்கள் வரலாறு, உரையாசிரியர் வரலாறு, அரும்பதம் அதன் பொருள், பதிப்பில் கையாண்டுள்ள பிற

நூல்களின் பெயர் போன்றவற்றுடன் செம்மையான, புதிய ஆய்வுப் பதிப்பைச் சுவடியில் இருந்து கொண்டு வந்துள்ளார். இவரது பதிப்பினை முழுமையாக உரையுடன் 1984இல் தமிழ்ப் பல்கலைக்கழகம் மறுபதிப்பாக வெளியிட்டுள்ளது.

காழி. சிவ கண்ணுசாமி மற்றும் தமிழ்மலை இளவழக னாரும் 1938இல் நச்சர் உரையுடன் கொண்டு வந்துள்ளனர். காசி விசுவநாதன் செட்டியார் வெளியீடாக வந்த இந்நூல் **கலித் தொகை மாட்சி** என்ற கட்டுரையும், நச்சர் உரைக்கு விளக்கமும் பெற்று, இலக்கிய ஆர்வலர் விரும்பும் பதிப்பாக அமைகிறது. நூல்-உரையாசிரியர்கள் வரலாறு, மேற்கோள், பாடல் முதற் குறிப்பு போன்றவற்றுடன் வந்த இப்பதிப்பு ஏட்டுச் சுவடியில் இருந்து பதிக்கப்படவில்லையென்றாலும் செம்மை, எளிமை, காரணமாக ஏழு மறுபதிப்புகளைக் கண்டுள்ளது.

அனைவரும் எளிதில் கற்று இன்புறுவதற்கு உதவியாக அமைந்த புலியூர் கேசிகன் பதிப்பு (1958) ஐந்து மறுபதிப்புகளைக் கண்டுள்ளது. பாடல் ஐந்தைந்து பகுதிகளாகப் பகுக்கப்படுகிறது. பாடலின் திரண்ட கருத்து விளக்கப்படுகிறது. அரிய சொற் களுக்குச் சொற்பொருள் தரப்படுகிறது.

புலியூர் கேசிகன் பதிப்புப் போன்றே சக்திதாசன் சுப்பிரமணி (நாடக வடிவம்), மா. இராசமாணிக்கம் ஆகியோரின் பதிப்புகள் 1958இல் தெளிவுரை, விளக்கவுரையுடன் வெளி வந்துள்ளன.

பெருமழைப் புலவர் பொ.வே. சோம சுந்தரனார் (1958, 69, 70, 73) கலித்தொகையை உரைவிளக்கத்துடன் கொண்டு வந்துள்ளார் (கழகப் பதிப்பு). தனித்தனிக் கலிகள் பாடமாக வைக்கப்பட்டிருந்ததால், மாணவர் தேவை கருதி, ஆய்வுப் பதிப்பாக அமையாமல், செம்மையான விளக்கப் பதிப்பாக அமைந்துள்ளது. இதில் துறைக் குறிப்பு சிறந்த விளக்கம் பெறுகிறது. பழைய உரையின் கீழ் தெளிவான சொற்பொருளும் இவற்றை விளக்கும் விரிந்த விளக்க உரையும் இலக்கணக் குறிப்புகளும் தரப்படுகின்றன.

இ.வை. அனந்தராமையர் கலித்தொகை மூலத்தை மட்டும் 1930இல் வெளிக்கொண்டு வந்துள்ளார். மர்ரே எஸ். ராஜம் சங்க இலக்கியங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனி நூல்களாகப் பதிப்பித்துள்ளார். அவ்வகையில் கலித்தொகையும் (1957, 1981)

வந்துள்ளது. இதில் பொருள் நோக்கில் சீர்பிரித்து அச்சிடப் பட்டுள்ளது. மூலத்தை மட்டும் படிக்க விரும்புவர்களுக்கும், ஒப்பு நோக்குபவர்களுக்கும் இம்மூலப்பதிப்புகள் பயன்தருவன.

பாலைக் கலியை மட்டும் கை.ஆ. கனகசபாபதி (1937), நா. இராமய்யா பிள்ளை (1949) ஆகியோரும், குறிஞ்சிக் கலியை எஸ். மார்க்க பந்து சர்மா (1951)வும் வெளியிட்டுள்ளனர்.

வையாபுரிப்பிள்ளையின் சங்க இலக்கியமும், லேனா தமிழ்வாணனின் கலித்தொகைத் தெளிவுரையும், சி. கணேச ஐயரின் (1943) அரிய உரைவிளக்கமும் (ஆய்வு நெறியின் அடிப்படையில்) வெளியாகியுள்ளன.

**நூன் முகம்**

சி.வை.தா. வெளியிட்ட கலித்தொகையின் நூன்முகம் பின்வருமாறு அமைகிறது.

**நல்லந்துவனார் கலித்தொகை**

மதுரை பாரத்துவாசி நச்சினார்க்கினியர் உரையோடும், (யாழ்ப்பாணம் சி.வை. தாமோதரம் பிள்ளையவர்கள் பல தேசப் பிரதி ரூபங்களைக் கொண்டு பரிசோதித்து,

ஸ்ரீ தொண்டமான் புதுக்கோட்டை மகாராசாவின் மந்திரியும், பிரதி காவலருமாகிய கௌரவ அ. சேசைய சாஸ்திரிகள், சி.எஸ்.ஐ. காருண்யோபகார திரவியத்தைக் கொண்டு பதிப்பிக்கப் பட்டது.

சர்வசித்து வருஷம் (1887) ஆடி மாசம் சென்னை ஸ்காட்டிஷ் அச்சகத்தில் பதிக்கப்பட்டது. விலை ரூ. ஐந்து (3.50) என்ற செய்திகளை நூலின் முகப்புப் பக்கம் (அட்டை) தெரிவிக் கின்றது.

அட்டையை அடுத்த இரண்டாம் பக்கத்தில் அட்டையில் உள்ளது போன்ற பதிப்பு விவரங்கள் சில தரப்பட்டுள்ளன. பின் பக்கத்தில் உரையாசிரியர் சிறப்பு எனும் தலைப்பில் நச்சினார்க் கினியரைப் போற்றும் நான்கடிச் செய்யுள் ஒன்று காணப்படு கின்றது.

மூன்று, நான்கு ஆகிய பக்கங்களில் 87 அடிகளில் நேரிசை ஆசிரியப்பாவாலான சிறப்புப் பாயிரம் உள்ளது. அடுத்து 34 பக்க அளவில் நீண்ட பதிப்புரை அமைகிறது. இதனை அடுத்துப்

பாடல் முதற் குறிப்பகராதி மூன்று பக்கங்களில் அமைந்துள்ளது. அது பாடல் முதற் குறிப்பு, என்ன கலி, எந்தச் செய்யுள், எந்தப் பக்கம் ஆகிய விவரங்களைக் கொண்டுள்ளது.

காட்டு :

| முதற்குறிப்பு | கலி | செய்யுள் | பக்கம் |
|---|---|---|---|
| அகலாங் கணிரு | நெய்தல் | 26 | 450 |

மூன்றாம் பக்கத்தின் முதல் பக்கத்தில் முதற்குறிப்பு முடிய அதன் பின்பக்கம் பிழைதிருத்தம் அமைகிறது.

கலித்தொகை முதல் பக்கத்தில் கடவுள் வாழ்த்தும், ஏழாம் பக்கத்தில் முதலாவது பாலைக்கலியும், 107ஆம் பக்கத்தில் இரண்டாவது குறிஞ்சிக் கலியும், 198ஆம் பக்கத்தில் மூன்றாவது மருதக் கலியும், 311ஆம் பக்கத்தில் நான்காவது முல்லைக் கலியும், 378ஆம் பக்கத்தில் ஐந்தாவது நெய்தற் கலியும், நூலிறுதியில் 487ஆம் பக்கத்தில் விளம்பரமும் பதிப்பிக்கப் பெற்றுள்ளன.

1887இல் மலர்ந்த கலித்தொகைப் பதிப்பு ஆய்வுப் பதிப்பின் தொடக்கம் எனலாம். யாழ்ப்பாணத்துத் தமிழறிஞர் சி.வை. தாமோதரம்பிள்ளை இப்பதிப்புப் பணியின் முன்னோடியாக விளங்குகிறார் (ந. விசாலாட்சி, பழந்தமிழ்ப் பதிப்புகள், ப.5).

இவற்றின் பின்னரே கலித்தொகை மூலமும் உரையும் இடம்பெறுகின்றன. 150 பாடல்களின் எண்கள் தொடர் வரிசையில் வலப்புறமும், ஒவ்வொரு கலிக்கும் எண்கள் தனித்து இடப் புறமும் தரப்படுகின்றன.

'நெய்தற்கலி முற்றும்
கலித்தொகையுரை முற்றும்'

என இறுதிப்பகுதி முடிவடைகின்றது.

முதல் நான்கு பக்கங்கள் உரோமன் எழுத்திலும், ஏனைய பக்கங்கள் தமிழ் எழுத்திலும் தரப்பட்டுள்ளன.

## பதிப்புரை

இந்நூலின் பதிப்புரையானது 34 பக்கங்களைக் கொண்டுள்ளது. இப்பதிப்புரை நூற்பொருளோடு தொடர்புடைய பல பொதுச் செய்திகளையும் விரிவாக ஆய்கிறது. இவர் விரிவான

பதிப்புரைகள் எழுதுவதில் முன்னோடியாக இருந்திருக்கிறார். பதிப்பு முயற்சி பற்றிப் பேசும் பின் வந்தோர் இதிலுள்ள சான்றுகளைத் தொடர்ந்து மேற்கோளாகக் காட்டுவதை ஒரு மரபாகவே பின்பற்றியிருக்கின்றனர்.

தமிழ் மொழியின் தனித்தன்மை, இலக்கிய வளமை, கலித் தொகை முதலிய சங்க நூல்களின் மாண்பு, பதினெண் கீழ்க் கணக்கு நூல்கள் பற்றிய விளக்கம், இலக்கண விளக்கத்தின் சிறப்பு, பதிப்பு நோக்கம், நூல், நூலாசிரியர், உரையாசிரியர் குறித்த செய்திகள், காலத்தை முடிவு செய்தல், வரலாறு கூறுதல், ஏடு தேடுதல், சுவடி கொடுத்து உதவியவர்கள், இவருக்கு நூல் வெளியீட்டால் ஏற்பட்ட நட்டம், பொருளுதவி செய்தவர்கள், பதிப்பிப்பதற்கு உதவியவர்கள், ஏட்டுப் பிரதிகளின் அவல நிலை, அவற்றில் உள்ள ஏட்டுப் படிகள் மாறுபடுதல், பாடபேதங்கள் பொருள் விளங்காப் பிரதிகள், சிக்கல்கள், தேவை கருதிப் பிரதியில் செய்த மாற்றங்கள், ஏடு தேடியபோதும் பதிப்பிக்கும் போதும் ஏற்பட்ட இன்னல்கள், இவருக்கு வந்த கண்டனங்கள் போன்ற பல செய்திகளைப் பதிப்புரையில் தெரியப்படுத்துகிறார்; இதில் கேலி, கிண்டல், மனவருத்தம், நகைச்சுவை போன்ற மன உணர்வுகளும், உவமை போன்ற அணிநயங்களும், கதை கூறும் போக்கு போன்ற உத்திகளும் வெளிப்படுகின்றன.

இப்பதிப்புரையானது பல ஆராய்ச்சி உண்மைகளையும் நூலின் சிறப்புகளையும் வெளிப்படுத்துகின்றது. இந்நூலைக் கற்க வேண்டுமென்ற விருப்பத்தை ஏற்படுத்துகின்றது. இத்தகைய சிறப்பு வாய்ந்த இவரது பதிப்புரை வெளிப்படுத்தும் ஆராய்ச்சித் திறனை, நுட்பத்தை, சிந்தனைத் திறனைப் பின்வரும் பகுதி காட்டு கின்றது.

### தமிழ்

தமிழின் தொன்மை, தமிழ் என்ற சொல்லின் சிறப்பு ஆகியவை பற்றித் தான் வீரசோழியப் பதிப்புரையில் கூறி யுள்ளதைக் கலித்தொகைப் பதிப்புரையில் சுட்டிக் காட்டி, அவை பற்றி இதிலும் ஏறக்குறைய முதல் பத்துப் பக்கங்களில் பின் வருவன போன்று பேசுகிறார்.

தமிழும் வடமொழியும் நாவலந் தீவின் பழைய மொழிகள். இரண்டும் தெய்வத் தன்மை உடையவை. வடமொழி பனி மலைக்கு அப்பால் இருந்து வந்ததென்றும் தமிழ் கங்கை

வரை பரவியிருந்ததென்றும் ஆரியர் வடபால் நிலங்களைப் பற்றிக் கொள்ளத் தமிழர் தென்பால் வந்தனர். இதனால் தமிழே நாவலந் தீவின் பழமையான மொழி. தமிழில் வடமொழிச் சொற்கள் கலந்திருப்பது கொண்டு அது இந்திய மொழியெனல் கூடாது.

தமிழில் தமிழ் எனும் சொல் வருவதற்கு முன் வட மொழியில் திராவிடம் எனும் சொல் இருந்தது என்பது பொருந்தாது. பொருள் இல்லாது பெயர் எப்படி இருக்க முடியும். உலகில் எக்காலத்தும் பெயரா, பொருளா முந்தியது. தமிழ் வழங்கிய இடத்தில் அதற்கொரு பெயர் இல்லை என்பது நகைப்பிற்கிடமாகிறது.

தமிழ், சம்ஸ்கிருதமொழி தோன்றியதாகச் சொல்லப்படும் பழமரபுக் கதைகளை எடுத்துரைத்துள்ளார். அதன்வழி எம் மொழி முதன்மொழி எனவும் சுட்டிக்காட்டி இருமொழியின் இயல்புகளையும் பகர்ந்துள்ளார்.

ஆரிய சம்பந்தமின்றித் தமிழ்க் கிரந்தங்கள் கிடையாது என்றார். இது பிறவிக் குருடன் சூரிய சந்திரருண்மையை மறுத்த தொக்கும். இதன் பொய்மையை மதுரைச் சங்கத்து நூல்களுள் ஒன்றையாவது பார்த்து உணர்வாராக. இக் கலித்தொகையே அதற்குச் சான்று பகரும். (கலி.பதி.9)

தமிழெழுத்துக்களே கிரந்தாக்ஷரங்களின் திரிபு என்றார். இதனால் போந்தென்? கிரந்தாக்ஷரம் முந்திய தென்றாகும். தருமன் துரியோதனனுக்கு மூத்தவனென்றால் பாண்டு திரிதராட்டிரன் தமையனாவானா ?

ஆதிகாலத்தில் மனுமான்கள் தேவபாடை பேசினர் என்பதால் வடமொழியே முந்தியதாகுக. அதிதி முந்திய வளாதலால் தைத்தியருக்குத் தாயாயினாளா? ஒன்றைச் சித்தாந்தம் செய்யும் போது, அதன் பூர்வோத்தர பட்சங்கள் திருட்டாந் தங்களை நிச்சயித்தன்றோ துணிதல் வேண்டும்.

வடமொழியில் இருந்து வருவதற்கு முன் தமிழில் முகத்திற்கு என்ன பெயர் எனக் கேட்கின்றனர். சில சொற்கள் இருமொழிக்கும் பொதுவானவை. ஆங்கிலத்தில் பாதர் மதர் ஒப்ப தமிழில் பிதா மாதா என்று இருப்பதால் ஒன்றிலிருந்து ஒன்று வரவில்லை. அதுபோல் முகமும் இருமொழிக்கும் பொதுவான

சொல். வடமொழி ஒன்றையும் பயிலாத சங்கத்தார் நூல்களில் முகம் பல இடங்களில் வருகின்றது.

தமிழில் வடமொழிச் சொற்கள் கலந்திருப்பது கொண்டு அது முந்தைய மொழியெனல் கூடாது. தமிழ் என்பது தென் மொழிக்குத் தென் சொல்லாகிய பெயரே எனவும் உறுதிப் படுத்துகிறார். தமிழ் எனும் தென்மொழிச் சொல்லே வட மொழியில் திராவிடம் என மரீஇயது என்று கூறுவாரையும் மறுத்து, இரு கூற்றாரும் திராவிடம் எனும் சொல் வந்த வரலாறும் அதன் பொருளும் வழக்கியலும் அறியாராயினார் எனத் தள்ளுகிறார்.

பஞ்ச திராவிடம் என்பதால் தமிழ், தெலுங்கு, கன்னடம், மராட்டிரம், கூர்ச்சரம் எனும் ஐந்து மொழிகளையும் திராவிடம் குறிக்கும். எனவே இவ்வைந்து மொழிகளும் வழங்கும் நிலத்தின் பெயரென்று தான் பொருள். அன்றியும் ஈராயிரம் ஆண்டுச் சொல்லையா 1600 ஆண்டுமொழிக்கு இட்டபெயரென்பது? இவற்றால் தமிழ் திராவிடம் ஆவதூஉம், திராவிடம் தமிழாய தூஉம் இரண்டும் தவறே. என முடிவு கட்டுகிறார்.

கீழ்வாய்க் கணக்கு, விரவியல் செய்யுள், மணிப்பிரவாளம் என்பவற்றுக்கு முன்னோர் வேற்றுமை விடுத்த இலக்கணமே தமிழ் தனிமொழி என்பதற்குச் சான்றாகும் என்கிறார். இக்காலத்தில் ஆங்கில - பிரெஞ்சு மொழி கலந்த தமிழ்ச் செய்யுளுக்கு உள்ள குறை, அக்காலத்தில் வடமொழிக் கலப்புக்கு இருந்ததெனின் அது தமிழுக்குத் தாய்மொழி எனப்படுவது எவ்வாறு?

தமிழ், திராவிடம் ஒன்று என்பாரைப் பார்த்து நகைத்து, பாட்டன் திருமணத்தின் பேரன் சந்தனத் தாம்பூலம் பரிமாறினான் என்பதற்கும் இதற்கும் யாது பேதம் என்கிறார்.

தமிழின் தொன்மையை மறுப்பவரைப் பார்த்துக் காக்கை யேறப் பனம்பழம் விழுந்தது என்னும் முறையின் உண்மை அறியாமலும் ஆரியமொழிக்கும் அதன் அயல் நாட்டு மொழி களுக்கும் உள்ள சம்பந்த சார்புகளின் காரணத்தை ஆராயாமலும் இவ்வாறு கழறும் இவர் கற்பனைக்கு யாது செய்யலாம்? இவர் வாய்க்கு விலங்கிட யாரால் முடியும் என்று வினாக்கள் பல அடுக்கி விளக்குகிறார்.

தமிழ் தனிமொழி, இந்தியாவில் எம்மொழிக்கும் பிந்தியது அன்று. வடமொழியின் வழிவந்தது அன்று என்கிறார்.

இங்ஙனம் தமிழ்-சமஸ்கிருத மொழியின் நிலைப்பாடு குறித்துப் பேசுமிவர் தமிழ்மொழியின் தொன்மைக்கும் தனித் தன்மைக்கும் பல சான்றுகளைக் காட்டி அது சிறந்த உயர்தனிச் செம்மொழி என நிறுவுகிறார்.

**சி.வை.தா.வும் பொதுச் செய்திகளும்**

இவர் நூலோடு தொடர்புடைய பின்வரும் தமிழ், இலக்கண விளக்கம், பதினெண் கீழ்க்கணக்கு ஆகிய புறநிலை ஆய்வுகளையும் செய்துள்ளார்.

**இலக்கண விளக்கம்**

இலக்கண விளக்கத்தினைப் பதிப்பித்த நோக்கைக் கூறுகிறார். இக்காலத் தமிழ் இலக்கணம் கற்போர் பெரும்பாலும் நன்னூலொன்றையே கற்றுப் பொருள் யாப்பணிகளின் பயிற்சி குன்றிப் போகிறது. இந்நூலில் ஐந்திலக்கணமும் சேர்ந்துள்ளது. கற்றறிந்த அறிஞர்க்கு மட்டுமே புரியக் கூடிய தொல்காப்பியம் போல் இல்லாமல், இந்நூல் சாதாரண மாணவர்களுக்கும் பயன்படக் கூடியது. இது கற்போர்க்கு எளிதின் அகப்படாது ஏட்டுப்பிரதிகளில் அருமையாக மறைந்து கிடக்கிறது. இக்காரணங்களால் இதனை அச்சிட்டால் தமிழ் நாடனைத் திற்கும் பேருபகாரமாமென்று எண்ணினேன். இந்நூல் இன்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முற்பட்ட வைத்தியநாத நாவலர் அருளிச் செய்தது. இந்நூலின் சிறப்பு இதனைக் குட்டித் தொல்காப்பியம் எனச் சான்றோர் கூறுவதில் இருந்து தெரிகிறது. "ஐம்பது ஆண்டு களுக்கு முன் சரவணப் பெருமாளையர் நன்னூல் காண்டிகை உரையை அச்சிட்டுயாவர்க்கும் மிக எளிதில் அகப்படச் செய்யும் வரைக்கும் கற்போர் யாவரும் ஓதி வந்ததும் அதுவே. (கலி.பதி. 31,32)

இவ்வாறு இலக்கண விளக்கம் பதிப்பித்த நோக்கைக் கூறுமிவர், ஒரு நூல் அச்சில் வராமை, அதன் பயிற்சி இன்மைக் கும், அச்சில் வருதல் பயிற்சி உண்மைக்கும் காரணமாதலை எதுகை, மோனை, உவமைக் கதை நயத்தோடு பின்வருமாறு குறிக்கிறார்.

"சூறாவளி மாறாய் மோதி என் சூத்திர விருத்தி வான் ஆர்த்து இடித்தென்? கன்ன துரோண சமித்திரதர் என்ன துரோகம் இயைத்திடினும் தேரொன்று கிடையாத குறையன்றோ

களந்தவிந்தான் சிறுவன்! அச்சுவாகனம் கிடையாத குறையன்றோ இலக்கண விளக்கம் மடங்கியது." (கலிபதி. 32)

இச்செய்தியைப் பற்றி இலக்கண விளக்கப் பதிப்புரையிலும் சுட்டுகிறார். நன்னூல் பரவிய அளவு இலக்கண விளக்கம் பரவாமையை எண்ணி எழுதுவது இது. இலக்கண விளக்கச் சூறாவளி, தொல்கப்பியச் சூத்திரவிருத்தி என்பன இலக்கண விளக்கம் குறித்துச் சிவஞான முனிவரால் எழுதப்பட்ட கண்டன நூல்கள். இலக்கண விளக்கத்தில் உள்ளதாகப் பல குற்றங் குறைகளை இலக்கண விளக்கச் சூறாவளி கூறுகிறது. இது அநியாயக் கண்டனங்கள் என்பது இவர் முடிபு. நன்னூல் பரவிய அளவு இலக்கண விளக்கம் பரவியிருப்பின் இக்கண்டனங்கள் எழுந்திருக்கா என்கிறார்.

சிறுவன் என்பான் அபிமன்யு. அவனுக்குத் தேர் இருந்திருப்பின் சூழ்ச்சியை வென்றிருப்பான். அதுபோல் இலக்கண விளக்கம் அச்சூர்தி ஏறியிருப்பின் எதிர்ப்பை வென்றிருக்கும் என மேலே சுட்டியதில் உணர்த்துகிறார். இருப்பினும் அவர் சிவஞான முனிவர் சிறப்பையும் புலமையையும் குறைத்து மதிப்பிடவில்லை. "யோகிஸ்வரரது பேரறிவு இமாசலம் ஒப்ப. எளியேன் சிற்றறிவு அதன்முன் ஒரு பூதூரி போல்வது என்றார். அவர் தப்பைத் தப்பு என்று தாபிக்கவும், ஒப்பைத் தப்பு என்று வாதிக்கவும் வல்லவர் என்பதை இராமாயண நாந்திச் செய்யுளாகிய நாடிய பொருள் கூடும் என்பதன் குற்றங்களைக் கூறி அவை குற்றங்கள் ஆகாமையை நிலை நாட்டிய இராமாயண அங்கோத்தர விருத்தியைக் காட்டுகிறார் (இல.விள.பதிப்).

**பதினெண் கீழ்க்கணக்கு**

பதினெண் கீழ்க்கணக்கில் அடங்கிய நூல்கள் இன்னின்ன என்பது குறித்து 1885 முதல் பெரு விவாதம் நடைபெற்றது. முதன் முதலாக இதனை ஆராயத் தொடங்கிய சி.வை.தா. கலித்தொகைப் பதிப்புரையில் இது பற்றிப் பலவாறு விளக்குகின்றார்.

*1. திருக்குறள், 2. நாலடியார், 3. நான்மணிக் கடிகை, 4. இனியவை நாற்பது, 5. இன்னா நற்பது, 6. கார் நாற்பது, 7. களவழி நாற்பது, 8. திணைமாலை 50, 9. திணைமாலை 150, 10. ஐந்திணை 50, 11. ஐந்திணை 70, 12. திரிகடுகம், 13. ஆசாரக் கோவை, 14. பழமொழி 400, 15. சிறுபஞ்சமூலம், 16. முதுமொழிக்*

காஞ்சி, 17. ஏலாதி, 18. கைந்நிலை என்பவை பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்.

'நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்' எனும் செய்யுளில் வரும் 'இன்னிலை சொல் காஞ்சி' என்பதில் வரும் இன்னிலையை எடுத்துக் கொண்டு கைந்நிலையை நீக்கிப் பதினெட்டு என்றும் சிலர் கூறினர்.

'இந்நிலைய காஞ்சியுடை ஏலாதி யென்பவே' என்றும் பாடம் இருப்பதாகக் கூறி இந்நிலையை இவர் சேர்க்காது விடுக்கிறார். மேலும் ஐந்திணை பற்றிக் கூறும் போது அது திணைகளைப் பற்றிக் கூறும் ஐந்து நூல்கள்; திணைமாலை 50, திணைமாலை 150, ஐந்திணை 50, ஐந்திணை 70 என்ற இந்நான்கும் அவ்ஐந்திணையைச் சேர்ந்தவை. திணை குறித்த நூல் இன்னும் ஒன்று இருக்க வேண்டும் என்பார் (16-18).

ந.மு. சொர்ணம் கண்டுபிடித்த இன்னிலை என்ற ஏட்டுச் சுவடி ஒன்றை 1915இல் வ.உ.சி. அச்சிட்டார். எனவே 18இல் அடங் குவது இன்னிலையா கைந்நிலையா என்ற சிக்கல் அறிஞரிடையே தோன்றி வளர்ந்து பின் இன்னிலை போலியானது, கைந்நிலையே சரியானது என்ற முடிவுக்கு வந்தனர்.

இச்சிக்கல் தோன்றுவதற்கு முன்னரே 1849இல் வேம் பத்தூர் முத்து வேங்கடசுப்ப பாரதியார் கைந்நிலையோடு 18 எனச் சுட்டியிருப்பது ஈண்டு எண்ணத்தக்கது.

கீழ்க்கணக்கு நூல்களுக்குப் பலவாறு ஆய்ந்து விளக்கம் தந்துள்ள இவருக்குக் கலித்தொகையைப் பதிப்பித்த பின் திணை பற்றிய நான்கு நூல்களும் கிடைத்தன. அதனால் கலித்தொகைப் பதிப்புரையில் ஐந்திணை பற்றி நான் கூறியது தவறு என நேர்மையுடன் ஒப்புக் கொள்கின்றார்.

### சிறப்புச் செய்திகள்

நோக்கம், சுவடிகளின் அழிவு, சுவடி பெற்ற வரலாறு, பொருளுதவி செய்தோர், நன்றி பாராட்டல், உ.வே.சா.வின் நட்பு ஆகியவை பற்றிய பின்வரும் சிறப்புறு செய்திகளைக் காட்டுவதாய் சி.வை.தா.வின் பதிப்புரை அமைந்துள்ளது.

### நோக்கம்

நமது தமிழ் நூல்களுக்கு வந்த விதியையும் கையெழுத்துப் பிரதிகளின் கதியையும், அவை அடைந்திருக்கும் ஸ்திதியையும்

பார்த்துச் சகிக்க மாட்டாமையொன்றே என்னை இத்தொழிலில் வலிப்பது என்கிறார். தம் பதிப்பில் தவறுகள் இருக்கலாம். ஆனால் அழிந்து போகும் நிலையிலுள்ள சுவடிகள் அடியோடு அழிவதை அழியாமல் பாதுகாத்து இருக்கிறேன் என்கிறார்.

இக்காலத்தில் புத்தகங்களைத் தேடிப் பரிசோதித்து அச்சியற்றும் வித்துவான்களோ தமக்குப் பொருள் வரவையே கருதி விரைவில் விலை போகும் விநோத நூல்களையும், பள்ளிக் கூடங்களுக்கு உபயோகமான பாடப்புத்தகங்களையும், சர்வ கலாசாலையாரால் பற்பல பரீச்சைகளுக்கு ஏற்படுத்தப்பட்ட போதனா பாகங்களையுமே அச்சிடுகின்றனர். சரஸ்வதியின் திருநடனம் சொலிக்கப் பெற்றனவாகிய சங்க மரீஇய நூல்கள் சிதைந்தழியவும் அவைகளில் இவர்களுக்குச் சற்றேனும் திருட்டி சென்றில. இதனைக் கண்டு சகிக்கலாற்றாது மனம் நொந்து அழிந்து போகும் சுவடிகளை இயன்ற மட்டும் தேடி அவற்றுள் தமிழிற்குப் பேரிலக்கணமாகிய தொல்காப்பியம் சேனாவரையம், பொருள் நச்சினார்க்கினியம், வீரசோழியம், இறையனார் அகப்பொருள், திருத்தணிகைப் புராண மென்று இன்னவற்றைப் பல தேசப் பிரதிகள் கொண்டு பரிசோதித்து அச்சிடுவித்தேன்" என்கிறார்.

பொருள் ஈட்டும் நோக்கமோ, தன் புலமையை வெளிக் காட்டும் ஆர்வமோ காரணமல்ல. தமிழ்மீது உள்ள ஆர்வம்தான் காரணம் என்கிறார். சுவடிகளின் அழிவைத் தமிழுக்கு நேர்ந்த அவலமாகக் கருதினார். இத்தகைய அவல நிலையை மாற்றி, 'தமிழன்னைக்கு ஏற்றம் தர எண்ணி இப்பதிப்புப் பணிக்கு வந்துள்ளார். இதனை, "யான் வித்தியா அகங்காரத்தினாலாவது திரவிய ஈட்டத்தினாலாவது இதில் ஏற்பட்டவனல்லன் என்பதை வற்புறுத்துகிறேன் என்றும், சுவடிகள் பாதுகாப்பின்றி அழிவதால் பதிப்பில் பலரும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் கூறுவதில் இருந்து அறிய முடிகிறது.

முடிந்தவரை சரியான பாடத்தைத் தர நினைக்கும் இவர் முடியாத போது நூலில் உள்ளவாறு தருவதை நோக்காகக் கொண்டிருந்தார்.

நெய்தற்கலி 29ஆம் செய்யுளின் ஏழாவது அடியில் உண் கண்நிறை மல்க எனவும் 16ஆவது அடியில் தூவற எனவும் இங்குப் பாடமாக வந்துள்ளன.

அவற்றில் முறையே உரையில், உண்கண் நிறைகையினால லேயே எனவும், வலியறும்படி எனவும் பொருள் கூறப் பட்டுள்ளன.

இத்தகைய பிழைகள் யாவும் பிற்காலத்து ஏடெழுது வோரால் ஏற்பட்ட தவறாகும்.

நீரென்றதற்கும், வலியென்றதற்கும் இயையுமாறு மூல பாடத்தை உறையென்றும், தாவென்றும் மாற்றலாமென ஒரு சில சான்றோர் கூறியிருக்கின்றார்கள். ஆனால் அவ்வாறு மாற்று வதை சி.வை.தா. ஏற்றுக் கொள்ளவில்லை.

நீரிற்கு உறையென்பது போலத் தூவென்றும் முற்கால வழக்கில் இருந்திருக்கலாம். எத்தனைச் சொற்கள் தற்கால வழக்கில் எடுத்தாளாத பொருளில் பண்டையோரால் பயன் படுத்தப்பட்டிருக்கின்றன. இலக்கிய இலக்கணங்களிலும் ஏதேனும் பிழைகள் இருந்தாலொழிய ஏட்டுப் பிரதிகளில் உள்ளவற்றை மாற்றம் செய்யவில்லை. இத்தகைய தவறுகள் இருக்கலாம். இருப்பினும் அடியோடு அழிவதை அழியாமல் பாதுகாத்திருக்கிறேன். ஏட்டுச் சுவடிகளில் ஒன்றிலாவது காணப்படாத மாற்றம் எதுவும் தாம் வெளியிடும் பதிப்புகளில் இடம்பெறக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார் என்பது தெரிகிறது (கலி.பதி. 25).

### சுவடிகளின் அழிவு

இயற்கைச் சீற்றத்திற்குச் சுவடிகள் பலியாயினதையும், பலியாக்கப்பட்டதையும் பின்வருமாறு சுட்டுகின்றார்:

"தமிழுக்குக் காலாந்தரத்தில் இரண்டு பெரும் பூதங்களால் இரண்டு பேரிடையூறுகள் நிகழ்ந்தன. குமரியாறும் அதன் தெற்கின்கணுள்ள நாடுகளுஞ் சமுத்திரத்தின் வாய்ப்பட் டமிழ்ந்திய போது . . . கபாடபுரம் அதன்கண் இருந்த எண்ணாயிரத் தொரு நூற்று நாற்பத்தொன்பது கிரந்தங்களோடு வருண பகவானுக்கு ஆசமனமாயிற்று (கலி.பதி.10).

இப்பால் வடமதுரைச் சங்கம் ஏற்பட்டு, சுவடிகளைச் சேகரித்து, நானூற்றைம்பது நூல்களை அரங்கேற்றி வைத்தது. அதன்பின் சமணவித்துவான்கள் தலையெடுத்துப் பலபல நூல்கள் இயற்றித் தமிழை வளர்த்தனர். அதன் மேல் இதிகாச புராணாதி கள் சமஸ்கிருத மொழியினின்று வித்துவான்களால் மொழி பெயர்க்கப்பட்டு மறுபடியும் தமிழ் தலையெடுத்த போது நாடு

முகமதியர் கைப்பட அவர்கள் கொறானுக்கு மாறாகவும் வீறாவதோ கிரந்தங்கள் மண் மேல் என்று மத வைராக்கியங் கொண்டு அந்தோ! நமது நூற்சாலைகள் அனைத்தும் நீறாக அக்கினி பகவானுக்குத் தத்தஞ் செய்தனர் (ப.11)

ஓலைச்சுவடிகள் குறுகிய வாழ்நாள் உடையவை. கறையான், இராமபாணம், ஓதம், புகை, எரி ஆகியவற்றால் இயற்கையாகவும் விரைவாகவும் பாதிக்கக் கூடியவை. பெருமழை, காற்று, வெய்யில் ஆகிய இயற்கைச் சீற்றத்தினால் ஏற்படும் அழிவு களில் சிக்கக் கூடியவை. இவையன்றிச் செயற்கை அழிவு அந்நியர் கவர்தல், எப்படியோ அழிதல் என்ற வகையிலும் சுவடிகள் அழிந்திருக்கின்றன.

சி.வை.தா.வுக்குச் சிறுவயதில் அவருடைய தந்தையார் சில நூல்களைக் கற்பித்தார். அவற்றைப் பிள்ளையவர்கள் பதிப்பிக்க எண்ணிய போது தமிழ் நாடெங்கும் தேடியும் அச்சுவடிகள் அவருக்குக் கிடைக்கவில்லை. இவை எப்படியோ காணாமற் போன சுவடிப் பட்டியலைச் சார்வனவாகும் (கலி.பதி.12).

சுவடிகள் ஓரந் தேய்ந்தும், சிதைந்தும் பலவகையில் பழுதடைந்தும் இருப்பதைக் கண்டு மனம் வருந்தும் சி.வை.தா. சுவடிகளின் அவல நிலையைக் கண்முன் நிறுத்துகிறார்; ஓலைச் சுவடிகளின் எழுத்துகளின் நிலைமை, அமைப்பு ஆகியவற்றைக் கண்டு கண்ணீர் மல்குகிறார்.

"ஏடுகள் இருந்த நிலைமை கண்டு யானுற்ற பரி பவத்திற்கு என் விழியினில் பெருகிய கண்ணீரே சாக்ஷி" (கலி.பதி. 29).

பொருள் நட்டம் ஏற்படும் நிலையிலும் அவற்றைப் பதிப்பிக்க ஆர்வம் கொண்டமைக்கு அவருடைய தமிழ் மொழிப் பற்றே காரணம் என்பதைப் பின்வரும் செய்தி மெய்ப்பிக்கின்றது.

"பழைய சுவடிகள் யாவுங்கிலமாய் ஒவ்வொன்றாய் அழிந்து போகின்றன. புது ஏடுகள் சேர்த்து அவற்றை எழுதி வைப்போரும் இலர். துரைத்தனத்தாருக்கு அதின் மேல் இலட்சியமில்லை. சரஸ்வதியைத் தம்பால் வகிக்கப்பெற்ற வித்துவான்களை அவள் மாமியும் எட்டிப் பார்க்கின்றாரில்லை. திருவுடையீர்! நுங்கருணை இந்நாட் தவறினால் பின்பு தவம் புரிந்தாலும் ஒரு தரம் அழிந்த தமிழ் நூற்களை மீட்டல் அரிது. யானை வாய்ப்பட்ட விளாம்பழத்தைப் பின் இலண்டத்துள்

எடுத்துமென்? ஓடன்றோ கிட்டுவது! காலத்தின் வாய்ப்பட்ட ஏடுகளைப் பின் தேடி எடுப்பினும் கம்பையும் நாராசமும் தான் மீரும். அரைக்காசுக் கழிந்த கற்பு ஆயிரம் பொன் கொடுத்தாலும் வாராது. சங்கமரீஇய நூல்களுட் சில இப்பொழுது தேசங்கள் தோறும் தேடியும் அகப்பட்டிலது. எத்தனையோ திவ்விய மதுர கிரந்தங்கள் காலாந்தரத்தில் ஒன்றன் பின் ஒன்றாய் அழிகின்றன. சீமான்களே! இவ்வாறு இறந்தொழியும் நூல்களில் உங்களுக்குச் சற்றாவது கிருபை பிறக்கவில்லையா? ஆச்சரியம்! ஆச்சரியம்! அயலான் அழியக்காண்கினும் மனந்தளம்புகின்றதே! தமிழ்மாது நுந்தாயல்லவா? இவள் அழிய நமக்கென்னென்று வாளா இருக்கின்றீர்களா? தேசாபிமானம், மதாபிமானம், பாஷாபிமான மென்று இவை யில்லாதார் பெருமையும் பெருமையாமா? இதனைத் தயை கூர்ந்து சிந்திப்பீர்களாக (கலி.பதி. ப.33,34).

அழிந்தவை போக எஞ்சியிருக்கும் சுவடிகளின் நிலை பற்றிக் கூறும்போது, "ஒட்டித் தப்பியிருக்கும் புத்தகங்களும் கெட்டுச் சிதைந்து கிடக்கும் நிலைமையைத் தொட்டுப் பார்த் தாலன்றோ தெரியவரும்! ஏடு எடுக்கும்போது ஓரஞ் சொரிகிறது. கட்டு அவிழ்க்கும்போது இதழ் முரிகிறது. ஏட்டைப் புரட்டும் போது துண்டு துண்டாய்ப் பறக்கிறது. இனி எழுத்துக்களோ வென்றால் வாலுந் தலையுமின்றி நாலுபுறமும் பாணக் கலப்பை மறுத்து மறுத்து உழுது கிடக்கின்றது (ப.12) என்கிறார்.

இதன்வழிப் பழமையான அச்சுவடிகள் நீர், நெருப்பு, கறையானால் சிதலமடைந்து காணப்பட்டதைக் கண்டு சி.வை.தா. மனம் உருகியதைக் காணமுடிகிறது.

**சுவடி பெற்ற வரலாறு**

"ஒரு நூலைப் பரிசோதித்து அச்சிடுவதற்கு முதலில் கையெழுத்துப் பிரதிகள் சம்பாதிப்பதே மஹாபிரயாசை. அதிலும் ஒரு நூல் பழையதும் இலேசில் விளங்காததுமானால் எழுதுவாரும் ஓதுவாரும் இல்லாமல் இருக்கிற இடமும் தெரியாமல் போய்விடுகிறது. கலித்தொகைப் பிரதிகள் தேட யான் பட்ட கட்டம் வாயினால் கூறும் அளவைத்தன்று. முதன் முதல் யான் பார்த்தது புதுவை நயனப்ப முதலியார் மூலபாடப் பிரதி. அது தலையும் கடையும் குன்றிய குறைப்பிரதி. மேலும் பெரும்பாலும் எழுத்துக்கள் சிதைந்து ஒரு பாட்டின் ஒருறுப்பாவது முற்றும் வாசிக்க முடியா்மற் கிடந்ததால்

படிப்பதற்கே வெறுப்பு உண்டாய் நீக்கி விட்டேன்" (கலி.பதி. ப.27) என்கிறார்.

அதன் பின்னர், "தொல்காப்பியப் பரிசோதனைக்காகத் தேடியலைந்தபோது ஆறுமுக நாவலரவர்கள் கலித்தொகைப் பிரதி ஒன்று அகப்பட்டது. அது கொண்டு கலித்தொகையின் அருமையுணர்ந்தார். எப்படியும் உலகிற்குப் பயன்பட அச்சிட வேண்டும் என எண்ணினார். உடனே ஆதீன மடாதிபதிகளுக்கு விண்ணப்பஞ் செய்து கொண்டார்.

திருவாவடுதுறை சற்குருநாத சுவாமிகள் பேருபகாரி. மடத்துப் பிரதி ஒன்று, தென்தேசத்துப் பிரதி இரண்டு கொடுத்து வேலையைத் தொடங்கச் சொன்னார். மதுரை மடாதிபதிகள் யாத்திரை போயிருந்தனர். எஞ்சிய மடங்களில் இருந்து பதில் வராததால் அங்கு இல்லை என முடிவு செய்தார் (ப. 27).

கிடைத்த மூன்று படிகளின் உதவியோடு, சிற்.கைலாச பிள்ளையைக் கொண்டு எழுத வைத்தார். திருக்குடந்தையில் வாழ்ந்தமையால் அந்நகரில் இருந்த சேசையா இவர் மீது அன்பு கொண்டிருந்தார். அவரிடமிருந்து கலித்தொகையை வெளியிட முழுப் பண உதவி கிடைத்ததால் வேறு படிகளும் தேடி அரிதின் முயன்று பல இடங்களுக்கும் கடிதம் எழுதினார். (ப.28)

யாழ்ப்பாணத்து மல்லாகம் வி.கனகசபை படி ஒன்று, திருமணம் கேசவ சுப்பராயர் படி ஒன்று, மயிலை இராமலிங்கம் படி ஒன்று, சென்னை ஓலைச்சுவடித் துறை (பிராசிய கிரந்த மண்டபம்) படி-2, தஞ்சை சரசுவதி மகால் படி ஒன்று ஆகியவை இவருக்குக் கிடைத்தன. அச்சுவடிகளின் தன்மை குறித்து, "இங்கும் அங்கும் சிதறுண்ட சில ஒற்றைகளைச் சேர்த்துக் கட்டி ஒரேடு பிடியேடு கலித்தொகை என அபிதானம் சூட்டி வைக்கப் பட்டிருந்தது" (ப.28) என்கிறார்.

இவற்றால் பயன் இராது என நீக்கிவிட்டு எவ்விடத்தும் அகப்படாமையால் அகப்பட்ட பிரதிகளை வைத்துக் கொண்டு மீண்டும் எழுதத் தொடங்கினார். கிடைத்தவற்றுள் திருவாவடுறை மடத்துப் பிரதி மட்டுமே செம்மையான பிரதி. பல பிரதிகளில் நெய்தற்கலி இடம்பெற்றிருக்கவில்லை. நான்காவது முல்லைக்கலி முடிக்கும் முன்னர் திருவாவடு துறைப் பிரதி தவிர ஏனையவை தலை கட்டிக் கொண்டன. எனவே, மீண்டும் பிரதி தேடி மூன்று திசைகளுக்கு மூவரை அனுப்பினார். இராமசாமி சாத்திரிகள்,

கோபால கிருஷ்ண செட்டியார், வைத்தியலிங்கச் செட்டியார் முதலிய தக்க பணியிலுள்ளவர்களுக்கும், கலிங்கக் கவிராயர் முதலிய வித்துவான்களுக்கும், மற்றும் பெரிய மனிதர்களுக்கும் இவர்களிடம் கடிதங்களும் கொடுத்தனுப்பினார் (29). அவர்களும் இவர் கேட்டுக் கொண்டபடி கலித்தொகை பிரதி பெற முயற்சி எடுத்தனர். ஆயின் பிரதி கிடைக்காததால் அவர்களிடம் இவர் அனுப்பி வைத்த மூவரும் வெறுங்கையுடன் திரும்பி வந்தனர் (30). வடதிசைக்கும் சுவடி தேடித் தானே கிளம்பினார் (29).

தான் யாழ்ப்பாணத்தில் இருந்து அருமையான தமிழ் நூல்கள் தேடித் தமிழ்நாட்டிற்கு 35 ஆண்டுகளுக்கு முன்பு வந்திருந்தார். அப்போது பழக்கமான கடலூர் மஞ்சக்குப்பத்து முதியவர் சண்முக உபாத்தியாயரும், புதுச்சேரி நெல்லித் தோப்பு தமிழ்ப் பண்டிதர் சொக்கலிங்கம் பிள்ளையும் கலித்தொகை பிரதி வைத்திருந்தது நினைவுக்கு வந்தது. எனவே இவர் அந்த இடங்களில் சென்று விசாரித்தார். முன்னையவர் இருந்த இடத்தை அறியமுடியவில்லை. இரண்டாமவர் வம்சத்தில் அவரது பேத்தியும், குடும்பமும் அடுத்த ஊரில் இருப்பதாக அறிந்து அங்குச் சென்றார். அங்குப் பேத்தியின் கணவரிடம் சி.வை.தா. கலித்தொகை சுவடி பற்றிக் கேட்டார். அவர் ஓரிரு சுவடிகள் வைத்து இருக்கிறோம். அவற்றின் பெயர் தெரியாது. தங்களுக்கு வேண்டியது இருந்தால் பார்த்து எடுத்துக் கொள்ளுங் கள் என்றார். அங்கிருந்த கலித்தொகை மிகவும் பழுது பெற்றிருந் தாலும் அதில் நெய்தற் கலி இருந்ததால் மிக மகிழ்ச்சியோடு வாங்கி வந்தார் (29).

அதன்பின் திண்டிவனத்திலும் நெய்தற்கலியின் முதல் பாகம் வரையுள்ள ஒரு பிரதி கிடைத்தது (29). திரிகோணம் த. கனகசுந்தரம் பிள்ளை பிராசிய கிரந்த மண்டபத்தில் நான் முன்பு நெய்தற்கலி வைத்தேன் என்று உறுதியாகச் சொன்னார். எனவே முன்பு பார்த்து விட்டு இப்பிரதியால் பயனில்லை என்று திரும்பியவர் மீண்டும் அங்குச் சென்று பார்த்த போது அதில் நெய்தற்கலி இருந்தது. மேலும் நெய்தற்கலி 29 செய்யுள்களுடன் கூடிய வேறு ஒரு பிரதியும் கிடைத்தன. உடனே சிற். கைலாச பிள்ளையும் இவரும் அதனைத் தங்களிடம் உள்ள பிரதிகளோடு ஒத்துப் பார்வையிட்டு ஆங்காங்கே கண்ட பாட வேறுபாடு களைக் குறித்துக் கொண்டனர் (30).

சரவணப் பெருமாளையருடைய கலித்தொகை படி கோயமுத்தூரில் ஒருவருக்குப் போயிருப்பதாக இவர் அறிந்தார். அவரிடமுள்ளதை இரவலாகச் சில நாட்களுக்குள் அனுப்பித் தரும்படி அவ்வூர்ப் பெரிய மனிதர் சிலருக்குக் கடிதம் எழுதினார். "அவர்கள் அரவின் கடிகை அரதனத்திற்கும் ஆழிவாய் இப்பியுண் முத்திற்கு அவை உயிரோடிருக்குங்காறும் ஆசைகொளல் வேண்டாவாறு போல இம்மஹானுடைய சீவ தசையில் இவர் கைப்பட்ட புஸ்தகங்களைக் கண்ணாற் பார்க்கும் அவாவினை ஒழிக வென்று பதிலெழுதினர்". படித்த இவர் "இதுவும் கலித் தொகையைப் பிடித்த கலித்தொகையோ என்று உளநொந்தேன்" என்கிறார். பின் அச்சுவடியில் முல்லை வரை மட்டுமே உள்ளது. நெய்தல் இல்லை எனத் தெரிந்து சற்று ஆறுதல் அடைந்தார் (30).

நயனப்பர் படி-1, ஆறுமுக நாவலர் படி-1, திருவாவடு துறைப்படி-1, தென்னாட்டுப் படிகள்-2, சொக்கலிங்கம்படி-1, திண்டிவனம் படி-1, சென்னை ஓலைச்சுவடித்துறை-2, கனக சபை படி-1, திருமணம் கேசவ சுப்பராயர் படி-1, மயிலை இராமலிங்கம் பிள்ளை படி-1, தஞ்சை சரசுவதி மகால் பிரதி-1 என்றவாறு இவருக்குப் பதிமூன்று சுவடிகள் கிடைத்துள்ளன. இவற்றில் பத்துச் சுவடிகள் இவருக்குப் பயன்பட்டுள்ளன.பத்தில் குறைப்படியும் உண்டு. முழுப்படியும் உண்டு.

சொக்கலிங்கப்பிள்ளை படி-1, திண்டிவனம் படி (நெய்தற் கலி முதற்பகுதி)-1, ஓலைச்சுவடித் துறை படி-2 (ஒன்று 29 செய்யுள் கள் மட்டும்) என நான்கு படிகள் நெய்தற்கலியோடு கிடைத் துள்ளன. "அவற்றுள் நெய்தற்கலி முழுமையையும் பரிசோதிப்ப தற்குப் பயன்பட்டவை மூன்று பிரதிகளே"(30).

**பொருள் வேண்டல்**

ஏடுகளைப் பதிப்பிக்கப் பொருள் தேவை ஏற்படவே அவர் தம் காலத்துப் தமிழறிஞர்கட்கும், புரவலர்கட்கும் இதழ்களின் விளம்பரங்கள் வாயிலாகவும் தம் பதிப்புரை வாயிலாகவும் வேண்டுகோள் விடுத்து, கிடைத்த பொருளை வைத்து ஒவ்வொரு நூலையும் பதிப்பித்துள்ளார். நமக்கு உதவியவர்கள் பணமாக அல்லது ஏடுகளாக அல்லது கருத்து விளக்கமாக எப்படி உதவியிருப்பினும் எவ்வெவ்வகையில் உதவினர் என விரிவாகத் தம் பதிப்புரையில் குறிப்பிட்டு அவர்

களுக்கு நன்றியும் கூறியுள்ளார். பிற பதிப்பாளர்களும் உதவி பெற்றாவது பதிக்க வேண்டும் என்று கூறுகிறார்.

முன்பு இருந்த பல சுவடிகள் இன்று கிடைக்காமல் இருபபதையும், எஞ்சியவை அழிவதையும் கண்டு மனம் நொந்து அவற்றுள் பேரிலக்கணமாகிய தொல்காப்பியம் சொல்லதிகாரம், சேனாவரையம் (1868), அதன் பொருளதிகாரம் (1885), திருத்தணிகைப் புராணம் (1883) ஆகியவற்றைப் பல நாட்டுப் படிகள் கொண்டு பரிசோதித்து அச்சிட்டார். ஆர்வமுடன் வாங்குவோர் அதிகமின்மையால் இவருக்கு 3500 கை நட்டம் ஏற்பட்டது (கலி.பதி.ப.13).

விசு ஆண்டு (1881-82) தொல்காப்பியம் பொருளதிகாரம் அச்சிடத் தொடங்கியபோது முன்போல் மீண்டும் நட்டம் வரப் போகிறது என மனந்தளர்ந்தார். மேல் வரும் நட்டத்தை முன் உணர்ந்து, முதன்மை நீதிமன்ற நீதி அரசர் இராமச்சந்திரையரும், சென்னைப் பூண்டி. அரங்கநாத முதலியாரும் உதவி புரிந்து உற்சாகப் படுத்தினர். காகிதச் செலவுக்காக முறையே 125, 100 கொடுத்து, இந்நூல் பதிப்பில் நட்டம் வந்தால் பணத்தைத் திரும்பக் கொடுக்க வேண்டியதில்லை என்றனர் (ப.13).

திருத்தணிகைப் புராணச் செலவை தி.குமாரசாமிச் செட்டியார் தருவதாக ஒத்துக் கொண்டார் (13).

மேற்குறித்த ரூ.3500 நட்டத்தைப் பிரபுக்கள் நன்கொடை, முதலிய உதவிகளைச் செய்தாலன்றி மீண்டும் நூல்களை அச்சிற்குக் கொண்டு வருதல் இயலாது என உணர்ந்தார். எனவே 1887 ஆடி மாதம் இந்து செய்தித்தாளில் தன் குறையைத் தெரிவித்து ஓர் அறிக்கை கொடுத்தார்.

இந்த அறிக்கையின் பிரதியைத் தனக்கு வேண்டிய சிலருக்குத் தனிப்பட்ட முறையில் அனுப்பினார். இது கண்டு ஒரு சிலரே அனுதாபமுற்று உதவினர் (ப.12).

இந்து செய்தித்தாள் வழியாக வந்த வேண்டுகையைக் கண்டு இருபது நபர்கள் பணம் அனுப்பி உபசரித்து மிகவும் கவுரவப்படுத்தினர் (ப.13). இவர்கள் பெயர்களையும் வழங்கிய தொகைகளையும் தனித்தனியே பட்டியலிட்டுக் காட்டியுள்ளார் (ப.14).

சென்னைப் பாடசாலைப் புத்தக சமாசீயர் முதலியோர் இவரது முயற்சிக்கு உதவும் பொருட்டு இவரது நூல்களை விலை

கொடுத்து வாங்கினர். இத்தொகையும், 20 நபர்கள் அளித்த ரூபாய் ஆயிரத்திநூறு நன்கொடையும் சேர்ந்து அவர் செல விட்ட பணத்தில் முக்கால் பங்கை இவர் கைக்குக் கொண்டு சேர்த்தன.

இந்த 20 பேர்களுள் கொழும்பு உச்ச நீதிமன்ற அத்வக்நாத் கவுரவ பொ. இராமநாத முதலியாரும், சட்ட வல்லுநர் பொ. குமாரசாமி முதலியாரும் மற்றும் மாத்துறை மாவட்ட வழக்காடு மன்ற நீதிபதி பொ. அருணாசல முதலியாரும் தனித் தனியே ரூ.25 அனுப்பியதுடன் இனி வெளியிடும் ஒவ்வொரு நூல் வெளியீட்டுக்கும் ரூ.25 தருவதாகக் கூறினர்.

சீர்காழி கிருட்டிணசாமி ரூ.50 அனுப்பியதுடன், ஏதாவது ஒரு நூலை முழுச் செலவும் தந்து பதிப்பிப்பதாக எழுதியிருந்தார். இவரும் வேதாரணியம் கைலாசநாதரும், திருப்பனந்தாள் குமாரசாமி முனிவரும் சி.வை. தா.வின் மனத்தில் கிடந்த ஆர்வத்தை நிறைவேற்ற வல்லவர்களாய் இருந்தனர். ஆனால் இம் மூவரும் இளம்பருவத்திலே இயற்கை அடைந்தமையை எண்ணி இவர் இரங்குகிறார் (ப.14). புதுக்கோட்டை அமைச்சர் அ. சேசைய சாஸ்திரியிடம் சி.வை.தா. அழியும் நூல்களைப் பாதுகாக்கத் தாம் மேற்கொண்ட முயற்சிகளையும், அதனால் ஏற்பட்டு வரும் நட்டம் பற்றியும் கூறுகிறார். அவர் 'யான் யாது செய்தல் வேண்டும்' என்று கேட்க, இவர் ஏதாவது ஒரு பழைய நூல் தங்கள் பொறுப்பில் பதிப்பிப்பது நல்லது என்றார். உடனே அவர் சங்க காலத்துப் பேரிலக்கியம் ஒன்றைத் தேர்ந்து வெளியிடுங்கள் என்று தம் இசைவைத் தெரிவித்தார். கற்றறிந்தோர் ஏத்துங் கலியை வெளியிட வேண்டும் என்ற தம் விருப்பத்திற்கு நேரம் கனிந்து விட்டது எனக் கருதி அதனை அச்சிடத் தொடங்கினார். அச்சுச் செலவு முழுவதும் அவரே கொடுத்ததால் பிரதிகள் விற்பனை யாகும் பணத்தில் எட்டுத் தொகையில் இரண்டொரு நூல் பதிக்க உத்தேசித்தார் (14).

இலக்கண விளக்கத்தை அச்சுக்குக் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டபோது, "அதனை யான் எடுத்துப் பிரசுரஞ் செய்யத் துணிந்தும் இதுவரையும் அச்சிட்ட நூல்களால் எனக்கு நேரிட்டிருக்கும் நஷ்டம் இடங்கொடுத்திலதாதலாற் பிறர் திரவிய சகாயம் அவசியம் வேண்டியதாய் அது விசயத்தை ஆங்குள்ள சில மகான்களுக்குத் தெரிவித்தேன்" (32) என்கிறார். அப்போது திருவாவடுதுறை மகா சந்நிதானம் அம்மடத்துப் பிரதிகள் அனுப்பி நூறு ரூபாயும் தருவதாகக் கூறினார். கலித்தொகைப்

பிரதியை அனுப்பிய போதும் இம்மடத்து சற்குருநாதசுவாமிகள் நூல் அச்சானபின் 20 படிகள் எடுத்துக் கொள்வதாகக் கூறினார் (27).

இலக்கண விளக்கத்தை அச்சிட ஆயிரம் ஆகுமென விளம்பரம் கொடுத்தார். இதைக் கண்ட இரங்கூன் கமிஷனர் அலுவலக மேலாளரான இவரது சகோதரரும், அவருக்கு வேண்டிய சிலரும் சேர்ந்து ஐநூறு ரூபாய் அனுப்பினர். மதுரை போடி நாயக்கனூர் ஜமீன்தார் காமராசபாண்டிய நாயக்கர் முழுப் பணமும் தருவதாகக் கூறி ஐநூறு கொடுத்து, அச்சிடத் தொடங்கிய பின் ஐநூறு தருவதாகச் சொன்னார் (32).

இரங்கூனில் இருந்து வந்த பணத்திற்கு அதனை அனுப்பியவர்களின் சம்மதம் பெற்றுச் சூளாமணியை அச்சிடப் பயன்படுத்திக் கொண்டார் (32).

இவ்விரண்டு நூல்களும் கலித்தொகை வெளியான அடுத்த ஆண்டில் வெளிவந்து விட்டன (1889). எனவே கலித் தொகைப் பதிப்பின் போதே இவ்விரண்டின் பதிப்பு முயற்சியினை யும் தொடங்கி விட்டார் என்பது தெரிகிறது. இதனை அவர் பின்வருமாறு கூறவும் தவறவில்லை.

"இலக்கண விளக்கம் அதிவிரைவில் அச்சாகி வருகிறது சர்வதாரி வருசத்தோடு (1889) பவனி வருமென நம்புகிறேன்" (32).

இதன்வழி இவர் ஒருநூல் பதிப்பில் அடுத்து இந்த நூல் ஆய்வில் உள்ளது என்றும் இவை வெளிவரும் என்றும், குறிப்பிடும் வழக்கமுடையவர் என்பது தெரிகிறது. தம் அச்சீடு, ஆய்வு முதலியவற்றை நூல் வெளி வரும்வரை மறைவாக வைப்பது அக்கால வழக்கம். இருந்தும் இவர் அச்சிற்கு வரவுள்ள பிற நூல்கள் பற்றிய வரலாற்றை வெளிப்படக் கூறுவது இவரது மனத்தின் உயர்வைக் காட்டுகிறது.

இந்து இதழாசிரியர் க.சுப்பிரமணியரும், மு.வீரராகவரும் 30-31 படிவங்களுக்கு மேற்படாத ஒரு நூலைத் தாள் செலவோடு கூடத் தம் அச்சகத்தில் அச்சிட்டுத் தருவதாகக் கூறினர் (ப.15). "இவர்கள் முன் மாதிரியைப் பின்பற்றிப் பிற அச்சுக் கூடத் தலைவர்களும் தலைக்கொரு பழைய நூலைத் தத்தம் எந்திர சாலையில் தக்க வித்துவான்களைக் கொண்டு பரிசோதித்துப் பதிப்பாராயின் எத்துணைநூல் அழியாமல் காக்கப்படும்? அன்றியும் அஃது அருந்தந்திரங்கள் இறவாமல் நிலை

பெறுவதற்கான பெருந்தந்திரமல்லவா? என்று நயந்து கூறுகிறார் (16).

இதிலிருந்து இவர் தாம் பதிப்பிக்க வேண்டும் என்றும், தமக்கே உதவ வேண்டும் என்றும் எண்ணியவர் அல்லர் என்று தெரிகிறது. பிறரும் பதிப்பிக்க முன்வர வேண்டும். பிறர் பதிப்புகளுக்குப் பலரும் உதவ முன்வர வேண்டும் என விரும்பினார். தாம் ஈடுபட்டது போல் அறிஞர்களும் பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்தலில் ஈடுபட வேண்டும் என்றும், வள்ளன்மையாளர் அதற்கு உதவ வேண்டும் என்றும் இவர் ஒரு பேரறிக்கை விடுகிறார். இது இவரது ஆழ்ந்த தமிழ்ப்பற்றையும், தமிழ் மீதுள்ள அன்புப் பெருக்கையும் காட்டுகிறது.

"எட்டுத்தொகையுள் கலித்தொகை, பத்துப்பாட்டுள் திரு முருகாற்றுப்படை வந்துள்ளன. பதினெண் கீழ்க்கணக்கு நூல் களுள் இன்னும் வராதவை உள்ளன. இவற்றைத் தங்களால் நன்கு மதிக்கப்பட்ட சில வித்வாம்சர்களைக் கொண்டு பரிசோதித்து வெளியில் வரச் செய்யத்தக்க சீமான்கள் யாரும் இல்லையா! தமிழின் அருமையுணர்ந்த பெரியோர், மடாதிபதிகள் என்று இன்னோர் இவற்றின் கடைக்கண் சாத்துமாறு சரஸ்வதியே அநுக்கிரகிப்பாளாக.

தஞ்சைத் துணை முறை மன்ற நடுவர் கனகசபை என்பார் பழமையான 35 ஏடுகளைத் திரட்டித் தந்தார். பதிப்பு முயற்சிக்குப் பணத்தினும் பழஞ்சுவடியே பெரும்பயனாம் என்பதை உணர்ந்து செய்த செய்கையைப் பாராட்டும் இவர், 'இவற்றை யான் அத்துணைப் பொன் மொகராவாக மதித்து அவர்க்கு வந்தனஞ் செய்கின்றேன் (15) என்று பாராட்டுகிறார்.

### நன்றி பாராட்டல்

சி.வை.தா. வட்டுக் கோட்டையில் உள்ள கல்விச் சாலை யில் இளமையில் கல்வி பயின்றார். அப்பொழுது பள்ளிப் படிப் புடன் சுன்னாகம் முத்துக் குமாரக் கவிராயரிடம் இலக்கண இலக்கியங்களை முறையே கற்றார். ஆசிரியரின் செய்நன்றியை மறவாத இவர் இப் பதிப்புரையில் நன்றி பாராட்டியதை,

> சுன்னை முத்துக் குமரன் துணைக்கழல்
> சென்னி நாவொடு சிந்தை திருந்த வைத்(து)
> அன்ன மூதறி வாளர் பதந்துதித்(து)
> இந்நிலத் திவ்வுரை இன்றி யம்புகேன்

என்ற பாடல் காட்டுகிறது. இதுபோல் வீரசோழியம், இலக்கண விளக்கம், சூளாமணி, தொல்காப்பியம் ஆகிய பதிப்புகளிலும் தம் தமிழாசிரியருக்கு இவர் வணக்கம் தெரிவித்துள்ளார்.

இவர் ஏடுபெற உதவியவர், பெற்றுத் தந்தவர், பொருளுதவி செய்தவர் போன்றோருக்கு இப்பதிப்புரையில் நன்றி கூறியிருக்கிறார்.

திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் சுப்பிரமணிய தேசிகர் கலித்தொகை வெளியிடவும் வேறு பல நேரங்களிலும் பொரு ளுதவி செய்தார். இவர் செய்த உதவியைப் பாராட்டிப் பதிப்புரை யில், "விண்ணாடு கைலை வழித்தே சிகர்வெல் வினைக்கு நெற்றிக்", "சிரமாலையாகவும் சின்முடியாகவும் செய்யக் கண்ட" என்று தொடங்கும் பாடல்கள் வழி மனமுருகி நன்றி பாராட்டுகிறார்.

கலித்தொகைக்கு முழுஉதவி செய்த சேசையாவுக்கும் நன்றி கூறுகிறார். இந்து பத்திரிகையின் அறிக்கை கண்டு பணம் அனுப்பிய இருபது பேருக்கும், "பிரபுக்கள் தங்களுக்கு நேரே காட்டிய தொகையை, எனது முயற்சிக்கும், பிரயாசைக்கும் தமது வெகுமதியாக அனுப்பி உபசரித்து என்னை மிகவும் கவுரவப் படுத்தினர். அவர்கள் தயாளத்தையும், பரோபகார தேசோபகார சீலத்துவத்தையும் பாராட்டி யான் அவர்கள் அனைவர்க்கும் மிக நன்றி கூறுகின்றேன்" என்கிறார்.

தொல்காப்பியப் பொருளதிகாரம் அச்சிட உதவியவர் களுக்கு, "இவர்களுடைய பாஷாபிமான சிந்தை எவராலும் ஏத்தித் துதிக்கத் தக்கதன்றே" என்று நன்றி கூறுகிறார் (ப.14).

பதிப்புரையில் சொல்லப்பட்டு வரும் செய்திகளுக்கேற்ப நன்றி கூறும் இவர் இறுதியில் பின்வருபவர்களுக்கு நன்றி கூறிப் பதிப்புரையில் முடித்திருக்கிறார்.

"இந்நூலைப் பதிப்பிக்கும் பொருட்டு ஏட்டுப்பிரதி தயாரித்த கனவான்களுக்கும், இதனைப் பரிசோதித்து அச்சிடுவதில் எனக்கு அப்போதப்போது சகாயஞ் செய்த ஸ்ரீமத் ந.க. சதாசிவப் பிள்ளையவர்கட்கும், ஸ்ரீ யாழ்ப்பாணம் சிந்தாமணி உபாத்தியாயர் வேலுப்பிள்ளையவர்கட்கும் ஸ்ரீ நல்லூர் சிற். கைலாசபிள்ளையவர்கட்கும், ஸ்ரீ திரிகோணமலை ந.த. கனக சுந்தரம்பிள்ளை அவர்கட்கும் என் நன்றி கூறுகின்றேன்" (ப.34).

**உ.வே.சா.வின் நட்பு**

கும்பகோணம் கருப்பூரில் சி.வை.தா. வாழ்ந்தபோது உ.வே.சா.வுக்கு அவருடன் நேரடித் தொடர்பு ஏற்பட்டுள்ளது. முன்பு கடிதப் போக்குவரத்து மட்டும் உண்டு. சி.வை.தா. விரும்பிய திருவாவடுதுறை மடத்திற்கு அழைத்துச் சென்று திருமடத்தின் தொடர்பை ஏற்படுத்தினார்.

சி.வை.தா. சீவக சிந்தாமணிப் பதிப்பை வெளியிட ஆர்வம் கொண்டிருந்தார். உ.வே.சா. இம்முயற்சியில் ஈடுபட்டிருந்ததால் தம் முயற்சியைக் கைவிட்டார். இப்பதிப்பு விரைந்து வர உ.வே.சா.வைத் தூண்டியுள்ளார். இதை உ.வே.சா. சீவக சிந்தாமணியின் முகப்புரையில் பின்வருமாறு (1887) கூறியுள்ளார்.

"சீவகசிந்தாமணி நூலையும் உரையையும் பின்னும் இரண்டொருமுறை பரிசோதித்துப் பிரகடனம் செய்யும்படி சி.வை.தா. பலமுறை தூண்டியமையால் விரைந்து அச்சிடுவிக்கத் துணிந்தேன்".

1887ஆம் ஆண்டு உ.வே.சா. சிந்தாமணி பதிப்பித்த அதே ஆண்டில் சி.வை.தா. கலித்தொகையை வெளியிட்டார். அதன் பதிப்புரையில்,

"இலக்கணக் கொத்துடையார் நூலாசிரியர், உரையாசிரியர், போதகாசிரியர் என வகுத்த மூவகை ஆசிரியரோடு பரிசோதனாசிரியர் என இன்னுமொன்று கூட்டி இவன் தொழில் முன் மூவர் தொழிலும் பார்க்க மிகக் கூடிய தென்றும் அவர் அறிவு முழுவதுமே இவர்க்கு வேண்டிய தென்றும் வற்புறுத்திச் சொல்லுகின்றேன். தூக்கினால் அன்றோ தெரியும் தலைச்சுமை. பரிசோதனாசிரியர் படும் கஷ்டமும் ஓர் அரிய பழைய நூலைச் சுத்த மனச்சாட்சியோடு பரிசோதித்து அச்சிட்டார்க்கன்றி விளங்காது. இவையெல்லாம் அனுபவித்தாலன்றி அறியப்படாத பொருள்கள் ஒன்றற் கொவ்வாத இருபது இருபத்தைந்து பிரதிகளைச் சுருக்கி வைத்துக் கொண்டு என்கண் காணச் சிந்தாமணி பரிசோதனை செய்து பதிப்பித்த கும்பகோணம் வித்தியாசாலைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமத் வே.சாமிநாதய்யரைக் கேட்டால் இந்நால்வகை யாசிரியர் பாட்டின் தாரதம்மியம் சற்றே தெரியலாம். எனக்கு அவரும் அவருக்கு நானுமே சாட்சி" (கலி.பதி.26) என சி.வை.தா. குறிப்பிட்டுள்ளார்.

திருத்தங்களைக் கலித்தொகைப் பதிப்புப் பணியில் கொண்டமையும் புரூப் திருத்தியமையும் சிற்சில நேரங்களில் தாமும் செய்ததாக என் சரித்திரத்தில் உ.வே.சா.கூறுகிறார்.

சி.வை.தாவுக்கும் உ.வே.சா.வுக்கும் இடையே நட்பு இருந்துள்ளது. ஒருவரை மற்றொருவர் சமயம் நேரும் போது பாராட்டி வந்தனர். இருவரும் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொண்டுள்ளனர். இந்நிகழ்ச்சிகளை உளம் கொள்ளாமல் சி.வை.தா. புகழ் தமிழ்நாட்டில் பரவுவதை அய்யர் தடுத்தார் என்றும் சிலர் கூறுவர்.

சாமிநாதய்யர் பதிப்புத் துறையிலே பெரும்புகழ் பெறுவதற்கும் சி.வை.தா.வே காரணமாக இருந்தார். பிற்காலத்தில் பதிப்புத் துறையில் புகழ்பெறவும் தமிழ்த்தாத்தா என்று புகழப் படுவதற்கும் சி.வை.தா.வே காரணமாகயிருந்தார் என்று கூறுவார் மனோன்மணி சண்முகதாஸ் (சி.வை. தாமோதரம் பிள்ளை ஓர் ஆய்வு நோக்கு, ப.67).

### சி.வை.தா.வின். பதிவுமுறை

இவர் நூல், நூலாசிரியர், நூலின் காலம், உரையாசிரியர் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஆய்வு செய்கின்றமையை இவரது பதிப்புரை காட்டுகின்றது.

### நூலும் நூலாசிரியரும்

நான்கு கலிகளையும் ஒருங்கு தொகுத்து ஐந்தாங் கலியாகிய நெய்தற்கலியையும், கடவுள் வாழ்த்துச் செய்யுளையும் பாடிச் சேர்த்துக் கலித்தொகை என்ற தொகை நூலினை ஆக்கியவர் நல்லுந்துவனார். நற்றிணையில் ஒரு செய்யுளும், பரி பாடல் முதலிருபத்திரண்டு செய்யுட்களுள் நான்கும், அக நானூற்றில் ஒன்றும் இவரியற்றிய பிற செய்யுட்களாகும்.

கலித்தொகையின் சிறப்பை, சி.வை.தா. பின்வருமாறு கூறுவார். “இது சங்கத்தார் காலத்து இலக்கியங்களுக்கு எல்லாம் இலக்கியமாக மதிக்கப்பட்டது என்பது அவரால் தானே கொண்டு வரப்பட்ட, ‘கற்றறிந்தார் ஏத்தும் கலி’ என்னும் விசேசனத்தால் பெறப்படும். ஆகவே இதன் சிறப்பு இத்துணை என்றது எம்போலியரால் எடுத்துச் சொல்லக் கடவது ஒன்று அன்று . . . .சமஸ்கிருத மொழிகள் தமிழோடு வந்து கலக்கப் பெறாத சுத்தத் தமிழ் காலத்தது என்பது இக்கலிகளுள் வட

மொழி என்ற மணமும் இல்லாமையே தெரிவிக்கும் என்பார் (கலி.பதி. 10).

சி.வை.தா. நல்லுந்துவனார் பற்றிய செய்திகளை நன்கு ஆராய்ந்து தெளிவுபட நிறுவுகிறார்: "இந்நூல் திரட்டித் தொகுக்கப்பட்டது நல்லுந்துவனாரால், இயற்றப்படவில்லை என்று கூறுவார் கருத்தை இவர் மறுத்து நூலாசிரியர் நல்லுந்துவனார் எனப் பின்வருமாறு சான்று காட்டி நிறுவுகிறார். "இவர் இது இயற்றினாரன்று, சிறந்தகலிச் செய்யுள்களைப் பல நூல்களில் இருந்து திரட்டித் தொகுத்தவர் என்பர். இவ்வாறு தொகுக்கப்பட்ட அகம், புறம், நற்றிணையென்ற இன்னோரன்ன நூலுள் எல்லாம் அவ்வச் செய்யுளின் கீழ் ஆக்கியோன் பெயர் குறிக்கப்பட்டது போல இதனுள் குறிக்கப்படாமையானும், தொல்காப்பியனார் அடுக்கிய முறை பிறழப் பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தலெனக் கோத்த தொகையையே கொள்ளக் கிடத்தலானும் . . . நச்சினார்க்கினியார், "புரிவுண்ட புணர்ச்சி யென்றற் தொடக்கத்து நெய்தற் கலியின் கீழ்ச்",

"சொல்லொடுங் குறிப்போடும் முடிவுகொ ளியற்கை
புல்லிய கிளவி எச்ச மாகும்"

என்பதனாலும் சொல் எச்சமும் குறிப்பெச்சமுமாகத் தம் போலவும் தோன்ற ஆசிரியர் நல்லுந்துவனார் செய்யுட் செய்தார்" (18).

**நூலின் காலம்**

இது கடைச் சங்கத்தார் காலத்து நடுக் கூற்றின் கண் தோன்றியது. கடைச்சங்கம் ஒழிந்து இரண்டாயிரம் ஆண்டு ஆயிற்று என்பது வீரசோழியப் பதிப்புரையில் தமிழின் காலம் நிரூபணம் கூறிய இடத்துச் சித்தாந்தம் செய்து காட்டி இருக்கிறேன். ஆதலால் இந்நூல் உண்டுபட்டு. இப்போது இவ்வாற்றானும், இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டிற்கும் குறையாது. மூவாயிர மெனினும் இழுக்காகாது (ப.19). இவர் வீரசோழியம், தொல்காப்பியம், கலித்தொகை, சூளாமணி, இலக்கண விளக்கம் ஆகியவற்றின் காலத்தையும் வரையறுத்துக் கூறியுள்ளார். இங்ஙனம் தாம் பதிப்பித்த நூல்களின் காலவரையை வலியுறுத்த சில காட்டுகளைக் காரணகாரியத் தொடர்புடன் விளக்கி யுள்ளார்.

உரையாசிரியர் பற்றிய பெருமைகளை, திறமைகளைச் சிறப்புற நன்கு விளக்கி, அவரைப் பரிமேலழகர், சிவஞான முனிவர் போன்ற உரையாசிரியர்களுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்துள்ளார். பதிப்புரையில் ஏறக்குறைய மூன்று பக்கங்கள் இவரைப் பற்றிப் பேசுகிறார்.

"இதற்கு உரை எழுதினார் மதுரை ஆசிரியர் பாரத்து வாசி நச்சினார்க்கினியர். இம் மகான் இதற்கு உரையெழுதி வைக்காமல் இருந்தால் இந்நூலைப் படித்து உணர்த்தல் இக்காலத்திற்கு இசையாது. ஆகவே இத்தமிழ் நச்சினார்க்கினியர் இட்ட பிச்சை என்றுணர்க . . . தமிழில் உள்ள நுணுக்கங்களை இவர் போல எடுத்துக்காட்டி மாணாக்கர்க்கு மிக உபயோகம் ஆகும்படி உரை செய்த ஆசிரியர் எவருமிலர். இதனால் இவரினும் தமிழ் வல்லோர் இருந்திலர் என்று சொல்லப் புகுந்தேன் அல்லேன் (ப.20).

நச்சினார்க்கினியர் சமணர் காலத்தர். ஆதலின் இந்நூல் இவர் உரையெழுதி 1200 ஆண்டுகளுக்குக் குறையாது. சங்கமரீய நூல்களைப் போல சீவகசிந்தாமணி முதலிய பிற்றை நூல்களி னின்று தமது உரைகளுக்கு வேண்டிய உதாரணங்கள் ஆங்காங்கு எடுத்து ஆண்ட இவர் அவை மலிந்து கிடக்கும் பாரத ஸ்காந்த இராமாயணங்களில் இருந்து ஓர் இலக்கியமும் காட்டாததே இவையனைத்தும் இவர் காலத்திற்குப் புதியன வென்று உள்ளங்கை நெல்லிக்கனி போலக் கிடக்கின்றது (20) .

பரிமேலழகரும் நச்சரும் ஒரே காலத்தினர். பரிமேலழகர் திருக்குறள் ஒன்றுக்குத்தான் உரையெழுதினார். இவரோ தமது காலத்தில் உரைபெறாத சிக்கு முக்காய்க் கிடந்த பன்னூல்களைப் பட்டப்பகலில் வெட்டவெளி போலச் சிக்கறுத்துக் காட்டி உரை வகுத்த மகாவியாக்கியான பேராசிரியரும், விளங்காமல் தடுமாறிய குறுந்தொகை, பத்துப் பாட்டிற்குப் பொருள் அனைவருக்கும் இனிது புலப்படும்படி மொழித் திறத்தான் முட்டறப் பிட்டுக் காட்டியவர் என்றால் இவர் வல்லபத்திற்கு வேறு சான்று வேண்டிலது (20).

தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்குச் சேனாவரைய ருரையும் திருக்குறளுக்குப் பரிமேலழகருரையும் இவர் உரையினின்றும் வியந்து கொண்டாடப்பட்டன என்று கொள்ளி

னும் கொள்க. அதனால் அவர்கள் இவரினும் பெருஞ்சிறப்பும் பயனும் உடையவர்களாகார்கள் (20).

## பதிப்பு நெறிமுறை

கலித்தொகைப் பதிப்பு நூலை ஆக்கியுள்ள முறை, செய்த மாற்றங்கள், அதற்கான காரணங்கள் போன்றவற்றைத் தம் பதிப்புரையில் விளக்கமாகத் தருகிறார். மூலத்தில் பிழை இருக்கிறது என்று கருதியும் திருத்தம் செய்யாத இவர் ஏட்டுப் பிரதிகளின் அமைப்பில் சில மாற்றங்களைச் செய்திருக்கிறார்.

பாடலும் அதற்குரிய நச்சர் உரையுமாக இவரது பதிப்பு அமைந்துள்ளது. ஆனால் சுவடிகளில் அப்படி இருக்கவில்லை. உரைப்பகுதிக்கு ஏற்பப் பாடல்கள் வகுக்கப்பெற்று இடையிடையே உரையுடன் இணைந்து பாடல் பகுதிகள் இடம் பெற்றிருந்தன. அதாவது முழுப்பாடலும் தரப்படாமல், முழு உரையும் தரப்படாமல் ஒரு பாடலையும் உரையையும் மூன்று அல்லது நான்கு பகுதிகளாகப் பிரித்து அமைக்கப்பட்டிருந்தது. இவர் முழுப் பாடலையும் தந்து உரையை அதன் கீழே தந்தார். உரை தரும் போது உரைப்போக்குக்கு ஏற்பப் பாடல் பகுதியின் முதல், இறுதிச் சொற்களைக் கொடுத்து உரைப்பகுதியினைப் பதிப்பித்துள்ளார்.

பாட்டின் முதற்குறிப்பைக் கூறி 'இன்னதுறை என்று கூறி' இதன்பின் பாட்டு வரும். இதனை மாற்றிப் பாட்டை அச்சிட்டு, அதன்கீழே இது இன்ன கிளவி எனக் கூறும் கருத்துரையை அமைத்துள்ளார்.

விசேட உரைகள் உரையின் முன்பின் இடை என மாறிமாறி இடம் பெற்றிருந்தன. இவர் உரையை அடுத்து விசேட உரையை வைத்தார்.

பாடலைக் கலிப்பாவின் உறுப்புகளான தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்ற அடிப்படையில் பகுத்துள்ளார். இவ்வுறுப்புகள் உரைகளில் மாறுபட்டு அமைந்திருந்தமையால், பல்வேறு பதிப்புகளை ஒப்புநோக்கிச் சரியான நிலையில் அமைத்துள்ளார். (கலி.பதி. 22)

இங்ஙனம் ஓரிடத்துக் கிடந்த வாக்கியத்தைப் பின்னோரிடத்தில் இடமாற்றி வைத்ததேயன்றி ஆசிரியர் மொழிநடையில் ஓர் எழுத்தையும் இவர் மாற்றவில்லை.

இடக்கரடக்கல் எனக் கருதப்படும் அல்குல் என்ற சொல் வரக்கூடிய பதினொரு இடங்களில் அச்சொற்குப் பதிலாக மகளிரின் பிறப்புறுப்புகளைச் சுட்டும் வேறு மொழிகளாக மாற்றி அமைத்துள்ளார். இதற்கு முக்கியக் காரணம் மாணவர்களும் பாடமாகப் பயில வேண்டிய இந்நூலில் இத்தகு மொழிகள் இருத்தலாகாது என்னுங் கருத்தேயாம் என்பர் மு. சண்முகம் பிள்ளை (1984, பாடவேறுபாடுகளும் பதிப்பாசிரியர்களும், ப. 61).

அவ்வாறு மாற்றியது குற்றமாயின் அதனை உலகம் மன்னிக்கும்படிப் பலமுறையும் பிரார்த்திக்கிறேன் என்று குறிப்பிடுகிறார். பாடமாற்றப்பட்டியையும் தந்துள்ளார். இடக்கரடக்கச் சொற்களைச் சிதைத்து அச்சிட்டதைப் பேரறிஞர் பலர் கண்டித்து எழுதியதாய் இது முறையன்று எனத் தெரிந்தார். இவர் தொல்காப்பியத்தை முன்பே பதிப்பித்திருந்த அனுபவத்தால் நச்சர் உரையில் கையாளப்பட்டு இருக்கின்ற தொல்காப்பிய நூற்பாக்களுக்கு அடிக்குறிப்புத் தந்திருக்கிறார்.

இலக்கிய நூல்களை முன்னர்ப் பதிப்பித்த அனுபவம் இன்மையாலும், பிற இலக்கியப் பயிற்சி இன்மையாலும் பயில்வதற்குக் கிட்டாததாலும் பிற இலக்கிய மேற்கோள்களை இவர் கையாளவில்லை (இரண்டு இடங்களில் அகநானூற்றுப் பாடல்களை மேற்கோள்களாகக் கொண்டு இருக்கிறார்).

ஏட்டுப் பிரதிகளைப் படித்துப் பரிசோதித்துப் பலவாறு ஆராய்ந்து வழுவின்றிப் பிரதி செய்கிற போது சில சந்தேகங்கள் தோன்றிவிடும். அதனைப் போக்கிக் கொள்ள உரியவர் கிடைக்காது மன உளைச்சலில் சிலநாள் வருந்திக் கொண்டே இருப்பார்கள். இவர் இலக்கியங்களை அறிந்திராத காலமது.

உரையாசிரியர் உதாரணச் செய்யுட்கள் தரும்போது அனைத்து இடங்களிலும் முழுப் பாடலைத் தரமாட்டார்கள். இத்தகைய பாடல்களைப் பற்றிய முழுவிவரங்களை அறிய தமிழகத்து அறிஞர் பலரைக் கலந்தாலோசித்தார். இம்முயற்சியில் இவர் சுவடியில் உள்ளதை அப்படியே தந்துள்ளதை

முன்னோர் மொழிபொருளே யன்றியவர் மொழியும்
பொன்னே போற்போற்றுதல்

வேண்டும். வேறாக வழிநூல், சார்பு நூல் செய்தோர்க்குங் கடனாவேன் அவர் நூலையே அச்சொரூபமாக எடுத்துப்

பதிப்பிப்போர் ஓர் அக்ஷரமாவது மாற்றுதல் பெருந்தவறென்பது யாவருக்கும் உடன்பாடே" என்று காட்டுகின்றார். இதன்வழி, பதிப்பில் மிகுந்த கவனம் செலுத்திப் பதிப்பித்துள்ளார் என்று தெரிகிறது.

பிற நூற்றுணிவிற்கு மாறுபட்டும் தற்கால வழக்கத்தை விரோதித்தும் சரியான அர்த்தம் புலப்படாமலும் சமுசயம் நிகழ்ந்த இடத்தும் எல்லாத் தேசத்துப் பிரதியும் ஒத்திருந்தன வற்றையும் யாம் சிறிதும் திருத்திப் பதிப்பித்திலேம். அவற்றைத் தம் மதத்தின்படித் திருத்துதல் அறிவுடையோர்க்கு இயல்பன்று என்கிறார். எனவே ஏட்டுச் சுவடிகளில் ஒன்றிலாவது காணப் படாத எதுவும் தாம் வெளியிடும் பதிப்பில் இடம்பெறக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார் எனத் தெரிகிறது. ஒரு பிரதியின் ஆதாரமாவது இல்லாமல் பாடபேதத்தைத் திருத்தவில்லை என்பதற்கு 'உண்கணீர், தூவற்' என்ற சொற்களை மாற்றாமல் அப்படியே தந்தமை மெய்ப்பிக்கின்றது.

இருந்தவண்ணம் பதிப்பித்ததை அன்றித் திருத்திப் பதிப்பித்தது இல்லை. எனினும் இதுவே உண்மைப் பாடமெனக் கொள்ள வேண்டுவதில்லை என்ற குறிப்பையும் வைக்கிறார்.

"தற்காலத்தில் தமிழ்நாடுகளில் வழங்கும் பிரதிகள் அனைத் திலும் இப்பொழுது யாம் அச்சிட்டு வெளிப்படுத்தும் ரூபம் மேலானதென்று கொள்வதேயன்றி, ஏட்டுப் பிரதியின் ஆதார மில்லாத யாம் ஒரு மொழியும் மாற்றிலேமாயினும் அனைத்து மாறுபாடும் திருத்தி ஆதிரூபங் காட்டுதல் இனி எத்துணை வல்லார்க்கும் அரிது.

ஆசிரியர் பிழை அல்ல, சுவடியிலுள்ள பிழை என உணர்ந்த வற்றில் சிலவற்றை, சூளாமணிப் பதிப்பில் திருத்தியுள்ளார். தம்முடைய இலக்கண இலக்கிய அறிவின் காரணமாகவும், சமண மதத்தினரின் உதவியைக் கொண்டும் ஏற்புடையதான சில மாற்றங்களைச் செய்திருக்கிறார். ஆசிரியர் செய்யாத பிழைகளை, இரண்டொரு எழுத்தையாவது, மொழியையாவது சந்தர்ப்பத் திற்கும் பொருளுக்கும் இயையுமாறு திருத்தினேன். அப்படி செய்யாவிட்டால் நூலில் சிறப்பு அழியும். சில பாடங்கள் பயன் தராமல் சில முன்பின்னோடும், பிற நூல்களோடும் விரோதப்பட்டு நிற்கும். எனவே திருத்தம் அவசியம் என்கிறார். சூளாமணிப் பதிப்பிற்கு முன்பு இத்தகைய திருத்தங்களை மேற்கொள்ளாத இவர் திருத்தஞ் செய்யாத பதிப்பினால் பயன் குறைவு என்று

கருதியதால் இதனைச் செய்யத் துணிந்திருக்கின்றார் (இளங்குமரன், தமிழ் வளர்த்த தாமோதரனார், ப. 59).

தமிழ் நூல்களை, தமிழ்நூல் வெளியீட்டாளர்களை ஆங்கிலம் கற்ற தமிழர்கள் அலட்சியம் செய்து வந்தனர். தமிழ்ப் புலவர்களும் பொறாமை காரணத்தால் எள்ளியும் எதிர்த்தும் வந்தனர். இத்தகு இன்னல்கள் இவருக்கும் இருந்ததை இப்பதிப்புரையில் பல இடங்களில் சுட்டுகிறார். மூல நூலில் உள்ளவாறு பதிப்பிக்காமல் பதித்தமை குறையென்பர். இது குறித்து இவர் பின்வருமாறு கூறுவர்.

"பிற்றைக் காலத்தனவாகிய இதிகாச புராணாதிகளிலும் சமய சாஸ்திரங்களிலும் மிக்க பயிற்சியுடையோரே தமிழின் தொன்மையையுஞ் சுயத்துவத்தையும் நன்குணராமல் அதனை வடமொழியினின்று உற்பத்தியாயிற்றென்பார். இலக்கணக் கடலாகிய ஈசானிய தேசிகரே இவ்வாறு மயங்கினரெனின் மற்றையோர் பிழைப்பது அதிசயமோ! அன்றியும் தமிழ் நூற்களுக்கான விலையவற்றுளொன்றேயாயினும் தனித் தமிழுண்டோ என்று கூறியதே அவர் இந்நூல்களிற் பயிலாமைக்குச் சான்றாம். ஆரிய சம்பந்தமின்றித் தமிழ்க் கிரந்தங்கள் கிடையாது என்றார். இது பிறவிக் குருடன் சூரிய சந்திரருண்மையை மறுத்ததொக்கும் . . . . இக்கலித்தொகையே இதற்குச் சான்று பகரும்" (கலி. பதி. 9).

ஈசான தேசிகரே தனித்தமிழில் ஒரு நூல் கூட இல்லை என்று கூறக் காரணம் அவருக்கு இந்நூல்கள் கிட்டாமையும், அவர் அவற்றைப் பயிலாமையும் என்கிறார். இதன் வழி நற்றிணை, அகநானூறு போன்ற சங்கத் தொகை நூல்கள் வடமொழிக் கலப்பற்றன என்று பதிலும் கூறுகிறார்.

நற்றிணை முதல் புறநானூறு ஈறாகக் கிடந்த தொகையனைத்தும் இப்பெருஞ் சிறப்பு வாய்ந்தனவாகவும் ஒன்றே ஆயினும் தனித்தமிழுண்டோ என்று ஈசான தேசிகர் கூறியது, இன்றைக்கு 500 வருசத்தின் முன் இவர் காலத்தே தானே இந்நூல்கள் கற்போர் கைக்கு அகப்படாது அருமையாய் மறைந்து விட்டன என்பதற்குச் சான்றாகுமெனில் பிழையாமா? பின்னை இக்காலத்தில் இதன் அருமை கூறல் வேண்டுவதென்? இவற்றைக் கற்றோரைக் காண்டலும் கார்த்திகைப் பிறையாயிற்று (ப. 6).

குற்றஞ்சாட்டுவார் கேள்விக்கணை தொடுப்பதால் அதற்குப் பதில் கூறுமிவர் தேவையற்ற குற்றச்சாட்டுகளுக்குப் பதில் கூறிக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் குறை கூறுவதற் குரிய தகுதி தனக்கிருப்பதே சிறப்பு என்று கருதியதை, "கீர்வாண நாயகனை மணந்தவர் வேட்கை வேளையில் மாத்திரம் அவனை இச்சித்துத் தன் மனவழியே நடந்ததினாலன்றோ அந்தப் பட்டி சோபியாமல் இழிவடைந்தாள்" என்று திட்டியுங், "காளமேகமே நீ எமது நாளை மேகம் போல் பொய்த்தனையே! சிறப்புத் தானுனக்கு" என்று புலம்பிய இன்னோரன்ன இழிமொழிகள் செறிந்தும் வருங்கூற்றுகளுக்கு யான் விடையெழுதுவேன் அல்லன். உலகத்தில் இப்போலியரால் திட்டப்படுவதற்குத் தகுந்த யோக்கியதையாவது உள்ளவனாக யான் மதிக்கப்பட்டதே எனக்குப் பெருஞ்சிறப்பென்று கொண்டனன் (கலி. பதி. 10) என்ற கூற்றின் வழி அறியமுடிகிறது.

பதிப்புகள் நன்கு அமையவேண்டும் என்ற நோக்கு இவரிடம் இருந்திருக்கிறது. இப்பதிப்பில் பிழைகள் இருப்பின் ஐம்பது பிழைகளைச் சுட்டிக்காட்டுபவர்களுக்கு ஒரு பிரதி நன்றிக் கடனாக அனுப்புவதோடல்லாது, பதிப்பித்திருத்த மொன்று உடனே வெளியிடக் காத்திருப்பதாகத் தொல்காப்பியம் பொருளதிகாரப் பதிப்புரையில் குறிப்பிடுவது இதனை உணர்த்தவும் செய்கிறது. பதிப்பு முயற்சியிலுள்ள நூல் அழியாமல் பாதுகாக்கப்படும் மகத்துவத்தையும் உணராமல் மிக எளிமையாக வாய்க்கு வந்தபடிப் பேசுதல் கூடாது என்பதை, இந்நூல் பதிப்புரையில், "யாவர்க்காயினுங் குறை கூற இஷ்ட முள்ளதாயின் அன்னோர் அச்சில் தோன்றாத நற்றிணை, பரிபாடல், அகம், புறம் என்றிவற்றிலொன்றைத் தாமாகப் பரிசோதித்து அச்சிடுவித்து அதன்மேற்குறை கூறும்படி வேண்டிக் கொண்டமை காட்டுகிறது.

போரில் துரியோதனன் தன் சேனாதிபதியுடன் சென்று முறையிட்டு, இனி அருச்சுனனோடு சண்டையிட யானாவது போகின்றேன் எனப் போனதை ஒப்ப யான் இத் தொழிலில் ..... ஆதலால் என்னைக் கடந்து சிற்சில வழுக்கள் அங்கும் இங்கும் கிடப்பின் என் குற்றம் ஏற்றல் மறைமுகத்தார் தருமமாகாது போவதினின்று நேர்முகத்தார் பெரிய அநியாயம் ஆம் என்று அறிக (ப. 26). நூல் பதிப்பிக்கும் துறையில் முதலில் ஈடுபடுபவர் யாராக இருந்தாலும் அதில் தவறு செய்வது இயல்பு என உணர்த்துகிறது.

சி.வை.தா. பதிப்பித்ததைப் பற்றி டாக்டர் அ. சிதம்பர நாதன் பின்வருமாறு கூறுகிறார்.

"பிள்ளையவர்கள் பதிப்பித்தவற்றுள் பெரும்பாலானவை இன்னும் ஏற்றுக் கொள்ளக் கூடியவையாய் இருத்தல் ஒன்றே இவர் புலமைக்குச் சான்று. நூலை ஏட்டுப் பிரதிகளின் போக்கிலே விடாமல் அறிவு துணையாக வரிசைப்படுத்தியும், கோவைப்படுத்தியும் பதிப்பித்த பெருமை இவர்க்கே உரியது . . . . . ஏட்டிலே பாட்டு முழுதும் எடுத்தவுடன் படித்துப் பார்ப்பதற்குத் தக்க முறையில் பதிப்பித்தார். ஏட்டில் விசேடவுரைகள் சில பாட்டினுரைக்கு முன்னும் சிலவற்றின் பின்னுமாக நியதியற்றுக் கிடந்தவற்றை ஒரு வரிசைப்படுத்திப் பின்னரே பதிப்பித்தார். இவரது நோக்கம் அடியோடழிந்து போகும் தறுவாயில் உள்ள பழைய நூல்களைப் பாதுகாப்பது ஆதலின் நூலைத் திருத்த முற்படவில்லை. இயன்ற அளவு பண்டைய வடிவைப் பெறச் செய்வதும், இயலாதவிடத்து இருந்த வண்ணம் உலகிற்கு ஒப்பிப்பதுமே இவர் கடனாகக் கொண்டார்.

ஓலைச் சுவடிகளை நூலாக்கம் செய்யக் கடுமையான உழைப்புடன், அருமையான தெய்வத்திருவருளும் இருந்தால் தான் இப்பணி எளிதில் முடியும் என எண்ணியது தெரிகின்றது.

சுவடியிலிருந்து அச்சுநூல் உருவாக்குதல் என்ற தமிழ்ப் பணியில் ஆழங்கால்பட்ட முன்னோடிகளுள் சி.வை. தாமோதரம் பிள்ளையும் ஒருவர். இவரது கலித்தொகைப் பதிப்பு ஒப்பியல் நோக்கு, பாடபேத நோக்கு, கருத்து முரண்நோக்கு, புதியன கூறுதல் என்ற வகையில் தமிழின் தொன்மைச் சிறப்பையும், அக்கால விவாதத்திற்குரிய செய்திகளைத் தனக்குரிய விளக்கத்தோடும் தந்திருப்பது நூலுக்குரிய தனிச்சிறப்பாகும்.

சுவடியில் உள்ளவற்றை அச்சுக்குக் கொண்டு வந்த போது பதிப்புரையே இல்லாமல் வந்த நூல்களும் உண்டு. சுவடிப் பதிப்பிற்கு ஆராய்ச்சி நோக்கில் அரிய பதிப்பு முன்னுரைகளை எழுதிச் சுவடிப் பதிப்பை ஆய்வு நிலைக்கு இவர் உயர்த்தினார்.

பதினொரு நூல்களை அச்சில் பதிப்பித்த இவர் வீரசோழியம், இலக்கண விளக்கம் முதலான ஆறுபதிப்புகளுக்கு அரிய பதிப்பு முன்னுரைகளை எழுதியுள்ளார். இவற்றுள் கலித்தொகைக்குத் தான் 34 பக்கங்களில் மிக நீண்ட பதிப்புரையை எழுதியுள்ளார். இவரது மற்ற பதிப்புகளை விட இந்நூல் சிறந்த ஆய்வுப் பதிப்பாக இருக்கிறது.

## துணை நூல்கள்


1. **கலித்தொகை,** இ.வை. அனந்தராமையர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை, 1984.
2. **தமிழ் வளர்த்த தாமோதரனார்,** புலவர், இரா. இளங் குமரன், கழக வெளியீடு, சென்னை, 1991.
3. **நல்லந்துவனார் கலித்தொகை,** நச்சினார்க்கினியர் உரை யுடன், Printed at Scottish by Graves, சென்னை 1887.
4. **பழந்தமிழ்ப் பதிப்புகள்,** ந. விசாலாட்சி, சரசுவதி பதிப்பகம், சென்னை, 1990.
5. **ஸ்ரீமான் ராவ்பகதூர் வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் சரித்திரம்,** முனுசாமி முதலியார் (பதி.), சென்னை, 1934.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
## சென்னை - 600 113
# அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| **வா.கீ.ச. கலாநிதி கி.வா.ஜகந்நாதன்** | **60.00** |
| நாசுதிராதிக்-ஞாலமுதன்மொழிஆய்வுகளுக்குப் பாவாணர் தரும் ஒளி | 35.00 |
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 901 - கி.பி. 1300 | 100.00 |
| தொல். பொருள். (அகம்-புறம்)-ஆங்கில மொழிபெயர்ப்பு | 50.00 |
| தமிழ் ஆய்வு இதழ்கள் | 50.00 |
| வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள் | 130.00 |
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 1851 - 2000 | 180.00 |
| இதழாளர் பெரியார் | 160.00 |
| மகாவித்துவான் ரா. ராகவையங்கார் | 30.00 |
| தமிழக வானவியல் சிந்தனைகள் | 35.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள்-நாட்டுப்புறவியல்,கலை,பண்பாடு | 90.00 |
| தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 200.00 |
| வாழிய செந்தமிழ் | 140.00 |
| பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம் | 40.00 |
| தமிழக எல்லைப் போராட்டங்கள் | 60.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - I | 90.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - II | 90.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - III | 80.00 |
| தொல்காப்பியம்-சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும் | 200.00 |
| தொல்காப்பியம்-பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 325.00 |
| தொல்காப்பியம் - பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும் | 300.00 |
| Economic Heritage of the Tamils | 115.00 |
| மலேசியத் தமிழரும் தமிழும் | 100.00 |
| மொழி, சமய, சமுதாயத் தளங்களில் பாவாணர் பங்களிப்பு | 50.00 |
| தமிழ்ப் புனைகதைகளில் உளவியல் | 35.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - தொல்லியல், வரலாறு, சமூகவியல் | 100.00 |
| கவிதையியல் | 50.00 |
| பண்பாட்டு நோக்கில் திருமுறைகள் | 30.00 |
| கதைப் பாடல்களில் கட்டுப்பாட்டு மீறல்கள் | 95.00 |
| Bibliography on Translations | 175.00 |
| சங்க இலக்கிய ஆய்வு தெபொமீயும் மேலை அறிஞரும் | 60.00 |
| அறந்தாங்கித் தொண்டைமான்கள் | 45.00 |
| திராவிட மொழி இலக்கியங்கள் | 200.00 |
| **தமிழில் தத்துவ நூல்கள்** | **40.00** |

---

**606 சி.வை. தாமோதரம்பிள்ளை** **40.00**